# காட்டு வழிதனிலே



பெ.தூரன்

# காட்டு வழிதனிலே

For more ebooks visit: https://getmyebook.in/

# கவிஞர் பெரியசாமித்தூரன்



**1961**

**24 பிப்ரவரி, 2024 அன்று விக்கிமூலத்தில் இருந்து பதிவிறக்கப்பட்டது**

For more ebooks visit: https://getmyebook.in/




**உலகளாவிய பொதுக் கள உரிமம் (CC0 1.0)**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

For more ebooks visit: https://getmyebook.in/

## பதிப்புரிமை அற்றது

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டு முயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

## Universal (CC0 1.0) Public Domain Dedication

This is a human readable summary of the legal code found at

For more ebooks visit: https://getmyebook.in/

https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community

( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

---

# காட்டு வழிதனிலே

For more ebooks visit: https://getmyebook.in/

# பெ. தூரன்

விற்பனை உரிமை:

For more ebooks visit: https://getmyebook.in/

பாரி நிலையம்
59, பிராட்வே, சென்னை 1

இரண்டாம் பதிப்பு-ஆகஸ்டு, 1961 உரிமை பதிவு

விலை ரூபாய் 1-50

சுதந்திர நிலைய
வெளியீடு

For more ebooks visit: https://getmyebook.in/

மாருதி பிரஸ், 83, பீட்டர்ஸ் ரோடு, சென்னை -14.

# முன்னுரை

காட்டு வழியிலே ஒரு கவர்ச்சி இருக்கிறது. அங்கே கவிதைக் கன்னி இன்ப நடம் புரிகின்றாள். தனியாக அந்த ஒற்றையடிப் பாதையிலே நடந்து இயற்கையோடு ஒன்றியவர்கள் அதில் திளைத்து உள்ளக் கிளர்ச்சியும் எழுச்சியும் பெறுகிறார்கள்.

சிறந்த கவிதைகளையும், பெரியார்களது உயர்ந்த சிந்தனைச் செல்வங்களையும் துய்க்கும்போதும் இந்த உள்ளக் கிளர்ச்சி ஏற்படுகிறது.

மேலே கூறிய இரண்டு செயல்களின் விளைவாகவே இந்நூலில் அடங்கியுள்ள கட்டுரைகள் தோன்றின.

உள்ளத்தின் எழுச்சியிலே குமுறியெழுந்த எண்ணங்களைக் கலையழகோடு தீட்டுவது இலக்கியக் கட்டுரைகள். நான் முயன்றிருக்கிறேன். அம் முயற்சியின் வெற்றி. எல்லையை இக் கட்டுரைகளைப் படிக்கும் நீங்கள்தான் முடிவு செய்ய வேண்டும்.

பூவீன் சிரிப்பு என்ற தலைப்பிலே ஒரு கட்டுரைத் தொகுதி வெளியீட்டேன். அதை மக்கள் ஆவலோடு

For more ebooks visit: https://getmyebook.in/

படித்துப் பாராட்டினார்கள். அவ்வாறு பாராட்டியிராவிட்டால் மற்றொரு தொகுதி வெளியிடவேண்டுமென்ற எண்ணமே எழுந்திராது. ஆங்கில இலக்கியக் கட்டுரைகளின் பாணியிலே புதிய முறையிலே கட்டுரைகள் எழுதியதை மெச்சிப் பாராட்டியதற்காக எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளவே இம்முன்னுரை எழுதுகிறேன். இதற்குமேல் வேறொன்றும் நான் இங்குக் கூறவேண்டியதில்லை என்று தோன்றுகிறது. காட்டு வழியிருக்கிறது; கவிதையும் ஆழ்ந்த சிந்தனையைத் தூண்டும் கருத்துக்களும் இருக்கின்றனவா என்று நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள். வணக்கம்.

---

# பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| 1. | காட்டு வழிதனிலே | .... | 5 |
| 2. | இளமை | ... | 15 |
| 3. | கவிதை என் காதலி | ... | 19 |
| 4. | காந்திய அடிப்படை | ... | 25 |
| 5. | மலையேறும்போது | ... | 34 |
| 6. | பாரதியின் நகைச்சுவை | ... | 38 |
| 7. | தலையெழுத்து | ... | 47 |
| 8. | நிப்பான் நாட்டுக் கவிதை | ... | 53 |
| 9. | அடிகளின் தோற்றம் | ... | 61 |
| 10. | மதம் தேவையா? | ... | 70 |
| 11. | மாலைப் | | 80 |


For more ebooks visit: https://getmyebook.in/

பொழுதினிலே ...
12. மௌனப் பெரும் பேச்சு ... 87
13. சிறுபாணாற்றுப் படை ... 92
14. பாரதி வாக்கு ... 101
15. புகழ முடியுமா ? ... 109

---

For more ebooks visit: https://getmyebook.in/

# காட்டு வழிதனிலே

இரண்டு செயல்களிலே எனக்கு அளவு கடந்த விருப்பமுண்டு. நல்ல கவிதைகளைப் படிப்பது ஒன்று; தனியாக உலாவச் செல்வது மற்றொன்று. இரண்டையும் ஒரே காலத்தில் சேர்த்துச் செய்ய முடியுமானால் அது எனக்குப் பாலில் தேன் கலந்து ஒன்றாய்க் கிடைத்தது போல.

அந்திநேரத்திலே இளஞ் சோளப் பயிர்கள் மெதுவாகக் காற்றிலே ஒல்கி அசைந்து பசுமையான அலைகள் எழுந்தாடுவதுபோல அழகிய காட்சியளித்து இன்பத்தில் ஆழ்ந்திருக்கும்போது தோட்டங்களின் வழியாகத் தனிமையிலே சென்றால் வாய் தானகவே ஏதாவது ஒரு கவிதையை முணுமுணுக்க தொடங்கி விடுகிறது. தனிமைக்கும், இயற்கைக்கும், கவிதைக்கும் என்னவோ நெருங்கிய தொடர்பு இருக்க வேண்டும். இல்லாவிட்டால் இயற்கை வெளியிலே கிடைக்கிற தனிமைக்கு அத்தனை கவர்ச்சி இருக்க முடியுமா? அந்த இடத்திலே கவிதையானது இதழ் அவிழ்ந்த முல்லையின் மணம் போலத் தானாகவே தோன்ற முடியுமா?

மாடுகளைப் புலத்திலே மேய விட்டுவிட்டு மர நிழலிலே அமர்ந்து அவற்றைக் கவனித்துக்கொண்டிருக்கும் சிறுவன்கூட ஏதோ. ஒரு நாடோடிப் பாடலைப் பாடத் தொடங்குகிறான். அவனையும் இயற்கையே கவர்ந்து தன்னை மறக்கச் செய்கின்றதென நான் நம்புகிறேன.

For more ebooks visit: https://getmyebook.in/

மாலைப் பொழுதில் ஒருநாள் நான் கழனிகளிடையே செல்லும் ஒற்றையடி வழிதனிலே நடந்து கொண்டிருந்தேன். தனிமையைத் துய்ப்பதற்காக அவ்வாறு நான் அடிக்கடி செல்வதுண்டு. தனிமை என்றால் மானிடக் கூட்டம் இல்லை என்பதுதான் பொருள்; மற்றபடி நான் தனியாகச் செல்லுவதே இல்லை. காட்டு வெளியிலே எனக்கு எத்தனையோ தோழர்கள் உண்டு.

அழகாகப் பேசித் துணையோடு ஒய்யாரமாக இரை தேடி விட்டில் பிடித்து நடக்கும் மைனாக்கள், குடுகுடு வென்று ஓடிச் சிதறிக் கிடக்கும் தானிய மணிகளைப் பெறுக்கும் மணிப் புறாக்கள், வேலியின் மேலிருந்து அண்ணாந்து பார்க்கும் ஓணான், நீலமேனி விளங்க நீண்டு படுத்திருக்கும் மலை, சிறு சிறு கூழாங் கற்களே உருட்டி விளையாடி வரும் சிற்றோடை இவையெல்லாம் தனிமையை நன்கு துய்க்க எனக்குக் கிடைத்த தோழமைப் பெருஞ்செல்வங்கள். உயிர்ப் பரிணாமத்தின் உச்சியிலே இருக்கிற நம்முடைய இனம் மட்டும் கிடையாது. இயற்கையைத் துய்க்கச் செல்லுகிற இடத்திலும் பல மனிதர்கள் வாழ்க்கைச் சுமையையெல்லாம் மூட்டை முடிச்சோடு கொண்டு வந்து அவற்றைப் பற்றித் தொணதொணப்பார்கள். சிலர் கடற்கரைக்குச் செல்லுவார்கள். சுருண்டு சுருண்டு நிமிர்ந்து எழுந்து வெண்ணுரை மகுடமிட்டு மடங்கித் தடாரென்று விழுந்து சலிப்பின்றி, ஓய்வின்றி, உறக்கமின்றிப் புரண்டுகொண்டிருக்கும் அலைகளின் அழகும், அகன்று விரிந்து நீல மணிப் பரப்பாய்க் கிடக்கும் கடலின் காம்பீரியமும் அவர்கள் உள்ளத்தைக்

For more ebooks visit: https://getmyebook.in/

கவரா; அவற்றிலே அவர்கள் மனம் செலுத்த மாட்டார்கள். உத்தியோக ஊழல்கள், ஊர் வம்புகள், குடும்பத் தொல்லைகள் இவற்றையெல்லாம் அவர்கள் கூடவே தூக்கிக்கொண்டு வந்து விடுவார்கள். நத்தைக்குக்கு வீட்டுச் சுமை எப்பொழுதும் முதுகின் மேலே; அதுபோல அவர்களுக்கு வாழ்க்கைச் சுமை. நீலமேனி நெடுஞ் சாகரத்தை அவர்களுடைய கண்ணிலே படாமல் காலமாயைக் கடுஞ் சாகரம் மறைத்துவிடும். வாழ்க்கையை ஒரு நொடி மறந்துவிட்டு இயற்கை இன்பத்தை நுகரலாகாதா? அவர்களால் முடியவே முடியாது.

எனக்கு இப்படிப்பட்ட மனிதர்களைப் பிடிக்கிறதே இல்லை. உலாவப் புறப்படும்போது அவர்களை நான் பக்கத்தில் அணுகவிடமாட்டேன். ஆனால், சில வேளைகளிலே எப்படியாவது ஒன்றிரண்டு நத்தையர்கள் எதிரிலே வந்து தொலைவார்கள். அது மட்டுமல்ல; "ஏன் தனியாகப் போகிறீர்கள்? யாரும் துணை கிடைக்கவில்லையா? நான் வருகிறேன்" என்று சொல்லிக்கொண்டே கூட நடக்கத் தொடங்குவார்கள். "இல்லை, நீங்கள் தொல்லைப்பட வேண்டாம்" என்று கூறுவதற்குள்ளே, "என்ன, இந்த வாரத்து ரேஷன் அரிசியைப் பார்த்தீர்களா?" என்று ஏதாவது பேச்செடுத்து விடுவார்கள். பிறகு அவர்களைத் தப்பவே முடியாது. ஒட்டுமுள் பார்த்திருக்கிறீர்களா? வேட்டியில் ஒட்டிக்கொண்டதே என்று காட்டு வழிதனிலே எடுக்கப் போனால் கையில் ஒட்டிக்கொள்ளும்; அக்கையை விடுவிக்க மற்றொருகையை பயன்படுத்தினால் அதில பிடித்துக்

For more ebooks visit: https://getmyebook.in/

கொள்ளும். விடவே விடாது. அதை ஒத்தவர்கள் இந்த மனிதர்கள்.

இயற்கை இன்பத்தைச் சுவைப்பதற்குப் புள் விலங்களும், மரஞ்செடி கொடிகளும், மலர்களும், ஓடைகளும், குன்றுகளுமே ஏற்றவை. மனிதன் மட்டும் இயற்கைக்குப் புறம்பானவனா, அவனும் இயற்கையில் ஒரு பகுதிதானே என்று நீங்கள் கேட்கலாம். அவன் புறம்பானவன் என்று நான் கூறவில்லை. ஆனால், அவன் தனது செயற்கை வாழ்க்கையால் தன்னை அப்படிச் செய்து கொள்ளுகிறான் என்பதே என் குற்றச்சாட்டு. அவன் தனியாகத் தினமும் ஒரு நாழிகைப் பொழுதாவது தன் நாகரிகச் செயற்கை வாழ்க்கையை மறந்து இயற்கையோடு அமைதியாக ஒன்றியிருந்தால்தான் அவனுக்கு உய்வு பிறக்கும்-அவனே இன்று எதிர்த்து நிற்கும் துன்பங்கள் ஒழியும் என்பது என்னுடைய திடமான நம்பிக்கை.

ஓடுகின்ற ஊற்று நீரிலே உயர்ந்த அறிவு நூல்களைக் காணலாம் என்று ஆங்கிலக் கவிஞன் ஒருவன் தந்து கூறியதில் உள்ள உண்மையை இயற்கையோடு நட்புரிமை பூண்டு தனியாக உறவாடியவர்களே அறிவார்கள்.

நான் நத்தை நண்பர்களுக்கெல்லாம் தப்பித்துக் கொண்டு காட்டு வழியிலே எங்கே போகிறேன் என்கிற எண்ணமே இல்லாமல் அன்று நடந்துகொண்டிருந்தேன். மேல் வானத்தை முத்தமிட்டுக் கொண்டு படுத்திருக்கும் நீல மலைகளின் பின்னால் பகலவன் தன் பொற்கிரணங்களைச் சுருட்டிக் கொண்டு மறையத்

For more ebooks visit: https://getmyebook.in/

தொடங்கினான். பூங்காவியைக் கரைத்து அதிலே ஒளி கூட்டி எங்கும் பூசியது போலத் தோன்றிய செவ்வானம் உலகிற்கு ஒரு புதிய வனப்பைத் தந்து கொண்டிருந்தது.

தொலைவிலே பசும்புல்லை மேய்ந்து கொண்டிருந்த பசு ஒன்று வீட்டிலே கட்டுண்டு கிடக்கும் தன் இளங் கன்றை நினைந்து மடி சுரந்து அம்மா என்று கூப்பிடும் ஓசை, அமைதியைப் பெருக்கிக் கொண்டு காற்றில் மிதந்து வந்தது. எங்கோ ஒரு நாய் குரைத்தது. காக்கைகள் கூட்டங் கூட்டமாகத் தம் தங்குமிடங்களுக்குப் பறந்து சென்றன. அவற்றைப் பார்த்தால் இரவு தன் கருஞ்சிறு ஒற்றர்களை ஏவி உலகை வளைத்துக் கைப்பற்றிக்கொள்ள ஏற்ற தருணம் வாய்த்துளதா என்று வேவு பார்த்து வர அனுப்பியவைபோல் காண்கின்றன.

கழனிப் பரப்பினிவே, மாலை மயங்கும் வேளையிலே இயற்கையில் ஒரு பேரமைதி பொங்கிக் கொண்டிருக்கிறது. ஆடுமாடுகளைப் பட்டிக்கு ஓட்டிக்கொண்டு போகும் இடைப்பையன் பாடுகின்ற நாடோடிப் பாட்டு இந்த அமைதியைக் குலைப்பதே இல்லை.

இவற்றிலெல்லாம் நெஞ்சு செலுத்தி மெய்ம் மறந்து நடக்கிறபோதே என் வாய்தானாகவே ஒரு கவிதையை முணுமுணுத்துக் கொண்டிருந்தது.

> மாலைப் பொழுதில் ஒருமேடை மிசையே
> வானையும் கடலையும்
> நோக்கியிருந்தேன்

For more ebooks visit: https://getmyebook.in/

என்று தொடங்கும் பாரதியாரின் பாடல் அது. பாடிக் கொண்டிருக்கிறேன் என்கிற நினைப்பு உதயமானபோது,

ஆங்கப் பொழுதிலென் பின் புறத்திலே
ஆள்வந்து நின்றெனது கண்மறைக்கவே

என்கிற அடிகளை நான் உச்சரித்துக் கொண்கொண்டிருந்தேன்.

மாலைப் பொழுதிலே வானையும் கடலையும் நோக்கியிருந்த வேளையில் காதலியான கண்ணம்மா பின்புறமாக யாரும் அறியாமல் வந்து தம் கண்ணைப் பொத்துவதாகக் கற்பனை செய்து பாரதியார் அழகான கவிதை எழுதியிருக்கிறார்.

அவர் சட்டென்று கண்ணை மறைத்த கைகளைத் தீண்டினாராம்; அதே நொடியில் வந்தது யாரென்று அவருக்குப் புலப்பட்டுவிட்டது.

பாங்கினில் கையிரிரண்டும் தீண்டியறிந்தேன்
பட்டுடை வீசுகமழ் தன்னிலறிந்தேன்
ஓங்கி வளர் உவகை ஊற்றிலறிந்தேன்
ஒட்டும் இரண்டுளத்தின் தட்டிலறிந்தேன்
வாங்கி விடடிகையை ஏடி கண்ணம்மா
மாயம் எவரிடத்தில் என்று மொழிந்தேன்.

தனிமையிலே, காட்டு வழியினிலே இவ்வடிகளைச் சுவைத்துச் சுவைத்துப் பாடுகின்றபோது எனக்கு ஓர் உணர்ச்சி உண்டாயிற்று. என்னையும் அந்த எல்வையில் கட்டிப் பிடிக்க யாரோ பின்புறமாக வருகிறது போலத் தோன்றியது.

For more ebooks visit: https://getmyebook.in/

இருள் அரசி தன் கரும் போர்வைகளை ஒவ்வொன்றாக உலகின்மேல் வீசிக்கொண்டிருக்கின்றாள்; பொருள்களெல்லாம் மங்கித் தோன்றுகின்றன. மலையின் நீல நிறம் கறுப்பாக மாறி இருளோடு இணையத் தொடங்கிற்று. மரங்கள் இருட்டுக் குவியல்களாக மாறின. அழகுநாக் குருவிகள் கூட்டங்கின. கனத்த குரலில் ஒன்றிரண்டு வார்த்தை பேசிய செம்போத்தும் நாவொடுங்கியது.

யாரோ பின்னால் என்னைத் தொடர்ந்து வருகின்றது போன்ற உணர்ச்சி ஓங்கிக்கொண்டே இருந்தது. பாரதியார் பாட்டிலுள்ள உணர்ச்சியின் பிரதிபலிப்போ அல்லது! உண்மையில் யாராவது வருகிறார்களோ தெரியவில்லை. சட்டென்று பின்னால் திரும்பிப் பார்த்தேன். அங்கு யாரையும் காணோம்.

இருள் செறிந்து படிகின்ற சந்தியின் இறுதியிலே மலைப் பாதைகளிலும் காட்டு வழிகளிலும் தனிமையாக இயற்கையோடு ஒன்றி உலாவுகின்றபோது யாரோ ஒருவர் பின்னால் தொடர்ந்து வருவது போன்ற இத்தகைய உணர்ச்சி ஏற்படுகிறது. கருநீலப் பட்டுடுத்தித் தன் முன்தானையால் அவனியை அணைத்து உறக்கத்தில் ஆழ்த்தி ஓய்வு கொடுக்க வருகின்ற இரவன்னையோ அல்லது நாள்தோறும் புதிய புதிய மலர்களை அணிந்து மிளிரும் காட்டாற்றுத் தாவணியை வளைத்து வளைத்து அநாயசமாகத் தன் உடம்பின்மேல் வீசிக்கொண்டு தோன்றும் வனதேவதையோ—யார் என்று எனக்குத் தெரியாது. ஆனால், ஒவ்வொரு தடவையும் மறைந்து பின்

For more ebooks visit: https://getmyebook.in/

தொடரும் அம் மங்கை அருகில் இருப்பதை நான் உணர்கிறேன்.

திரித்த நுரையி னிடை நின்முகங்கண்டேன்
சின்னக் குமிழிகளில் நின்முகங் கண்டேன்

என்று கவிஞர் பாடியதுபோல அவளுடைய முகத்தின் சாயலை நான் எங்கும் காணமுடிகிறது. அவள் ஏன் என்னே இப்படிப் பின் தொடர்கிறாள். ஏன் எனக்கு மோனத் துணைவியாக வருகிறாள் என்பதை அறிய முடியவில்லை. ஆனால், அவளுடைய சூக்குமத் தோழமையிலே என் உள்ளம் புனிதமடைகிறது; வாழ்க்கை விவகாரங்களிலே நாளெல்லாம் உழன்றுபட்ட சிறுமைகளும், பெற்ற புன்மை உணர்ச்சிகளும் நீங்கி வானில் பறக்கத் தொடங்குகின்றது; வானில் பறக்கின்ற நிலையிலும் அவளுடைய தோழமையை ஆங்கு நன்கு துய்க்கின்றது. இவற்றை நான் தெளிவாக உணர்கின்றேன்.

இயற்கை அன்னையின் மடியில் தவழும் உலக மக்கள் அனைவரும் ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் அன்ரறோ? அவ்வாறிருக்கக் குறுகிய பிரிவினைகள் செய்துகொண்டு சாதியென்றும், சமயமென்றும், நிறமென்றும், நாடென்றும் எல்லை வகுத்து, நலத்திற்காக எழுந்த மெய்நெறிகளையும் சரியாகப் புரிந்து கொள்ளாது வாதனைப்பட்டு மடிகின்றோமே, என்ன சிறுமை என்கிற எண்ணம் அப்பொழுது

For more ebooks visit: https://getmyebook.in/

எழுகின்றது. அறிவைப் பெற்றுள்ள மனிதன் ஏன் இவ்வாறு தானே உண்டாக்கிக் கொண்ட விலங்குகளில் மாட்டிக்கொண்டு துன்பக் குழியில் வீழ்ந்து தவிக்கிறானோ தெரியவில்லை. அவனுடைய வெறுப்பும் தந்நலமும் வானில் எழுந்து பறக்கக்கூடிய உள்ளத்தின் சிந்தனை ஆற்றலைக் கூடக் கட்டுப்படுத்தி விடுகின்றனவே, என்ன விந்தை! இதை உணராத மனிதன் "இயற்கையில் எங்கும் சுயநலந்தான் தாண்டவமாடுகிறது; விட்டில் பூச்சியை மைனாக் குருவி பிடிக்கிறது; மைனாவை வல்லூறு பிடிக்கிறது; வல்லூறை இராசாளி பிடிக்கிறது. இவ்வாறு எங்கும் சுயநலந்தான்" என்று பேசித் தன் அறிவின் திறமையைப் பற்றிப் பெருமையடைந்து கொண்டு, தனது குறைகளையும் சிறுமைகளையும் ஒழிக்க முயலாது திரிகின்றான். நம் உள்ளத்தை உயர்த்தி உலகமே ஒன்றெென உணரும் பெரு நிலைக்குச் செலுத்தக் கூடிய பேராற்றல் இயற்கைக்கு உண்டென்பதை மனிதன் அறிந்துகொள்ள விரும்புவதில்லை. அவனுக்குத் தனிமையின் இனிமை கசக்கின்றது. தனிமையின் மென்பேச்சு, இயற்கையின் வண்ணமறைச் சிறுகுரல் அவன் செவியில் விழுவதில்லை. இயற்கையில் திளைத்த கவிஞர்கள் அதை அறிந்து கூறியிருக்கிறார்கள். அதை ஒவ்வொருவனும் தன் உள்ளத்தில் உணரும்படியாக இயற்கையோடு உறவாடுவதை உணவருந்துவது போன்ற முக்கியமான செயலாகக் கைக்கொள்ள வேண்டும்.

For more ebooks visit: https://getmyebook.in/

“இயற்கை வாழ்விற்குத் திரும்பிப் போ” என்று பலர் அறிவுறுத்தியிருக்கிறார்கள். அதற்கு முதற் படியாக இயற்கையோடு தனிமையில் ஒவ்வொரு நாளும் ஒரு சிறு நாழியாவது உறவாடு என்று நான் கூறுகிறேன். அப்படி உறவாடும் போது வாழ்க்கைத் தொல்லைகள் அனைத்தையும் மறந்துவிட்டுக் கவிதையை மட்டும் மறவாதிருக்கவேண்டும். ஏனெனில் கவிதைதான் இயற்கைக் கன்னியோடு நம்மைச் சேர்த்து வைக்கும் இன்பத் தோழியாகும்.

கவிதையும், காட்டுத் தனி வழியும் மனிதனை உயர்த்தும் ஆற்றல் வாய்ந்தவை. மக்களின் இன்றைய வாழ்க்கையில் எழுந்துள்ள இடர்ப்பாடுகளைக் களைந்தெறிவதற்கு இடையூறாக நிற்கும் குறுகிய தந்நல நோக்கத்தை மாற்றிப் பரந்த மனப்பான்மை கொள்ள அவை உதவுகின்றன. அவற்றை நாம் ஒரு நாளும் புறக்கணிக்கலாகாது.

For more ebooks visit: https://getmyebook.in/

# இளமை

இளமை ! அந்தச் சொல்லிலே ஒரு மந்திர சக்தி இருக்கிறது. அளவற்ற பலம், அளவற்ற நம்பிக்கை, கரை கடந்த உற்சாகம், அஞ்சா நெஞ்சம், மவர்ந்து வழியும் அழகு—இவற்றிற்கெல்லாம் இருப்பிடமானது இளமையல்லவா?

இளமை என்றவுடன் கவிஞனின் உள்ளம் பொங்குகிறது. அதன் மோகன சக்தியிலே கவிதை பெருக்கெடுத்தோடுகிறது; கலை தழைத்தோங்குகிறது. இளமையே கவிஞனுக்கு உயிர் கொடுப்பது; கலைஞனுக்கு அமுதாவது. இளமையே கற்பனையின் ஊற்று ; இளமையே எண்ணத்தின் உயிர்நாடி.

ஒரு நாட்டிற்கு ஒளி தருவது இளமை. இளமை மார்தட்டி ஆர்த்தெழுந்தால் ஆகாததும் உண்டோ? எந்த நாட்டு வரலாற்றை வேண்டுமானாலும் ஆராய்ந்து பாருங்கள். அந்த நாட்டு வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் இளமையே முக்கிய காரணமாக இருந்திருக்கும். ஆயிரக்கணக்கான இளைஞர்களின் சேவையாலும், தியாகத்தாலுமே நாடு முன்னேற்றமடைகிறது.

இளமை கணக்குப் பார்க்காது. செயலில் இறங்குவதற்கு முன்பே இலாப நஷ்டத்தைப்பற்றி எண்ணிக் கொண்டிருக்காது; அதன் உள்ளத்தை ஏதாவதொன்று தொட்டுவிட்டதானால், அதன் கற்பனையை ஏதாவதொன்று சுடர்விட்டெழச் செய்து

For more ebooks visit: https://getmyebook.in/

விட்டதானால், அதற்காக எதையும் பலி கொடுக்கத் தயாராக இருக்கும். தயக்கமோ, சோர்வோ, பின் வாங்குதலோ இளமையின் இயல்பல்ல. ஏறமுடியாத மலைச் சிகரத்தின் மீது ஏறுதல், தாண்ட முடியாத மலைத் தாண்டுதல், எட்டிப் பிடிக்க முடியாத வானத்தை எட்டிப் பிடித்தல்—இவைகளே இளமையின் ஆர்வமிக்க முயற்சிகளாகும். “எண்ணித் துணிக கருமம்” என்பது மறை மொழியாயினும், எண்ணாது துணிவது இளமையின் இதயத் துடிப்பாகும்.

இமைதான் காதல் வளர்கின்ற பருவம். அதுவே கனவு காண்கிற காலம். எதிர்காலம் அதனுடைய நோக்கில் ஒளியுடன் விளங்குகின்றது. இளமையின் கண்களில் எல்லாம் ஒரே பசுமைதான்.

அழகும் இன்பமும் உயிர்த்துடிப்பும் விளங்குமிடத்திலெல்லாம் அவற்றை இளமையின் வடிவங்களௌனக் காண்கிறேம். அழகும் இன்பமும் உயிர்த் துடிப்பும் நிறைந்துள்ள தமிழைக் கன்னித் தமிழ் என்கிறோம். என்றும் இளமையோடு, அழகோடு, ஆற்றலோடு, உயர்வோடு விளங்கும் இறைவனை இளமைக் கோலத்தில் தமிழ் நாட்டார் போற்றுகிறார்கள். முருகு என்ற சொல்லே இளமை, அழகு முதலிய தெய்வத் தன்மைகளைக் குறிக்கின்றது.

இளமையின் உள்ளம் எவ்வாறு துடிக்கிறதோ அதுபோலவே ஒரு நாட்டின் எதிர்காலம் உருவடையும். ஆதலால் இளைஞர்களைத் தன் வழியிலே திருப்ப முயலவேண்டும் என்று அரசியல்வாதி சூழ்ச்சி பேசுகிறான். தன் சுயநலத்திற்கும் அதிகார வெறிக்கும்

For more ebooks visit: https://getmyebook.in/

இளமையைப் பலி கொடுக்க அவன் தந்திரம் செய்கிறான். வேகம் நிறைந்த இளமை அதிலே சில சமயங்களில் வீழ்ந்துவிடுகிறது. ஆனால், இளமைக்குத் தோல்வி என்பது கிடையாது. ஒரு கணம் அது தலைகுனிந்தாலும் மறுகணத்திலே தலை நிமிர்ந்து, தந்திரத்தையும் சூழ்ச்சியையும் சாடித் தகர்த்தெறிந்து விட்டு முன் செல்லுகிறது.

வயது அதிகப்படுவதால் மட்டும் ஒருவன் இளமையை இழப்பதில்லை. இளமையின் உள்ளக் கனலை அழியாது போற்றி வளர்ப்பவன் என்றும் இளமை யோடிருக்கிறான். “காலனைக் காலால் உதைப்பேன்” என்று வீறுபேசும் இளமை வீரத்தைக் கைவிடாதவன் என்றும் உயிரோடிருக்கிறான்.

இளமை ஓடுகிற பாம்பைக் காலால் மிதித் தழிக்கத் துள்ளி எழுகிறது. அச்சத்தைக் கண்டு சிரிக்கிறது. தோல்வியை எள்ளி நகையாடுகிறது.

இளைஞர்களே, உங்கள் பெருமையை உணர்ந்து கொள்ளுங்கள். மிகப்பெரிய எதிர்காலம் உங்களுடையது. எழுந்து நில்லுங்கள்; தோளைப் புடைத்து, மார் தட்டி, வீர முழக்கம் செய்யுங்கள். தவறுகளால் கட்டுண்டு இருளில் மூழ்கி உழலாதீர்கள். கண்ணைத் துடைத்துக்கொண்டு உங்கள் உண்மை வடிவத்தைக் காணுங்கள். உங்கள் வலிமையின் பேராற்றலை உணர்ந்து முன் செல்லுங்கள்.

இளமை வாழ்கென்று கூத்திடுவோமடா
இளமை வெல்கென்று கூத்திடுவோமடா

என்று கவிஞன் பாடுகிறான்.

For more ebooks visit: https://getmyebook.in/

இளைஞர்களே, எழுந்து முன் செல்லுங்கள். எதிர்காலம் உங்களுடையது. அதை உங்கள் சீரிய குறிக்கோள்களால் ஒப்பற்றதாகச் செய்யுங்கள். வையப்பரப்போடு வானப்பரப்பும் உங்களுடையது. வாழ்க இளமை !

For more ebooks visit: https://getmyebook.in/

# கவிதை என் காதலி

**தா**மரை மலர் இதழ் அவிழ்த்து பொங்கு சுடர் போல விரிந்து நிற்கிறது. ஒரே வனப்பு! ரோஜா அழகாக மலர்ந்து சிரித்துக் கொண்டிருக்கிறது. ஒரே சிரிப்பு. அவற்றைப் பார்த்தவுடனே என் உள்ளம் துள்ளிக் குதித்துக் கூத்தாடுகின்றது. ஏன்? அங்கே என் காதலி தோன்றுகிறாள்; கவிதை அணங்கின் புன்முறுவல் அவற்றிலே தவழ்கின்றது.

எழில் நிறைந்த பொருள்களெல்லாம் எனக்கு என்றும் இன்பம் தருகின்றன. இந்த எழில் எங்கே பிறக்கின்றது? உண்மை விளங்கும் இடத்திலே, சீலம் களிநடம் புரிகின்ற இடத்திலே, எழில் கோயில் கொண்டிருக்கின்றது. இயற்கை அமைப்பிலும், உருவத் தோற்றத்திலும் அழகுண்டு; ஆனால் உண்மையிலும், சீலத்திலும் பிறக்கின்ற அழகு அதை விடச் சாலச் சிறந்ததாகும். சனகனின் மகளாக வந்த சீதையின் மேனியழகு ஒப்பற்றதுதான். ஆனால் அதை விடச் சிறந்தது அப்பிராட்டியின் குண நலத்தினாலும் கற்பின் மாட்சியாலும் வெளியான ஆன்மிக அழகாகும்.

வடிவழகும், வாய்மை அழகும், சில அழகும், கவிதைத் தேவியின் உயிர், அவற்றைக் களைந்து விட்டால் அவள் பிணமாய்விடுகிறாள். அவளுக்கு எத்தனையோ அணிகளைக் கொண்டு ஒப்பனை செய்யலாம். ஆனால், இந்த உயிர் இல்லாவிடில் அவள் வெறும் சடலந்தான்.

For more ebooks visit: https://getmyebook.in/

கவிதை பணங்குக்கு அணிகள் பூட்ட எத்தனையே பேர் காத்திருக்கிறார்கள்; உயிர் கொடுக்க வேண்டும்

என்பது என்னுடைய மாறாத ஆசை, அவளுக்கு நான் உயிர் கொடுக்க வேண்டும்; அவள் எனக்கு உயிர் கொடுக்க வேண்டும், நாங்கள் ஒன்றாகிவிட வேண்டும். இதுவே என் கனவு.

**“காற்றிலேறி அவ்விண்ணையும் சாடுவோம்**

**காதற் பெண்கள் கடைக்கண்**

**பணியிலே”**

என்று பாரதி பாடுகிறான். கவிதை பெண் கடைக் கண்ணாற் பார்த்தாலும் போதும்; அற்புதங்களெல்லாம் செய்ய நான் காத்திருக்கிறேன்.

முழு நிலாவின் வெண் கதிர் வீச்சிலே ஒருகானம் பிறக்கின்றதை நீ அறிவாயா? கவிதைத் தேவியின் அருள் கிடைத்தவர்களுக்கு அந்தக் கானம் கேட்கிறது. நீலக்கடலின் கொந்தளிப்பிலே அவர்களுக்கு வெள்ளிப்பனிவரையின் உச்சியிலே வைகும் அமைதி தோன்றுகிறது!

அழகுகளை யெல்லாம் வடித்தெடுத்துக்கொடுக்க, உயர்வுகளை யெல்லாம் மனக்கண் முன்பு நிறுத்திக் காட்ட, இன்பங்களை யெல்லாம் திரட்டியளிக்க யாரால் முடியும்? அவளுடைய காதலைப் பெற்றவனே அவற்றைச் செய்கிறான். அவனுடைய சொல்லிலே ஒரு பாந்திர சக்தி குமிழியிட்டுக் கொண்டிருக்கிறது. அவனுடைய உள்ளம் வானிலே உயர்ந்து பறக்கிறது.

For more ebooks visit: https://getmyebook.in/

**“தென்னையின் கீற்றைச் சலசல என்றிடச்**
**செய்து வருங் காற்றே**
**உன்னைக் குதிரைகொண்டேகுமோர்**
**உள்ளம் படைத்து விட்டோம்”**

என்று பாடும் துணிச்சல் அவனுக்கு ஏற்படுகிறது.

காட்டுவெளியிலே உறவாட வா வென்றால் கவிதைப் பெண் எளிதிலே இணங்குவாள். தனிமையிலே அவளுக்கு விருப்பம் அதிகம். இயற்கையின் வளமும், பூரிப்பும் மிகுந்த தனியிடமென்றால் அங்கு அவள் நடமாடித் திரிய ஆசைப்படுவாள்.

அவளுடைய காதலை நாடி இப்படித் தனியிடத்திற்கு நான் ஒருநாள் சென்றேன். அவள் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுவதற்குப் பெரியதோர் திட்டமிட்டுச் சென்றிருந்தேன். என் பேச்சைக் கேட்டதும் அவள் உரக்கச் சிரித்தாள்.

“அகராதியை மனப் பாடம் செய்துகொண்டு வந்துவிட்டாயா?” என்று அவள் ஏளனமாகக் கேட்டாள். “கவிதைத் தேவியே, சொல்மாலை தொடுத்து அணிய வந்திருக்கிறேன்; ஏற்றருள வேண்டும்'” என்று நான் வேண்டினேன்.

“என்னுடைய நேசம் வேண்டுமானால் செத்துப் போன நிகண்டுப் பேச்சை மறந்துவிடு; உனது உணர்ச்சியை அப்படியே வெளிப்படுத்தும் உயிருள்ள பேச்சைத்தான் நான் விரும்புகிறேன்” என்று கண்டிப்பாகச் சொன்னாள்.

For more ebooks visit: https://getmyebook.in/

எனக்கு ஒன்றும் புரியவில்லை; அப்படியே திகைத்து நின்றேன்.

“என்னைக் கண்ணே என்றழைக்காமல் நயனமே என்றழைக்க விரும்புகிறாயா?” என்று அவள்

அவர் கருத்து எனக்கு விளங்கிவிட்டது. மேலும் அவர் கூறுகிறாள்:

“முதலில், என்னை உன் உள்ளத்திலே ஐக்கியப்படுத்திவிடு; பிறகு என்னால் பெற்ற இன்பத்தை மற்றவர்கள் உள்ளத்திலே தோன்றுமாறு செய். அதற்கான வாகனந்தானே வார்த்தைகள்? உயிருள்ள வாகனத்தில் ஏற்றி அனுப்பினால் நான் ஆசையோடு செல்லவேன். சவப் பெட்டியிலே என்னை அடைத்தனுப்ப முயலாதே உன்னுடைய முயற்சி பலிக்காது!”

நான் அவற்றிற்கு உயிர் கொடுக்க முடியாதா? என்று மிடுக்கோடு கேட்டேன்.

“நான் அவற்றை வாகனமாக ஏற்றுக் கொண்டால் உயிர் பிறக்கும். ஆனால் நீண்ட நாள் பயன்பட்டதால் சில வாகனங்கள் வலி குன்றி மங்கி விடுகின்றன. அவற்றில் எனக்கு விருப்பம் இல்லை” என்று அவள் பதிலுரைத்தாள்.

என் இறுமாப்பு மறைந்தோடி விட்டது. குதிரையைக் கொக்கென்று சொல்ல நான் பாடம் பண்ணியிருந்தேன். அதன் வலிமையால் கவிதையணங்கு என்னிடம் அடிபணிந்து வருவாள் என்று எண்ணியதெல்லாம் பகற் கனவு என்பதை நான் உணர்ந்து கொண்டேன்.

For more ebooks visit: https://getmyebook.in/

“தேவீ, எனது தவறுகளை யெல்லாம் நீ எடுத்துக் காட்டிவிட்டாய்; இப்பொழுது தான் உன்னிடம் சரண்புகுகின்றேன். என் உள்ளத்திலே வந்து நின்று நீயே இனிப் பேசு. உனது இனிய குரலுக்கு இசைவாக நான் சுதி சுட்ட முயல்கிறேன்” என்று பணிவோடு மொழிந்தேன்.

அவள் விழிக் கோணத்திலே நகை காட்டினாள். ஆஹா! அந்த இன்முறுவலிலே நான் கண்ட இன்பங்களை யெல்லாம் எழுத வசமாகுமோ!

இந்த உலகத்திலே கவிதைத் தேவி இல்லாத இடமில்லை. அவள் என் காதலி. அவளை நான் எங்கும் காண்கிறேன். காற்றில் அவள் மிதக்கிறாள்; கடல் அலைகளிலே அவள் தாண்டவம் புரிகிறாள். வானத்திலே அவள் நீலப்பட்டாடை நெளிகின்றது. எண்ணத்தின் இசையாக அவள் விளங்குகிறாள்.

அவளுடைய முழு அன்பையும் பெறுகிறவர்களே பாக்கியம் செய்தவர்கள். அவளை நாடி உள்ளம் ஏங்குகிறது. ஒருகணம் அவள் உடனிருக்க இசைகிறாள்; மறுகணத்திலே மாயமாக மறைந்து விடுகிறாள்! அப்பொழுது உலகமே இருண்டு போகிறது.

கவிதைத் தேவியின் அருளைப் பெறுவது எவ்வளவு கடினம் என்று தெரிகின்ற போதுதான் அவள் அருள் பெற்ற கவிஞர்களின் பெருமை புலனாகின்றது. ஹோம்ஸ் என்ற அறிஞர் எழுதுகிறார்: “கற்ப காலத்தின் தூரக்குரல் கவிஞர்களின் நுட்பமான செவிகளில் இன்றே கேட்கிறது. மற்றவர்கள் நூறாண்டுகளுக்குப் பின் அறிந்து கொள்வதை அவர்கள் இன்றே அறிந்து சொல்லுகிறார்கள்.

For more ebooks visit: https://getmyebook.in/

கவிதைப் பெண்ணானங்கே. இது உன் செய்லல்லவா? உன்னை நான் போற்றுகிறேன். நீ தரும் இன்பம் சிலவேளைகளிலே என்னைச் சுடுகிறது; அனலைப் பிழிந்து நீஇன்பங் கூட்டுகிறாய். இருந்தாலும்

அது எனக்கு இனிக்கிறது. அதை நாடி நான் ஏங்கி நிற்கிறேன்; தேவீ, அருள் செய்ய வேண்டும்.

# காந்திய அடிப்படை

**ஏ**சுநாதரை மையமாகக் கொண்டு எத்தனையோ அழகிய ஓவியங்கள் தீட்டப் பெற்றிருக்கின்றன. அவற்றில் ஒன்றிலே அவர் தம் கரத்தினிலே சுடர் விட்டுக் கொண்டிருக்கும் விளக்கைத் தாங்கியவாறு ஒரு வீட்டை நோக்கி அன்போடு நிற்பது போலக் காட்சியளிக்கிறார். வீட்டின் கதவோ சாத்தி உட்பக்கம் தாளிடப்பட்டிருக்கிறது. அந்த மகானிடமிருந்து வரும் ஒளியைப் பெற யாருமே கதவைத் திறந்து வெளி வரவில்லை. கிறிஸ்து முனி கருணையோடுதான் காத்திருக்கிறார். ஆனால் யாராவது அதைக் கவனிக்க வேண்டுமே!

இந்த உயர்ந்த கற்பனையின் மூலம் ஓவியன் ஒரு பெரிய உண்மையை நமக்குக் காட்ட முற்பட்டிருக்கிறான். இறைவன் தனது அருளை வழங்கத் தயாராகத் தான் இருக்கிறான். அவனுடைய கருணைக்கு எல்லையே இல்லை. அவன் கருணைக் கடல். ஆனால், அந்த அருளைப் பெறுவதற்கு யார் நினைக்கிறார்கள்? எல்லோருடைய மனக்கதவுகளும் சாத்தித் தாளிடப்பட்டுத்தான் கிடக்கின்றன. அத்திப் பூத்தது போல எங்காவது ஒருவர் இதற்கு மாறாக இருந்தால் அவரையும் உலகம் புறக்கணித்து விடுகின்றது. அவருடைய பெருமையை உணரத் தொடங்கினாலும் அதற்குள் ஓர் ஆயிரம் ஆண்டுகளாவது மறைந்தோடிவிடுகிறது.

For more ebooks visit: https://getmyebook.in/

அன்று சிலுவையில் அறையப்பட்ட மகானின் பெருமையை இன்றுதானே உலகம் ஓரளவிற்கு அறியத் தொடங்கியிருக்கிறது! ஆனால், அவருடைய உபதேசத்தை இன்றும் பின்பற்றுவதாகக் காணோம். இந்தக் கணக்கின்படி பார்த்தால் இன்று உயிர்த்தியாகம் செய்த காந்தியடிகளின் பொன் மொழிகளில் பொதிந்துள்ள உயர்ந்த கருத்துக்களை உலகம் சரிவர உணர்ந்து கடைப்பிடிப்பதற்கு எத்தனை நூற்றாண்டுகளாகுமோ?

இவ்வாறு எண்ணிப் பார்க்கும்போது உள்ளத்திலே சோர்வும் கலக்கமுந்தான் மிஞ்சுகின்றன. மானிட சாதியின் மேல் ஒரு அவநம்பிக்கை, ஒரு கசப்பு ஏற்படுகின்றது. "உலகம் இப்படித்தான் நெறியில்லா நெறியிலே போய்கொண்டிருக்கும்; அதைப் பற்றி நினைத்து அங்கலாய்ப்பது தவறு; ஒவ்வொரு வனும் அவனவனுடைய கதிமோட்சத்தை நாடுவ திலேயே கண்ணுங் கருத்துமா யிருக்க வேண்டும்" என்று கூறுகிறவர்களோடு நாமும் சேர்ந்து கொள்ளலாமா என்று தோன்றுகிறது.

மானிட சாதிக்கு உய்வே இல்லைதானா? இல்லை என்று சொல்லுவதற்கு மனம் இடங்கொடுப்பதில்லை. மானிட சாதி முன்னேறிக் கொண்டுதான் இருக்கிறது; வழியிலே அங்குமிங்குமாகச் சில சமயங்களில் தள்ளாடிக் கொண்டிருந்தாலும் அது இந்த உலகத்திலேயே சுவர்க்கத்தை அமைக்காமல் ஓய்வு கொள்ளாது என்று சாதிக்க வேண்டுமென்று ஆசை எழுகின்றது. இது நாய் வாலப்பா, இதை நேராக்குவது முடியவே முடியாது. யாராவது ஒரு மகான் தோன்றிக்

For more ebooks visit: https://getmyebook.in/

கொஞ்சம் இதை நீட்டி நேராக்க முயல்வார். அவருடைய அருஞ் செயலால் உலகம் சற்று இப்படி, யப்படி நெளிந்து கொடுக்கும்; அந்த வலிமைக் கை மறைந்த பிறகு மறுபடியும் பழைய நிலைமைக்கே வந்து விடும்” என்று நம்பிக்கையற்றவன் பேசுகிறான். உலகம் போகிற போக்கைப் பார்க்கிறபோது அவனுடைய பேச்சு மெய் போலவே காண்கிறது.

மனிதன் அறிவு வாய்ந்தவன்தான். அவன் தன் அறிவின் ஆற்றலினாலே பெரிய பெரிய காரியங்களைச் சாதித்திருக்கிறான்; இயற்கையை வென்றிருக்கிறான்; பல அற்புதங்களைப் படைத்திருக்கிறான். இவை மட்டுமல்ல, மிக உன்னதமான எண்ணங்களையெல்லாம் எண்ணியிருக்கிறான்; இன்பத்திற்கு வேண்டிய சாதனங்களையும், கருத்துக்களையும் அவன் கொண்டிருக்கிறான்.

ஆனால், அவனிடத்திலே ஒரு பெருங்குறை இருக்கிறது. தனியாக எண்ணும்போது, தனியாகச் செயல் புரியும்போது அவன் அடைகின்ற உச்சநிலையைப் பலராகக் கூடிச் செய்யும்போது அடைவதில்லை. அவனுடைய கூட்டெண்ணம், கூட்டுத் தொழில் தனிமையில் பெற்ற அதன் தரத்தை இழந்து விடுகிறது. தனி மனிதன் இழிந்தவை செய்வதும் எண்ணுவதும் இல்லையென நான் கூறவில்லை; ஆனால் மக்கள் கூட்டமாகச் சேர்ந்து நிற்கும்போது தனி மனிதன் பல சமயங்களில் அடையக்கூடிய உயர் நிலையை அடைய முடிவதில்லை என்பதைத்தான் எடுத்துக் காட்டுகிறேன்.

For more ebooks visit: https://getmyebook.in/

என்ன இருந்தாலும் மனிதன் தன் விருப்பு வெறுப்புக்களின் அடிமைதான். அவன் எந்நாட்டினனாகவும் இருக்கலாம்; ‘யாதும் ஊரே, யாவரும் கேளிர்’ என்று கூறும் பண்பாட்டைப் பெற்ற தமிழ் மன்னோர்களின் வழி வந்தவனாவும் இருக்கலாம். அவனும் விருப்பு வெறுப்புக்களின் அடிமைதான். அவனுடைய பேச்சிலே வேண்டுமானால் இப்பண்பாடெல்லாம் தனி மெருகு பெற்று வெளியாகும் ; ஆனால், செயலில் இறங்கும்போது அவனும் பல குறுகிய சுயநலங்களுக்கு ஆளாகவே இருக்கிறான். ஒவ்வொரு நாட்டிலும் யாராவது ஒரு சிலர் இந்தக் குறுகிய இருள் திரையை ஊடுருவிச் செல்லும் ஒளி படைத்தவர்களாக இருந்திருக்கிறார்கள். அவர்கள் விட்டுச் சென்ற உன்னதக் கருத்துக்கள் இன்றும் சிரஞ்சீவியாக வாழ்கின்றன. இருந்தாலும் பெரும்பான்மையான மக்கள் இக்குறுநெறியை விட்டு நீங்கினார்களில்லை. அதனால் சுயநலம் குறுக்கிடும்போது மக்களின் விருப்பு வெறுப்புணர்ச்சிகள் அவர்களின் அறிவொளியை மறைத்து விடுகின்றன. விலங்கு இனத்திலிருந்து பரிணாமக் கிரமத்தில் மனிதன் உருவாகியிருக்கிறான் என்பது இன்று பலரும் ஒப்புக் கொண்ட உண்மை. உணர்ச்சி வசப்படும் போது மனிதன் இன்றும் பழைய விலங்கு நிலைமையையே எய்தி விடுகிறான்.

மனிதனுடைய கீழ்த்தர உணர்ச்சிகளைக் கிளறி விடுவது இன்றும் வெகு எளிதாக இருக்கின்றது ; அவ்வளவு எளிதில் அவனுடைய மென்மை

For more ebooks visit: https://getmyebook.in/

உணர்ச்சிகளை மேலெழச் செய்ய முடியாது. சாதி, மதம், நாடு, மொழி என்று ஏதாவதொன்றைக் கூறி அதன் மூலம் அவனை என்ன கொடுமை வேண்டுமானாலும் செய்யும் படி தூண்டலாம். சென்று மறைந்த ஓரிரண்டு ஆண்டுகளில் நம் தாய்நாட்டில் நடந்த நினைக்கமுடியாத குழந்தை வதைகளும், பெண் குலச் சீரழிவுகளும்: மற்ற அட்டூழியங்களும் இதற்குச் சான்று பகர்கின்றன. தனி மனிதன் தானகவே இவ்வளவு கேவலமான நிலைக்கு இறங்கியிருக்கமாட்டான். ஆனால் மேலே கூறப்பட்ட நான்கில் ஏதாவதொன்றின் பெயரால் அவனுடைய உணர்ச்சியைத் தூண்டி விட்டால் அவன் தன் இனத்தவர்களோடு சேர்ந்து கொண்டு என்ன வேண்டுமானலும் செய்யத் தயங்கு வதில்லை. அவ்வாறு செய்வது உயர்ந்த தருமம் என்று கூட அவன் எண்ணிக்கொள்ளுகிறான்.

மனித சாதியின் தலைவிதியை நிருணயிப்பதில் இன்று அரசியலுக்கு மிக முக்கியமான இடம் இருக்கிறது. ஆகவே, அரசியல் வாதிகளின் மனப்பான்மை உலகப் போக்கை உருவாக்குவதில் முக்கிய இடம் பெறுகிறது. அவர்கள் ஆழ்ந்த சிந்தனையோடும், விரிந்த மனப்பான்மையோடும் செயல் புரிவார்களானால் உலகத்திற்கு நன்மை உண்டாகும் ; இல்லாவிடில் உலகம் சீர்குலைய வேண்டியதுதான். ஆனால், இன்று பெரும்பான்மையான அரசியல்வாதிகள் மக்களின் கீழ்த்தர உணர்ச்சிகளைக் கிளப்பிவிட்டுத் தங்களுக்குச் செல்வாக்கு உண்டாக்கிக் கொள்ளுவதிலேயே கருத்தாயிருக்கின்றனர். பெர்னுட்ஷா ஒன்று

For more ebooks visit: https://getmyebook.in/

கூறியுள்ளார்: “தெளிவாகவும் தர்க்க முறையிலும் நினைத்துப் பழகவேண்டும் என்று போதிக்கப் பல ஆண்டுகளாக நான் முயன்று வருகிறேன். ஆனால், பெரும்பான்மையான அரசியல்வாதிகள் கற்றுக் கொள்ள விரும்புவதில்லை” என்று அவர் அங்கலாய்க்கிறார், அரசியல்வாதிகள் இவ்வாறிருந்தால் உலகத்தில் அமைதியோ, இன்பமோ நிலைக்க முடியாது. அவர்களுக்கு அதிகாரத்தைக் கைப்பற்றுவதிலேதான் நாட்டமெல்லாம்.

உள்நாட்டு வியவகாரம் இவ்வாறென்றால் வெளிநாடுகளோடு கொண்டுள்ள தொடர்பிலும் இந்த அதிகார மோகமே தலைவிரித்தாடுகிறது. வல்லரசு ஒவ்வொன்றிற்கும் தனது கை ஓங்குவதிலேயே கண்ணும் கருத்தும். கையாளும் முறை நல்லதா, கெட்டதா என்பது பற்றிக் கவலையே இல்லை. அதற்காக எத்தனை பொய்ப் பிரசாரங்களும் செய்யத் தயார். சிறு நாடுகளெல்லாம் இவ் வல்லரசுகளின் கைப் பொம்மைகள். சமயத்திற் கேற்றவாறு எப்படி வேண்டுமானாலும் அவற்றை ஆட்டிக்கொள்ளலாம்.

இரண்டாவது உலகயுத்தம் முடிவடைந்த சிறிது காலத்திற்குள்ளேயே உலகம் இரு பெருங் கட்சிகளாகப் பிரியத் தொடங்கிவிட்டது. அணுக்குண்டின் அழிவுச் சக்தியை அறிந்த பின்னரும் தங்கள் விருப்பு வெறுப்புக்களை விட்டுத் தர்க்க முறையில் நினைக்க அரசியல்வாதிகள் கற்றுக் கொள்ளவில்லை. அதனல் தான் மற்றுமொரு உலக யுத்தம் தொடங்கியே தீரும் என்கிற எண்ணம் வேண்டியிருக்கிறது. மற்றொரு யுத்தமென்றால் அது அணுக்குண்டுயுத்தந்தான்;

For more ebooks visit: https://getmyebook.in/

அணுகுண்டு யுத்தமென்றால் அதுவே மானிட சாதியின் அழிவாகவும் முடியலாம்.

இந்த நிலைமையிலிருந்து தப்ப வேண்டுமானால் காந்தியடிகள் காட்டிய ஒரே வழிதான் உண்டு. இதை நன்கறிந்துள்ள பேரறிஞர் ஐன்ஸ்டைன் விடுத்துள்ள சேதியொன்றில், "அப்பொழுதே உணரமற் போனோமே என்று வருந்தும் நிலை ஏற்படுவதற்கு முன்பே உலகம் காந்தியடிகளின் வழியைப் பின்பற்றி உய்வடைய வேண்டும்" என்று தெளிவாகக் கூறியிருக்கிறார்.

அதற்கு நம் மனப்பான்மையிலேயே ஒரு புரட்சிகரமான மாறுதல் ஏற்பட வேண்டும். பழைய வழியிலேயே எண்ணுவதை அறவே விட்டொழித்து மானிட சமூகம் ஒரு குடும்பம் என்ற அடிப்படையில் நம் சிந்தனையைச் செலுத்தவேண்டும். அதிகார ஆசையில் உழலும் உலகத்து அரசியல்வாதிகளை இன்று அப்படி மாற்றிவிட முடியுமென்று தோன்ற வில்லை. இனிமேல் நாட்டு மக்களாக நின்று பொறுப்பேற்க வரும் இளைஞர்களுக்கு இப்புது வழியில் மனம் செல்லும்படியான படிப்பு முறை அவசியம். உலகைக் காப்பதற்கு இதுவே இன்று மிக விரைவாகச் செய்யப்படவேண்டிய காரியமாகப்படுகிறது.

அறிவு என்பதொன்று மனிதனுக்குத் தனிச் சிறப்பாகக் கிடைத்திருக்கிறது என்பது மெய்யானால் அதைப் பயன்படுத்தி, காந்தியடிகளின் உபதேசத்தை உடனே புரிந்துகொள்ள முயலவேண்டும். உலகிலுள்ள மக்கள் அனைவரும் அதை நன்கு அறியுமாறு

For more ebooks visit: https://getmyebook.in/

செய்யவேண்டும். அதில்தான் நமது கதிமோட்சம் உள்ளது.

இந்தியா உலகிற்கு வழிகாட்ட வேண்டுமானால் மற்ற நாட்டு அரசியல் நெறியையே பின்பற்ற முயலாமல் காந்தியத்தின் அடிப்படையில் புதிய நெறி வகுத்துக் கொள்ளவேண்டும். தொடக்கத்திலேயே நாம் நம் போக்கைச் சரியான பாதையில் செலுத்தாவிடில் பிறகு மற்ற நாடுகளைப் போல இப்புறமும் அப்புறமும் திரும்ப வகையறியாது திணற வேண்டியதாகும்.

இந்தியாவின் தந்தையெனக் காந்தியடிளைப் புகழ்வதோடு நின்றுவிடாமல் அவருக்குச் சிறந்த நன்றி செலுத்துவது நம் கடமையென உணர்ந்தோமாயின் நாம் முதலில் அவர் வழியில் நின்று உலகுக்கும் அதை எடுத்துக் காட்டி மானிட சாதியைச் சீர்பெறச் செய்யவேண்டும்.

உலகமெல்லாம் சேர்ந்து ஒரு நாடுபோல அரசாங்கமும், மற்ற காரியங்களும் நடைபெறும்படியான காலம் வரும்வரையில் மானிட சாதிக்கு நல்ல சுகம் கிடைக்காது. “உலக அரசாங்கம் நிச்சயம் வரும்; நிச்சயமாக வந்தாகவேண்டும். உலகத்தின் நோய்களுக்கு வேறு மருந்தே கிடையாது” என்று பண்டித நேரு கூறியிருப்பது பொருள் செறிந்த வாசகம். இன்றைய போக்கே நீடிக்குமானால் அது மற்றொரு யுத்தத்திற்கு வித்தாகி அழிவிற்கே காரணமாக முடியும். மானிட சாதி உய்ய வேண்டுமானால் ஒரே உலகம் என்ற கொள்கை ஓங்கவேண்டும். அதற்குக் காந்திய அடிப்படையன்றி

For more ebooks visit: https://getmyebook.in/

வேறு வழி கிடையாது. அதை உடனே புரிந்து கொள்ள வேண்டியது அறிவு வாய்ந்த மக்களின் கடமையாகும்.

For more ebooks visit: https://getmyebook.in/

# மலையேறும்போது

**அ**க்கினி நட்சத்திரம். வெயில் கொளுத்திக் கொண்டிருக்கிறது. எங்கே பார்த்தாலும் உருவில்லாத ஒரு ஜுவாலே தக தகவென்று மேலெழும்புவது போல் காணப்படுகின்றது. அது கானல் நீர்; பேய்த் தேர். அது அலையலையாக மேலெழுகின்ற உச்சி வேளையிலே பூமா தேவி மூர்ச்சையுற்றவள்போல் அசைவற்றுக் கிடக்கிறாள்.

ஆனால், இந்த வெயிலிலும் பழநியங்கிரியிலே பக்தர்களின் கூட்டத்திற்கும், உற்சாகத்திற்கும், முழக்கத்திற்கும் குறைவே இல்லை. சித்திரை இறுதி வாரத்திலும், வைகாசி முதல் வாரத்திலும் அங்கு வந்து குழுமுகின்ற மக்களின் எண்ணிக்கையைச் சொல்லி முடியாது. பயணத் தொல்லையோ, வெயிலின் கொடுமையோ அவர்களை எவ்விதத்திலும் தடைப்படுத்துவதாகக் காணோம். அவர்களுடைய பக்தியைச் சோதிக்கவே இறைவன் இவற்றையெல்லாம் உண்டாக்கியிருக்கிறான் என்பது அவர்கள் எண்ணம் போலும். அதனால் அக்கினி நட்சத்திரத்தின்போது பழநியில் ஒரே கூட்டம்.

'அரஹரா, அரஹரா' என்ற பக்தி வெள்ள முழக்கம் இடைவிடாமல் எழுகின்றது. 'வேலும் மயிலும், வேலும் மயிலும் - சாமியே சரணம்' என்று மலையாளத்துக்காரர்கள் மெய்மறந்து கின்றார்கள். மலையாளத்து மக்களுக்கு முருகனிடத்திலே ஒரு தனிப்பட்ட பக்தி இருக்கின்றது. அதைக் காணும்போது

For more ebooks visit: https://getmyebook.in/

நமது உள்ளத்திலும் அது ஊற்றெடுக்கத் தொடங்குகின்றது. எங்கு பார்த்தாலும் விதவிதமான காவடிகள். எங்கும் ஒரே பக்தி வெள்ளம்.

நல்ல வெயிலிலே மலையேறும் அடியவர்களின் நெற்றியிலிருந்து வியர்வை பொங்கி அதிற் பூசியிருக்கும் திருநீற்றைக் கரைத்துக்கொண்டு விழுகிறது. நீண்ட பெருமூச்சு மார்பை விம்மச்செய்கிறது. உள்ளத்திலே பக்தி தளராவிட்டாலும் மலையேறும் சிரமத்தால் கால்கள் தளர்வடைகின்றன. அந்தச் சமயத்திலே ஒரு கானம் பிறக்கின்றது.

**ஏறாத மலையேறி எருது ரண்டும் தத்தளிக்கப்**

**பாராமல் கைகொடுப்பார் பழநிமலை வேலவனே**

வாழ்க்கையெனும் தொல்லை மிகுந்த செங்குத்தான மலையிலே ஏறும்போது நெஞ்சமும், மனமும் தத்தளிக்கத்தான் செய்கின்றன. அம்மலையின் சிகரத்தில் உள்ள வீட்டை அடைவது எளிய செயலா? பல தடவைகளில் மனமுடைந்து போகிறது; நெஞ்சம் வெதும்புகிறது. ஏற முடியாத இந்த மலையிலே ஏறி வருந்துவானேன் என்று தளர்ச்சியுண்டாகிறது. ஆனால், அந்தச் சமயத்தில் பழநியப்பனைத் துதித்தால் அவன் பார்த்துக்கொண்டு சும்மா இருப்பானா? கருணைக் கடலல்லவா அவன்? நமது வருத்தத்தைப் பார்த்துச் சகியாமல் கைகொடுத்து நம்மைச் சிகரத்திற்கு அழைத்துச் செல்வான்.

For more ebooks visit: https://getmyebook.in/

இம்மாதிரி பொருள் செய்யும்படியாக அந்த நாடோடிப் பாட்டு அமைந்திருக்கின்றது.

இதோ இன்னுமொரு பாட்டு அனல் வீசுகின்ற காற்றிலே பொருள் செறிந்து மிதந்து வருகின்றது.

**எருக்கிலைக்குத் தண்ணீர் கட்டி**
**எத்தனைப் பூப் பூத்தாலும்**
**மருக் கொழுந்து வாசமுண்டோ**
**மலைப் பழநி வேலவனே**

இதில் ஒரு பெரிய உண்மை தொனிப்பதை நாம் கவனிக்கலாம். “விழலுக்கு நீர் பாய்ச்சி மாய மாட்டோம்” என்று கவிஞர் பாடுகின்றாரே அதுபோல, பயனில்லாத செயலைச் செய்து ஆயுளைக் குறைத்துக் கொள்வது அறிவுடைமை ஆகாது என்பதை இப் பாட்டுக் கூறுகின்றது. பாத்தி கட்டித் தண்ணீர் விட்டு எருக்கஞ் செடியை வளர்ப்பதால் என்ன பயன்? மருக்கொழுந்தை நட்டுத் தண்ணீர் பாய்ச்சினால் பயனுண்டு; இனிய நறுமணத்தைத் துய்க்கலாம். ஆதலால், மருக்கொழுந்தைப் போன்ற நல்ல மணமுள்ள செயல்களைச் செய்வதில் நாம் நம் வாழ்க்கையைச் செலவிடவேண்டும் என்பதை இப்பாட்டுக் குறிப்பாக உணர்த்தி நிற்கின்றது.

அதோ அங்கொரு துறவி பாடிக்கொண்டே மலையேறுகிறான். அவன் உலகத்தைத் துறந்துவிட வேண்டுமென்ற விரதம் கொண்டவன். அந்த விரதத்தை என்றும் மறவாமலிருக்கும்படியாக எப்பொழுதும் நினைவூட்ட வேண்டுமென்று சடை சடையாக மாறிய தன் தலை மயிரை உச்சியிலே

For more ebooks visit: https://getmyebook.in/

சேர்த்து முடிந்திருக்கிறான்; நெற்றியிலே நிறைய வெண்ணீற்றை அணிந்து கொண்டிருக்கிறான். முனிவர்களும் பயந்து நடுங்கும்படியான காமம், வெகுளி, மயக்கம் என்பன போன்ற அசுரர்களை இறைவன் மாய்ப்பான் என்பதற்கு அடையாளமாக நிற்கும் வேலையும் அவன் கையில் வைத்திருக்கிறான். இருந்தாலும் ஒவ்வொரு சமயத்தில் அவனுடைய உள்ளம் தடுமாறுகின்றது. நெறியில்லா நெறியில் செல்ல விரும்புகின்றது. அதனால், அவன் முருகனை நோக்கிக் கதறுகின்றான்.

**உச்சியிலே சடையிருக்க**
**உள்ளங் கையில் வேலிருக்க**
**நெற்றியிலே நீறிருக்கக் கந்தையா என்**
**நினைவு தப்பிப் போவதென்னோ.**

இந்தப் பாட்டிற் பிறக்கும் சோகம் எங்கும் பரவுகின்றது. இறைவன் காதிலும் புகுகின்றது. கலங்கிய உள்ளம் அமைதி பெறுமாறு கருணை வள்ளல் புன்சிரிப்புடன் நோக்குகிறான். துறவி மலை உச்சியை அடைந்து, இறைவன் பாதத்தில் விழுந்து வணங்கி எழுந்து அவன் திருமுகத்தை ஆவலோடு அண்ணாந்து பார்க்கிறான். இறைவனிடம் மாறாது பொலியும் புன்முறுவல் அவனுக்குச் சாந்தி அளிக்கின்றது.

மேலே எடுத்துக் காட்டிய நாடோடி பாடல்கள் கால வரையில்லாது பழநியங்கிரியிலே ஒலித்துக் கொண்டிருக்கின்றன. அவற்றில் புதைந்து கிடக்கும் பொருளும், இசையும் உள்ளத்தைக் கவர்கின்றன.

For more ebooks visit: https://getmyebook.in/

அவற்றைக் கேட்பதும், அவற்றை வாய்விட்டுக் கூவும் அடியவர்களின் கூட்டத்தைக் காண்பதும் ஒரு தனி இன்பமாக இருக்கின்றன.

For more ebooks visit: https://getmyebook.in/

# பாரதியின் நகைச்சுவை

**பா**ரதியாருடைய முறுக்கு மீசையையும், வெறித்த பார்வையையும், விரைப்பான உருவத்தோற்றத்தையும் நேரிலோ அல்லது உருவப் படத்திலோ பார்த்தவர்கள் அவரிடம் நகைச் சுவையை எதிர்பார்க்க மாட்டார்கள். இந்த ஆசாமிக்கும் நகைச் சுவைக்கும் வெகு தூரம் என்று சொல்லத்தான் அவர்களுக்குத் தோன்றும்.

அனற்பொறியைக் கக்கும் அவருடைய தேசீயப் பாடல்களைப் படிக்கின்றபோது இந்த எண்ணம் முற்றிலும் வலுப்பட்டு விடுகின்றது.

பயமெனும் பேய்தனை அடித்தோம் பொய்மைப் பாம்பைப் பிளந்துயிரைக் குடித்தோம்

என்ற மாதிரி இடிப் பாடல்களையும்,

வலிமையற்ற தோளினாய் போ போ போ மார்பிலே ஒடுங்கினாய் போ போ போ

என்பது போன்ற கர்ஜிக்கும் வரிகளையும் எழுதிய கைக்கும் மென்மை வாய்ந்த நகைச்சுவைக்கும் என்ன தொடர்பு இருக்கப் போகிறது என்று நினைப்பது இயற்கைதானே?

ஆனால், அவரது நாட்டுப் பாடல்களை விட்டு, கண்ணன் பாட்டு, குயிற் பாட்டு, பாஞ்சாலி சபதம் முதலிய நூல்களுக்கு வரும்போதே அவருடைய

For more ebooks visit: https://getmyebook.in/

நகைச் சுவை ஆங்காங்கு மின்னுவதை நாம் பார்க்கலாம்.

**அங்காந்திருக்கும் வாய் தனிலே-கண்ணன்**

**ஆறேழு கட்டெறும்பைப்**

**போட்டுவிடுவான்**

என்ற கண்ணன் பாட்டிலும்,

**மேனி அழகினிலும் விண்டுரைக்கும் வார்த்தையிலும்**
**கூனி இருக்கும் கொலுநேர்த்தி தன்னிலுமே**
**வானரர் தம்சாதிக்கு மாந்தர்**

**நிகராவாரோ**

என்ற குயிற் பாட்டு வரிகளிலும் நகைச்சுவை கொப்புளிக்கின்றது.

பாரதியாருடைய நகைச் சுவையை உணர்ந்து மகிழ அவருடைய வசன நூல்களுக்குத்தான் முக்கியமாகச் செல்லவேண்டும்; அங்குதான் அது சிறப்பாக வெளிப்படுகின்றது.

நகைச் சுவையை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். ஒன்று என்றும் சிரிப்பை உண்டாக்கி இன்பம் பயப்பது; மற்றொன்று முதல் தடவை படிக்கும் போதோ அல்லது கேட்கும் போதோ மட்டும் இன்பங் கொடுப்பது. முன்னது உயர்த்தது; பின்னது தகுதியில் குறைந்தது. முன்னது இடையறாது பெருகும் தேன் ஒழுக்கு; பின்னது துளிக்கும் கொம்புத் தேனில் ஒரு சொட்டு.

For more ebooks visit: https://getmyebook.in/

பாரதியாரின் கட்டுரைகளில் இடையறாத இன்ப ஊற்றான உயர்ந்த நகைச் சுவையை நாம் ஆங்காங்கு காண்கின்றோம்.

பெண் என்ற கட்டுரையிலே பிரமராய வாத்தியாரைப் பற்றி அவர் சொல்லுவதைப் பாருங்கள்;

"இவர் இந்தத் தெருவில் வார்த்தை சொன்னால் மூன்றாவது தெருவுக்குக் கேட்கும். பகலில் பள்ளிக் கூட வேலை முடிந்தவுடனே வீட்டுக்கு வந்து, சாயங்காலம் ஆறு மணிமுதல் எட்டு வரை தன் வீட்டுத் திண்ணையில் சிநேகிதர்களுடன் பேசிக் கொண்டு, அதாவது கர்ஜனை செய்து கொண்டிருப்பார். பிறகு சாப்பிடப் போவார். சாப்பிட்டுக் கலையலம்பி, கை ஈரம் உலர்வதற்கு முன்பு, மறுபடி திண்ணைக்கு வந்து சப்தம் போடத் தொடங்கிவிடுவார். இவருடைய வீட்டுத் திண்ணைக்கு அக்கம் பக்கத்தார் 'இடிப் பள்ளிக்கூடம்' என்று பெயர் வைத்திருக்கிறார்கள். அந்த இடிப் பள்ளிக்கூடத்துக்கு வந்து மாலைதோறும் நாலைந்து பேருக்குக் குறையாமல் இவருடைய பேச்சைக் கேட்டுக்கொண்டிருப்பார்கள். அந்த நாலைந்து பேருக்கும் இன்னும் காது செவிடாகாமலிருக்கும் விஷயம் அனேகருக்கு ஆச்சரியத்தை உண்டாக்குகிறது."

அந்த வாத்தியாருடைய பேச்சிலே சில வார்த்தைகளையும் கேளுங்கள்:

"துருக்கி தேசம் தெரியுமா? அங்கே நேற்று வரை ஸ்திரீகளை மூடி வைத்திருப்பது வழக்கம். கஸ்தூரி மாத்திரைகளை டப்பியில் போட்டு

For more ebooks visit: https://getmyebook.in/

வைத்திருக்கிறார்களோ இல்லையோ? அந்த மாதிரி; திறந்தால் வாசனை போய்விடும்."

எத்தனை தடவை படித்தாலும் சிரிப்புண்டாகிறது: அதே சமயத்தில் நம்மை அறியாமல் அது நமக்குள்ளே மாறுதலைச் செய்கிறது.

நல்ல நகைச்சுவை உள்ளத்தில் சுருக்கென்று தைக்காது, நோவில்லாமலே குணம் கொடுக்க வேண்டும். மேல் நாட்டில் பல நகைச்சுவை எழுத்தாளர்களின் வார்த்தைகளே சமூகத்தில் பல சீர்திருத்தங்களை யாருக்கும் மனக் கசப்பில்லாமல் செய்திருக்கின்றன. அம்மாதிரியே பாரதியாரும் நகைச்சுவையைக் கையாண்டிருக்கிறார், ஹார்மோனியத்தைப் பற்றி அவர் எழுதியிருப்பதைப் பாருங்கள் :

“அந்தப் பெட்டி (ஹார்மோனியம்) போடுகிற பெருங் கூச்சல்தான் என் காதுக்குப் பெரிய கஷ்டமாகத் தோன்றுகிறது.

“மேலும், சங்கீதத்திலே கொஞ்சமேனும் பழக்கமில்லாதவர்களுக்கெல்லாம் இந்தக் கருவியைக் கண்டவுடனே ஷோக் பிறந்து விடுகிறது. சத்தமுண்டாக்குவதற்கு நல்ல துருத்தி கைக்கு ஒத்ததாகப் பின்னே வைத்திருக்கிறது. ஒரு கட்டையை உள்ளே அழுத்தி, முன் பக்கத்துச் சாவிகளை இழுத்து விட்டு, துருத்தியை அசைத்தால், ‘ஹோ’ என்ற சத்தமுண்டாகிறது. உடனே பாமரனுக்கு மிகுந்த சந்தோஷமுண்டாகிறது. நாம் அல்லவா இந்த இசையை உண்டாக்கினோம் ? என்று நினைத்துக் கொள்கிறான். உடனே வெள்ளைக் கட்டைகளையும்

For more ebooks visit: https://getmyebook.in/

கறுப்புக் கட்டைகளையும் இரண்டு தட்டுத் தட்டுகிறான். பேஷான தொனிகள்! மேலான தொனிகள்! பாமரன் பூரித்துப் போகிறான்..... ஒரு வீட்டில் ஹார்மோனியம் வாசித்தால் “பக்கத்திலே ஐம்பது வீட்டுக்குக் கேட்கிறது. அறியாதவன் தனது அறியாமையை வீட்டில் இருந்தபடியே இரண்டு மூன்று வீதிகளுக்குப் பிரசுரம் பண்ண வேண்டுமானால், அதற்கு இந்தக் கருவியைப் போலே உதவி வேறொன்றுமில்லை.”

இதைப் படித்த பிறகும் அந்த வாத்தியத்தைத் தொட ஆசை உண்டாகுமா?

சில சமயங்களில் பாரதியாருடைய நகைச்சுவை இந்த மென்மையை விட்டுச் சற்று உறுத்தவும் தொடங்குகிறது. கொஞ்சம் இடித்துக் காண்பிக்க வேண்டும் என்பது அவர் கருத்து :

கும்பகர்ணன் தூங்கினானாம். இலங்கையில் சண்டை நடக்கிறது. மூன்று லோகமும் நடுங்குகிறது. அப்படிப்பட்ட சண்டையின் அதிர்ச்சியிலே கூட, கும்பகர்ணனுடைய தூக்கம் கலையவில்லை. ஆயிரக் கணக்கான ஆடு மாடு குதிரைகளின் காலில் கூர்மையான கத்திகளைக் கட்டி இவன் மேலே நடக்கச் சொன்னார்கள் ; தூக்கம் கலையவில்லை. ஏழெட்டு மேகங்களை அவன் காதுக்குள்ளே போய் இடிக்கச் சொல் ராவணன் கட்டளை இட்டானாம். மேகங்கள் போய் இடித்தனவாம்; கும்பகர்ணன் குறட்டை நிற்கவே இல்லை.

“மேற்படி கும்பகர்ணனைப் போலே சில தேசங்களுண்டு, அண்டங்களத்தனையும் இடிந்து

For more ebooks visit: https://getmyebook.in/

விழுந்தாலும் காது கேட்காத செவிடர் வாழும் தேசங்கள் சில உண்டு.

ஆனால் ஹிந்து தேசம் அப்படி....இல்லை!....தமிழ் நாடு மேற்படி மஹா பாதக ஜாப்தாவைச் சேர்ந்ததன்று, அன்று!”

தமிழனுக்கு இந்தச் சூடு தேவையோ இல்லையோ தேவையென்றால் இதுவே போதும், போதும்.

இப்படிச் சுறுக்கென்று படும் நகைச்சுவையும் அவர் வாக்கில் பிறந்திருக்கின்றது. நடிப்புத் தேச பக்தர்களைப் பற்றியும் பாரதியார் இவ்வாறான காரமான நகைச்சுவையைக் கொட்டி எழுதியிருக்கிறார் :

“நான் சோம்பருக்குத் தொண்டன். எனது நண்பர்கலெல்லாம் புளியஞ் சோற்றுக்குத் தொண்டர்கள். சிலர் மட்டிலும் பணத்தொண்டர்; ‘காலணா’வின் அடியார்க்கும் அடியார்.

ஆனால், எங்களிலே ஒவ்வொருவரும் பேசுவதைக் கேட்டால் கைகால் நடுங்கும்படியாக இருக்கும். பணத்தொண்டரடிப் பொடி யாழ்வார் எங்கள் எல்லோரைக் காட்டிலும் வாய்ப் பேச்சில் வீரர். ஒருவன் வானத்தை வில்லாக வளைக்கலாமென்பான். ஒருவன் மணலைக் கயிறாகத் திரிக்கலாமென்பான். ஒருவன், ‘நாம் இந்த ரேட்டில் வேலை செய்து கொண்டு வந்தால் ஆங்கிலேயரின் வர்த்தகப் பெருமை ஆறு மாதத்தில் காற்றுய்ப் போய்விடும்’ என்பான். மற்றொருவன், ‘சியாம்ஜி கிருஷ்ணவர்மா ஸ்வராஜ்யம் கிடைக்கப் பத்து வருஷமாகுமென்று கணக்குப் போட்டிருக்கிறார்.

For more ebooks visit: https://getmyebook.in/

ஆறு வருஷத்தில் கிடைத்துவிடுமென்று எனக்குத் தோன்றுகிறது.' என்பான் தவளையுருவங் கொண்ட மூன்றாமொருமூன்றாமொருவன், 'ஆறு மாதமென்று சொல்லடா' என்று திருத்திக் கொடுப்பான்."

பாரதியாருக்கும் அவர் மனைவிக்கும் நடந்ததாக ஞானரதம் என்ற நூலில் வரும் பேச்சு இது:

" 'தலைநோவு பொறுக்க முடியவில்லை. கொஞ்சம் மிளகு அரைத்துக் கொண்டு வா' என்றேன். 'ஆமாம்; இரண்டு நாளைக் கொருமுறை இதொரு பொய்த் தலைவலி வந்துவிடும், என்னை வேலை ஏவுகிறதற்காக. பால்காரி வந்து மத்தியான்னம் பணம் கேட்டுவிட்டுப் போனாள். ராயர் வீட்டு அம்மாள் குடிக்கூலிக்கு ஞாபகப்படுத்தச் சொன்னாள். தெருவிலே போகிற நாய்களுக்கெல்லாம் பணத்தை வாரி இறைக்கிறது; வீட்டுச் செலவைப் பற்றிக் கேட்டால் முகத்தைச் சுளிக்கிறது; இப்படிச் செய்து கொண்டே வந்தால், அப்புறம் என்ன கிடைக்கும்? மண்தான் கிடைக்கும்' என்று ஆசீர்வாதம் பண்ணிப் பிரசங்கத்தை முடித்தாள்.

" 'தலை நோவு தீர்ந்து விட்டது. நீ தயவு செய்து கீழே போகலாம்' என்று வணக்கத்துடன் தெரியப்படுத்திக் கொண்டேன்."

அவருடைய வணக்கத்திலே நகைச்சுவை பொங்கி எழுகின்றது.

'உல்லாச சபை' என்பது பாரதியார் எழுதிய ஒரு கட்டுரை. உல்லாச சபை என்று ஒரு சபை இருந்ததாம். அதிலே ஜிந்தாமியான் சேட், எலிக்குஞ்சு செட்டியார்

For more ebooks visit: https://getmyebook.in/

முதலியோர்கள் அங்கத்தினர்கள். ஒரு நாள் உல்லாச சபையில் ஜிந்தாமியான் சேட், எலிக்குஞ்சு செட்டியாரை நாணயக் குறைவானவர் என்று சொல்லிவிட்டார். செட்டியாருக்குக் கோபம் வந்து விட்டது. அப்பொழுது நடந்த உரையாடலைக் கேளுங்கள்;

"எலிக்குஞ்சு செட்டியார்: நாணயக் குறைவா? யாருக்குங் காணும் நாணயக் குறைவு? சாஹப்! உம்முடைய முரட்டுக் குணங்களை நம்மிடம் காட்ட வேண்டாம் தெரியுமா?

"ஜிந்தாமியான் சேட்: செட்டியாரே, அதிக வார்த்தை பேசிவிட்டீர். ஒரு தரம் பொறுத்தேன். ஹோஷியார்! (ஜாக்கிரதை!)

"எலி : என்ன சாஹப் தாடியை உருவுகிறீரே, அடித்துப் போடுவீரோ?

"ஜிந்தா : ஹோஷியார்!

"எலி : நம்முடைய கடையிலே உம்மைப் போலவே நாலு முரடர்களை வேலைக்கு வைத்திருக்கிறேன். ஞாபகமிருக்கட்டும்.

"ஜிந்தா: ஹோஷியார்!

"எலி : என்னங் காணும் வெகு பயமுறுத்துகிறீரே, யாரென்று நினைத்தீர் நம்மை?

என்று சொல்லிக்கொண்டு எலிக்குஞ்சு செட்டியார் எழுந்து நின்று கையை ஓங்கினார்.

"சபையார் கலீரென்று சிரித்தார்கள்.

For more ebooks visit: https://getmyebook.in/

"ஏனென்றால், எலிக்குஞ்சு செட்டியார் $4\frac{3}{4}$ அடி உயரம்; ஜிந்தாமியான் சேட் $6\frac{3}{4}$ அடி உயரம். செட்டியார் $1\frac{1}{4}$ அடி அகலம்; சேட் $3\frac{1}{4}$ அடி அகலம். செட்டியாருக்கு வயது 55. சேட்டுக்கு வயது 33." ஹாஸ்ய விலாசம் என்ற தலைப்பிட்டே பாரதியார் ஒரு கட்டுரை எழுதியுள்ளார். அதிகாரிகள் செய்யும் காரியங்கள் பல சமயங்களிலே மிக வேடிக்கையாக இருக்கும் என்று அதிலே அவர் ஒரு சம்பவத்தை எடுத்துக் காட்டிச் சிரிக்கிறார். அவர் எழுதுகிறார் “கணக்குப் பதிவாளரின் அதிகாரத்தில் ஏற்படும் விசித்திரங்கள் கணக்கில்லாதன. யுத்தத்தில் ஒரு மனிதன் செத்து விட்டதாகக் கணக்குப் பண்ணி விட்டார்கள். பிறகு அவனே அந்தக் கணக்குக் கூடத்துக்கு வந்து, தான் உயிரோடிருப்பதாகவும், தன்னை இறந்ததாகக் கணக்கிட்டது தவறென்றும் தெரிவித்தான். அதற்கு அதிகாரி, “போ, போ, இங்கு நில்லாதே ! நீ செத்துப் போனதாக நாங்கள் பதிவு செய்தாய் விட்டது. இனி நீ வந்து அதனை மறுப்பதில் பயனில்லை. ஓடிப்போ” என்று துரத்தினர். இது உண்மையாக நடந்த செய்தி. மஹாயுத்த காலத்தில் நடந்தது. அதிகாரிகள் இத்தகைய காரியங்கள் செய்வதில் சமர்த்தர்.”

இம்மாதிரி பாரதியாருடைய உரைநடை நூல்களிலே நகைச்சுவை பல இடங்களிலே வெளிப்படுகின்றன. அவற்றைச் சந்தர்ப்பத்தோடு சேர்த்துப் படிக்கும்போது மிகவும் இன்பம் பெறுகின்றோம்.

For more ebooks visit: https://getmyebook.in/

வாழ்க்கை இன்பத்தைப் பெருக்குவதில் நகைச்சுவைக்குச் சிறந்ததோர் இடமுண்டு. நாம் அதைப் போற்ற வேண்டும். அதை உயர்ந்த இலக்கிய வழியிலே நமக்குக் கொடுத்தவர்களில் பாரதியாரும் ஒருவராவார்.

For more ebooks visit: https://getmyebook.in/

# தலையெழுத்து

**ப**டைக்கும் பொழுதே நான்முகன் ஒவ்வொருவனுடைய தலையிலும் அவனுடைய வாழ்க்கையமைப்பைத் திட்டமாக எழுதிவிடுகிறான் என்பது பலருக்குச் சம்மதமான கொள்கை. அந்தப் பிரம்மலிபியை மாற்றவே முடியாது என்ற எண்ணமும் ஆணிவேரூன்றி அசையாது நிற்கின்றது. அன்றெழுதியவன் அழித்தெழுதப் போவதில்லை என்றும், விதி யாரை விட்டது என்றும் மக்கள் பேசிக்கொள்கிறார்கள். ஆனால் சிலர் விதியை மதியால் வெல்லலாம் என்று மேற்கோள் காட்டிப் பேசுகிறார்கள். மார்க் கண்டன் கதை தெரியாதா என்று மிடுக்கோடு கேட்கிறார்கள்.

ஒவ்வொருவனும் தன்னுடைய விதியைத் தானே எழுதிக்கொள்ளுகிறான் என்று நான் நம்புகிறேன். அதாவது ஒவ்வொருவனும் தன்னுடைய வாழ்க்கையின் போக்கைத் தன் செய்கையாலேயே உயர்த்தியோ அல்லது தாழ்த்தியோ அமைத்துக் கொள்கிறான் என்பது எனது கட்சி. அப்படியானால் முற்பிறப்புக்களில் செய்த வினையின் பயன் ஒருவனைத் தொடராதா என்ற கேள்வி பிறக்கலாம். முற்பிறப்பில் செய்த வினையென்றாலும் அதுவும் அவனுடைய செயல்தானே? ஆதலால் அது என் கொள்கைக்கு மாறுபட்டதல்ல, பல பிறுப்புக்கள் உண்டா இல்லையா என்ற விஷயத்தை நான் இங்கே ஆராயப் போவதில்லை. அவ்வாராய்ச்சியின் முடிவு

For more ebooks visit: https://getmyebook.in/

எவ்வாறாயினும் இது என் கட்சியைப்பாதிப்பதில்லை என்பதை மட்டும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

ஒருவனுக்கு ஏதாவது ஒரு துன்பம் நேருமானால் "அது என் தலைவிதி" என்று அவன் சொல்லிக் கொள்கிறான். விதியென்று சொல்லிவிட்டு அதன் காரணத்தை ஆராயாது வாளா இருக்கிறான். அத் துன்பத்தைப் போக்க வழி தேடவும் அவனுக்கு உற்சாகயேற்படுவதில்லை. விதியை மாற்ற முடியாது என்றால் அதைப்பற்றி வீண் சிரமப்படுவானேன் என்று நினைக்கிறன். ஆனால், உண்மையில் விதியென்றால் என்ன என்பதை அவன் ஆராய்வதில்லை.

விதியென்ற சொல்லுக்கே தலையெழுத்து என்ற பொருளில்லை. விதி என்பது ஒரு நியதி; ஒரு சட்டம், தீயைத் தொட்டால் சுடும். இது ஒரு நியதி. இந்த விதியை மாற்ற முடியாதுதான். ஆனால் தீயை அணுகாது இருந்துவிட்டால் அது யாரையும் சுடமுடியாது. ஒருவன் தன் வாழ்க்கையில் தவறு செய்தால் அதன் பயனைத் திண்ணமாய் அனுபவித்துத்தான் தீர வேண்டும். அதற்குத் தப்ப முடியாது. அதுதான் விதி. ஆகவே, ஒருவன் தன் விதியைத் தானே எழுதிக் கொள்ளுகிறான் என்பதில் தவறு ஒன்றுமில்லை.

பாரம்பரியத்தால் சில தன்மைகளும், உடல் நிலைமையும் ஏற்படுகின்றன. குழந்தைப் பருவத்திலே ஏற்பட்ட அனுபவங்களினாலும், சூழ்நிலையாலும் சில தன்மைகளும், உடல் நிலையும் உருவாகின்றன. இவையெல்லாம் மனத்தித்துவர்கள் தங்கள் ஆராய்ச்சியின் பயனாகக் கண்டறிந்த உண்மைகள்.

For more ebooks visit: https://getmyebook.in/

இவற்றின் மேல் ஒருவனுக்கு ஆதிக்கம் இல்லையாகையால் ஒவ்வொருவனும் தன் வாழ்க்கையமைப்பைத் தானே திட்டமிடுவதாக. எப்படிக் கூற முடியும் என்று கேட்கலாம். பாரம்பரியத்தைத் தானாகவே ஒருவன் உண்டாக்கிக்கொள்ள முடியாதென்பது மெய்தான். குழந்தைப் பருவத்தில் ஒருவனுக்குத் தன் விருப்பப்படி சூழ்நிலையை அமைத்துக்கொள்ளவும் முடியாது.

இங்ஙனம் ஏதாவது ஒரு பிறப்பில் ஒருவனது கட்டுக்கடங்காது நிற்பவைகளை வேண்டுமானால் தலையெழுத்து என்று சொல்லலாம். இங்கு நான் தலையெழுத்தையும் விதியையும் வெவ்வேறு பொருள்களில் வழங்க விரும்புகிறேன். விதியென்பது முன்பே கூறியதுபோல ஒரு நியதி; செய்த வினையின் பயனாக உண்டாவது. தலையெழுத்தென்பது தன்னை மீறி ஏற்பட்ட பாரம்பரியம், இளமைச் சூழ்நிலை போன்றது. தனது வினைக்கு ஒருவன் பொறுப்பாளியாயிருப்பது போல இவற்றிற்கு அவன் அந்தப் பிறவியில் பொறுப்பாளியாக இருக்க முடியாது. ஆனால், ஒருவகையான பாரம்பரியத்தையும், சூழ்நிலையையும் அடையும்படியாக ஒருவன் பிறப்பதற்கே காரணம் அவன் முற்பிறப்பில் செய்த வினையென்று வாதிப்பவர்களும் உண்டு. அது மெய் யென்றால் எனது கட்சி முற்றிலும் வலுவடைகின்றது.

பாரம்பரியத்தினால் ஒரு சில தன்மைகளையும் திறமைகளையும் பெறுவதற்கு வேண்டிய மனப் மனப்பான்மை அமைத்திருக்கிற தென்றும், அவைகள் மலர்வதற்கு வசதியான சூழ்நிலை கிடைத்தால்

For more ebooks visit: https://getmyebook.in/

வளருமென்றும், கிடைக்காவிட்டால் நைந்து போகுமென்றும் மசாத்தத்துவர்கள் கருதுகிறார்கள். மேலும் ஒருவனுடைய வாழ்க்கையமைப்பு அவனுடைய ஐந்தாவது வயதிற்குள்ளேயே பாரம்பரியத்தாலும், சூழ்நிலை அநுபவங்களாலும் பெரும்பாலும் திட்டமடைந்து விடுகின்றதென்றும் அவர்கள் கூறுகிறார்கள்.

ஆதலால் ஒருவனுடைய தலையெழுத்தை உருவாக்குவதில் பெற்றோருக்குப் பெரியதோர் பங்கு இருப்பதாகத் தெரிகின்றது. இந்த வகையிலே பார்க்கும்போது பெற்றோர்களின் பொறுப்பு மிகப் பெரியதென ஏற்படுகிறது. பாரம்பரியத் தன்மைகளை அவர்கள் தங்கள் விருப்பப்படி முற்றிலும் செய்ய முடியாவிட்டாலும், தகுந்த சூழ்நிலையை உண்டாக்கி அதன் மூலம் சிறந்த பண்புகளையும், திறமைகளையும் வளர்க்கலாம். பெற்றோர்கள் தங்கள் நடத்தையாலும், செயலாலும் குழந்தைகளுக்கு நல்ல எடுத்துக் காட்டாக இருக்கலாம். ஒருவன் தனக்கு நல்ல அறிவிருந்தும் வாழ்க்கையிலே வெற்றி பெற முடியாதிருப்பதற்கு என்ன காரணம் என்று ஆராயும்போது தன் தந்தை காமவசப்பட்டு இழிந்த செயல் புரிந்து வந்தாரென்றும், அதன் பயனாகப் பாரம்பரியமாகத் தன் மூளையில் ஏற்பட்டிருக்கும் கோளாரென்றால் தன்னுடைய அறிவு சிறப்பாகப் பயன்படாதிருக்கின்றதென்றும் உணர்ந்ததாக ஐரோப்பிய நாடகமொன்று எழுதப்பட்டிருக்கிறது. இது பெற்றோர்களின் நடத்தை குழந்தைகளைப்

For more ebooks visit: https://getmyebook.in/

பாதிக்கின்றது என்ற மனத்தத்துவ உண்மையை அடிப்படையாகக் கொண்டது.

ஒருவன் தான் எண்ணுவது போலவே ஆகிவிடுகிறான் என்று சொல்லுகிறார்கள். உயர்ந்த எண்ணங்களையே எண்ணிக் கொண்டிருப்பவன் வாழ்க்கையில், உயர்வடைவான். எண்ணத்தின் வலிமையை இன்று அறிஞர்கள் உணர்ந்து வருகிறார்கள். எண்ணியார் எண்ணியாங் கெய்தலாம் என்ற உறுதியைச் சாதாரணமாகத் தலைவிதி என்ற எண்ணம் குலைத்து விடுகிறது. எவ்வளவு வேகமாக எண்ணினாலும், முயன்றாலும் தலைவிதிப்படித்தானே முடியும் என்று உள்ளம் சோர்வடைகிறது. ஆனால், விதியென்பதை உள்ளபடி நாம் அறிந்துகொண்டோமானால் சோர்வும் அவநம்பிக்கையும் பிறக்க முடியாது.

உலகத்தில் போர், பூசல் முதலிய துன்பங்கள் நேர்கின்றன. அவற்றால் தனி மனிதர்கள் பலர் துன்பப்படுகிறார்கள். பலர் இறக்கிறார்கள். இவற்றிற் கெல்லாம் அவர்கள் காரணமாக இருக்கவில்லையே என்ற ஐயமுண்டாகலாம். மனிதன் தன் செய்கையாலேயே இன்பதுன்பங்களையும், உயர்வு தாழ்வுகளையும் அடைகிறானென்றால் பெரும் போரால் நேரும் பலனுக்கு அவன் செய்கை எவ்வாறு காரணமாகுமென்று வினவலாம். போரால் துன்புறுவதும் மடிவதும் தலையெழுத்தல்லவா என்றும் கேட்கலாம். இவ்விஷயத்தை நாம் சற்று ஆழ்ந்து ஆய்ந்து பார்க்க வேண்டும். மனிதன் மற்ற மனிதர்களோடு கூடி வாழ விரும்புகிறான். அப்படி

For more ebooks visit: https://getmyebook.in/

வாழும்போது நாடு முதலிய பிரிவினைகளும், வேறு வேறான ஆட்சி முறைகள் முதலியனவும் உண்டாகின்றன. மனிதன் தனியாகச் செயலாற்றுவதோடு மற்றவர்களுடன் சேர்ந்தும் பல செயல்கள் செய்கிறான். அவ்வாறு தன் நாட்டிற்காகவும் சமூகத்திற்காகவும் நேரடியாகவோ தன் பிரதிநிதிகளின் மூலமாகவோ செயல் புரிவதிலே வழியல்லா வழியில் செல்லுவதாலேயே போர் ஏற்படுகின்றது. போரென்பது மனிதனுக்கு அப்பாற்பட்ட ஒரு சக்தியால் உண்டாவதில்லை. மனிதன் தனக்காக ஏற்படுத்திக் கொண்ட சமூக, அரசியல், பொருளாதார அமைப்புக்களின் விளைவாகவே போர் ஏற்படுகிறது. அவனுடைய குறுகிய நோக்கமும், சுயநலமும், பேராசையும் போருக்கு வழி செய்கின்றன. அப்போரையும் மனிதன் தன் முயற்சியால் தடுக்கக் கூடும். ஆதலால் தலையெழுத்தென்று சொல்லிக் கொண்டு 'வருவது தானே வரும்; போவது தானே போகும்' என முயற்சியின்றி இருத்தல் தவறாகும். தலையில் ஒருவித எழுத்தும் இல்லை; ஒவ்வொருவனும் தானே தன் தலையெழுத்தைத் தன் செயல்களால் எழுதிக் கொள்ளுகிறான்.

For more ebooks visit: https://getmyebook.in/

# நிப்பான் நாட்டுக் கவிதை

**க**திரவனின் இளம் பொற்கிரணங்கள் முதல் முதலிலே நிப்பான் நாட்டினையே தழுவுகின்றன. அதனாலேயே அந்தாட்டிற்கு 'உதயச் சுடர் நாடு' எனப் பெயர் வந்தது. ஜப்பான் என மற்றவர்கள் அதை அழைத்தாலும் அந்நாட்டு மக்கள் அதற்கிட்ட பெயர் நிப்பான் என்பதே ஆகும்.

காலைக் கதிரவனின் ஒளி முதன் முதலில் அந்நாட்டிற் படிவது போலவே முன்னேற்ற ஒளியும் ஆசிய நாடுகளுக்குள் அங்கேயே முதலில் படிந்தது. மற்ற ஆசிய நாடுகள் எல்லாம் பெருமையும் நம்பிக்கையும் கொள்ளும்படியாக நிப்பான் முன் சென்றது. ஆனால் மேல் நாட்டு அதிகார வெறியிலே மயங்கி, ஆசிய தர்மத்தை மறந்து அது வீழ்ச்சியுற்றது. அதி வேகமாகச் சென்றவன் கால் இடறி விழுவது இயல்பு தான். ஆனால் அவன் அப்படியே விழுந்து கிடக்க மாட்டான். எழுந்து நின்று தன் குறைகளைக் களைந்து மறுபடியும் முன்செல்வான். நிப்பானும் அவ்வாறு செல்லும்; சென்றுகொண்டிருக்கிறது.

வீழ்ச்சியுற்ற தருணத்தில் அந்நாட்டின் பெருமைகளை யெல்லாம் நாம் மறந்து விடலாகாது. அதன் கலை, அதன் கவிதை, அதன் உள்ளம் இவற்றையெல்லாம் நாம் நன்கு அறிந்து கொள்ள வேண்டும்.

நிப்பான் வடிவிற் சிறியது; ஆனால் அழகில் பெரியது; நீலக் கடலின் மேனியிலே திகழும் வெண்முத்துப் போன்றது. அவ்வாறே அந் நாட்டு

For more ebooks visit: https://getmyebook.in/

இலக்கியத்தின் பரப்பிலே வடிவில் சிறுத்து அழகில் பெருத்த கவிதை மகள் மலிந்திருக்கின்றன. கவிதை எழுதுவது அங்கே பலருக்கு ஒரு முக்கியமான இன்பப் பொழுது போக்காகும். ஆண்களுக்கு மட்டுமல்ல, பெண்களுக்கும் அவ்வாறுதான். கவி புனைவதில் பந்தயங்களும் போட்டி விளையாட்டுக்களும் அங்கே சாதாரண நிகழ்ச்சிகள், கலிதைக்கென்றே நூற்றுக் கணக்கான சிறந்த பத்திரிகைகள் அங்கு நடத்தப்படுகின்றன.

நிப்பான் நாட்டுக் கவிதைகளிலே 'தங்கா' என்ற யாப்புப் பலராலும் போற்றப்படுவதாகும். அதில் இலட்சக்கணக்கான கவிதைகள் எழுதப்பட்டுள்ளன. இச்சிறு யாப்பு பன்னிரண்டு முதல் இருபது வரையுள்ள சொற்களாலேயே ஆனது; ஐந்தே வரிகளையுடையது. அவ்வரிகளில் முறையே ஐந்து, ஏழு, ஐந்து, ஏழு, ஏழு அசைகள் தாம் உண்டு. பொதுவாக உதயச் சுடர் நாட்டு யாப்புக்களில் சீர், எதுகை, மோனை முதலான உறுப்புக்களில்லை. 'தங்கா'விலும் அவ்வாறு தான். நிப்பான் மொழியே இசையினிமை கூடியதாதலின் அனவே கவிதையின் உனர்ச்சியை வெளிப்படுத்தப் போதுமானதாக இருக்கிறது.

தங்கா' ஒவ்வொன்றும் உள்ளத்தில் எழுந்த உணர்ச்சியில் செதுக்கி எடுக்கப்பட்ட சிறுமணியாகும். அது உருவத்தில் சிறியதெனினும் பொருள் பொதிந்து நிற்பது. கடுகைத் துளைத்து ஏழ் கடலைப் புகுத்திக் குறுகத் தறித்த குறள் அன்னது. வடித்து வடித்துத் திரட்டித் திரட்டிச் சிறிதாக்குவதிலேயே அதன் உயிராகிய ஒளி மேலோங்குகின்றது.

For more ebooks visit: https://getmyebook.in/

இவ்வாறு குறுகிய வடிவில் இக்கவி அமைவதால் கவிஞன் தான் சொல்ல வந்த பொருளைப் பற்றி ஒரு சில முக்கிய குறிப்புக்களையே எழுதி அவற்றின் மூலமாகவே படிப்போர் உள்ளத்தில் தான் விரும்பிய உணர்ச்சித் துடிப்புக்களைத் தூண்ட முயல்கிறான். அங்ஙனம் எழுதிய சொற்கள் கவிஞனின் மன எழுச்சியில் வெடித்த மின்னல்களாகும். அவற்றின் ஒளியாலும், ஒலியாலுமே உணர்ச்சியின் முழு உருவத்தையும் படிப்போர் அறிந்து கொள்ள வேண்டும்.

அரிமரோ என்ற கவிதன் ஒருவன் செதுக்கிய 'தங்கா'வைப் பாருங்கள்:

**காதலால் வாடி இன்னுயிர்**
**தேய்த்தேன் என்றால்**
**அவள் துடிப்பாளே! ஐயகோ!**
**ஈரமில்லா உயிரே**
**வெறுத்தேன் நான் உனை.**

காதலியை அடைய முடியாமல் கலிஞன் தன் உள்ளம் வெதும்புகிறான்; வாழ்வையும் வெறுக்கிறான். ஆனால் உயிரைப் போக்கிக் கொள்ள மட்டும் கருதவில்லை. ஏன்? உயிர்மேலுள்ள ஆசையாலா? இல்லையில்லை; தான் இறந்தால் காதலி வருந்துவாளாம். அவள் வருந்தச் சகியாததால் அவன் தன் உயிர் சுமந்து திரிகிறான். இக்கவிதையின் ஆழத்தையும், அழகையும், உன்னி உன்னிப் பார்க்க அவை பெருகுவது புலனாகும்.

'தங்கா' சிறிய கவிதை தானே, அதை எழுதுவது எளிதாகத் தானிருக்கும் என்ற எண்ணம்

For more ebooks visit: https://getmyebook.in/

நமக்குண்டகலாம். பொருட்செறிவில்லாமல், உயிர்த் துடிப்பில்லாமல் எழுதுவதனால் எளிதுதான். ஆனால், உயர்ந்த கவிதையாக மதிக்கப்படும் 'தங்கா' புனைவது உயர்ந்த வைரத்தைச் சாணை தீட்டி எடுப்பது போலக் கடினமானது. நிப்பான் கவி ஒருவன் கூறுகிறான்: "ஒரு கவி எழுதுவது புத்த மகானின் சிலை வார்த்தெடுப்பது போல அவ்வளவு அருமை வாய்ந்தது."

வேறெரு 'தங்கா'வின் சொற் செட்டையும், பொருட் செறிவையும், கவிதைப் பெருக்கையும் நோக்குவோம்.

**எரிதனில் பொங்கும்**
**எழில் நனி பெருகும் பங்கயமே!**
**உனைப் போன்ற உயிரழகுக்**
**கன்னிகளைக் காணுங்கால்-நானோ**
**நெஞ்சம் புழுங்குகின்றேன்.**

இதைப் பாடியவன் ஒரு பெண்மணி. ஐந்தாம் நூற்றாண்டிலே வாழ்ந்த யூர்யகு எனும் இளஞ் சக்கரவர்த்தி ஒரு சமயம் நாட்டு வளம் காணச் சென்றிருந்தான். அவன் மிவா நதியை அணுகிய போது அதில் துணி துவைத்துக் கொண்டிருந்த ஒரு பேரழகு கன்னியைக் கண்டான்; காதலித்தான். அதனால் அவளை பார் என்று வினவினான். கன்னியும், "ஐயனே, தான் அருகிலுள்ள ஊரில் வசிப்பவள்; என் பெயர் அகய்கோ" என விடையிறுத்தாள். "இள நங்காய், நீ வேறு யாரையும் மணந்து கொள்ள வேண்டாம்; நானே உன்னை மணப்பேன்; பொறுத்திரு" என்று மொழிந்து அரசன் மீண்டான்.

For more ebooks visit: https://getmyebook.in/

அம்மங்கையோ தோல் சுருங்கி, நரை தோன்றி, உடல் தள்ளாடும் வரையில் காதலுடனே அரசனை எதிர்பார்த்திருந்தாள். ஆனால் அவனிடமிருந்து யாதொரு சேதியும் கிட்டவில்லை. அதனால் ஆறாத்துயர் கொண்ட பெண்மணி யூர்யகுவை ஒரு தடவையாவது சாகுமுன் கண்ணீரை காண விரும்பித் தலைநகருக்குச் சென்று அரசவையில் நுழைந்தாள். முதுமை யடைந்திருந்த மன்னனுக்குத் தன் வரலாற்றை விவரித்தாள். அதைக் கேட்டதும், "ஐயகோ, பூபாரம் தாங்கும் சிரமத்தால் உன்னை முற்றும் மறந்தேனே" என்று அவவத்தில் மூழ்கினான் அரசன். அத்துன்பப் பெருக்கால் இரு கவிகளும் பாடினான். அப்பெண்மணியும் தன் வாழ்க்கை முடிந்துவிட்டதை எண்ணித் துயரமும், காவலனைக் கண்டதால் ஆனந்தமும் கொண்டு இரு கவிகள் பாடினாள். அவற்றில் ஒன்றுதான் மேலே காட்டிய பாட்டு.

தனது இளமை வியர்த்தமானதால் இளங்கன்னியரைக் காணும் போதெல்லாம் அந்நினைவு வந்து நெஞ்சம் புழுங்குகின்றாளாம் அவள்.

நிப்பான் நாட்டிலே அனைவரும் இன்பம், துன்பம், கோபம் முதலிய உணர்ச்சிகளின் வயப்பட்ட போது கவி பாடுவார்கள். கவி பாடுதலே **Invalid template invocation→** பண்பாட்டிற்கும், தாகத்திற்கும் அறிகுறியாக அங்குக் கருதப்படுகின்றது. புகழ்' பெற்ற வீரர்களும், தலைவர்களும், மந்திரிகளும்; மன்னர்களும் கவி எழுதும் பழக்கத்தைக் கைக்கொண்டிருக்கிறார்கள். மேய்ஜி எனும் பேரரசன்

For more ebooks visit: https://getmyebook.in/

ஆயிரக் கணக்கான 'தங்கா'க்கள் இயற்றியுள்ளான். அவற்றில் பல சிறந்த கவிதைகளாக மதிக்கப்படுகின்றன.

கட்சோதி என்பான் திக்குத் தெரியாது பரந்து கிடக்கும், கடலிடத்தே மிதக்கும் தோணியைப் பார்த்துப் பாடுகின்றான்:

**வழியில்லா வாரிதியில்**
**செல்லும் சிறு தோணிக்கும்**
**இளங் காற்றில் ஒரு நல்ல**
**வழிகாட்டி காண்கிறதே!**

எல்லை யில்லா நீரில் மிதக்கும் தோணிக்கும் இளங்காற்று வழிகாட்டியாய் நின்று ஒரு குறிப்பிட்ட திசையில் அதைச் செலுத்துகின்றது, ஆனால், எல்லையில்லாக் காதலில் வாடும் அவன் தன் காதலியை அடைவதற்கு யாரும் இன்துணை புரியவில்லையே என்று உள்ளம் பொருமுகின்றான்.

ஒருவன் தான் முதுமை எய்துவதை நினைத்து வருந்திப் பாடுகிறான்:

**இளவேனில் வந்தவுடன்**
**புள்ளினங்கள் ஆயிரமாய்ப் பாடி நிற்கும்;**
**எல்லாம் உருமாறி,**
**இளமை எய்தி எழில் காட்டும்;**
**என்னை மட்டும் முதுமை கவ்வும்.**

நாட்டிலிருந்து அரச ஆணையால் விலக்கப்பட்ட யகாமொரி பாடுகிறான்:

For more ebooks visit: https://getmyebook.in/

**அவனியிலே**
**விசுப்பினிலே**
**கடவுளரே இல்லையெனில்**
**காதலியைக் காணாது**
**என்னுயிர் தான் நீங்கிடுமே.**

பண்டைக் காலத்திலே நிப்பான நாட்டில் திகழ்ந்த தெள்ளிய அறிவு வாய்ந்தவர்கள் தங்கள் மரணத்தறுவாயில் மனித வாழ்க்கையைப்பற்றிப் பொதுவாகவோ அல்லது தங்கள் சொந்த வாழ்க்கையைப் பற்றியோ தம் உள்ளக் கிடக்கையைக் கவியாக வெளியிடுவதுண்டு. இக்காலத்திலும் அப்பழக்கத்தை மேற்கொண்டுள்ளனர். அப்படிப்பாடும் கவிக்கு ஜிசி என்று பெயர்.

ஆடவரும் மகளிரும் குழுமியிருந்து ஏதாவது ஒரு பொருளைப் பற்றியோ, அழகிய காட்சியைப் பற்றியோ கவி எழுதுவதுண்டு. முழுமதி தன் தண்ணிய வெண் கதிர்களைப் பொழிந்து கொண்டிருந்த ஓரிரவில் அதைப் பற்றிப் பலர் கூடிக் கவிதை எழுதினார்கள். மிட்சூனியும் அவர்களில் ஒருவன். அவனுடைய கவிதை இது:

**ஆஹா! பேரெழில் இரவு**
**தேய்ந்து கழிகின்றதே!**
**என் துன்பம் எழுதும் தரமாமோ?**
**இவ்விரவைத் தூங்கித்**
**தொலைப்போரை**
**எண்ணிக்**
**கன வருத்தம் கொள்ளுகின்றேன்.**

For more ebooks visit: https://getmyebook.in/

அகாஜமிளோ கீமன் என்ற நங்கையின் காதல் இபன் மேல் கோபங் கொண்டு, "நாளை முதல் உன்னைக் கண்ணெடுத்தும் பாரேன்" என்று கூறிச் சென்றபோது அவள் பாடியது:

**காதலா, நாளை நீ என்னை மறந்திடுவாய்;**
**இன்று நீ என்னை நினைந்துள்ள போதே**
**என்னுயிர் தான் ஏகாதோ!**

வேபேர் ஆண்மகன் தன் மனைவியாலுள்ள காதலை ஒரு கவியால் வெளியிடுவதைப் பாருங்கள்:

**மனைவிபால் அன்பு**
**மிதந்துள்ள தம்மா**
**ஆஹா... நான் குடிக்கும் தண்ணீரில்**
**அவளுடைய நளின முகம் காண்கிறதே**
**ஒரு கணமும் அவளை**
**மறக்க முடியாதே.**

நிப்பான் நாட்டைப் பார்த்து மகிழ்ந்த சுவாமி விவேகானந்தர் அதன் அழகையும், மக்களின் கலை உணர்ச்சியையம் வெகுவாகப் பாராட்டியிருக்கின்றார்; இங்கே காண்பித்துள்ள கவிகளைப் போன்ற பல கவிகளைப் படித்து மகிழும்போது அவர்களுடைய கவிதை உள்ளத்தையும் நம்மால் பாராட்டாமலிருக்க முடியாது. காற்றுப் போலே கவிதை நிறைந்த நாடல்லவா நிப்பான் ?

For more ebooks visit: https://getmyebook.in/

# அடிகளின் தோற்றம்

உலகத்திலே பெரிய மகான்கள் தோன்றுகிறார்கள். சிறந்த உபதேசங்களைச் செய்கிறார்கள். அவர்கள் வாழ்ந்த நாட்டிற்கும் காலத்திற்கும் மட்டுமல்ல அவ்வுபதேசங்கள், என்றும் நிலைபெற்ற வாழ்க்கை நெறியாக நிற்க வேண்டிய உயரிய எண்ணங்களை அவர்கள் உலகிற்கே வழங்கிவிட்டுச் செல்கிறார்கள். ஆனால், அவர்களுடைய பெருமையையோ, அவர்கள் எடுத்துரைத்த கருத்துக்களின் அருமையையோ மக்கள் விரைவில் உணர்ந்து கொள்வதில்லை. யாரோ ஒரு சிலர் மட்டும் ஓரளவிற்கு அறிகிறார்கள். அறிந்து அவர்களைப் போற்றுகிறார்கள். அவர்கள் காட்டிய நெறியிலே நிற்க முயல்கிறார்கள். ஆண்டுகள் செல்லச் செல்லத்தான் மகான்களின் பெருமையை உலகம் உணர்ந்து கொள்ள முடிகிறது. விஞ்ஞானம் எவ்வளவோ முன்னேறிவிட்டது. அதன் காரணமாக மக்களின் அறிவுத்திறன் மிக ஓங்கிவிட்டதென்று நாம் பெருமைப்பட்டுக் கொண்டிருக்கிறோம். ஆனால் நான் மேலே கூறிய விஷயத்தைக் கவனிக்கிறபோது நம் அறிவு அவ்வளவு சிறப்பாகக் கூர்மையடைந்து விட்டதாகச் சொல்வதற்கில்லை.

காந்தி அடிகள் இவ்வுலகத்திற்கு வந்தார். அவர் இந்த நாட்டிலே பிறந்ததற்காக நாம் பெருமை கொள்கிறோம். அவர் நமக்குச் சுதந்திரம் வாங்கித் தந்ததற்காக நாம் அவரைப் பாரதத்தின் தந்தை என்று

For more ebooks visit: https://getmyebook.in/

கொண்டாடுகிறோம். உலகத்தின் மற்றப் பாகங்களிலும் அலரைப் போற்றுவர்கள் பலர் இருக்கிறார்கள். ஆனால், அவருடைய பெருமையை முற்றிலும் மக்கள் உணர்ந்து கொண்டதாகக் கூற முடியாது. அதற்கு இன்னும் எத்தனை ஆண்டுகள் செல்ல வேண்டுமோ? ஆண்டுகள் மட்டும் சென்றால் போதாது போலிருக்கிறது. இன்னும் உலகம் எத்தனை துன்பங்களில் உழவ வேண்டுமோ? துன்பத்தில் உழன்று போராடுகின்ற போதுதான் நமக்குப் பெரியவர்களின் நல்லுரைகள் உறைகின்றன. அதுவரை அவை புலப்படுவதில்லை. நமது அறிவு அத்தனை மந்தம்; இல்லை, அறிவு மந்தமல்ல; நமக்கு அத்தனை உதாசீனம்.

மகாத்மா காந்தி உலகிற்கு வந்தது இந்தியாவின் சுதந்திரத்திற்கு மட்டுமல்ல என்பது எனது கருத்து. இந்திய விடுதலையும், அவர் பணிகளில் முக்கியமானது தான். ஆனால் அதைவிட ஒரு முக்கியமான பணிக்காக அவர் தோன்றினார் என்று நான் எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

சென்ற ஐம்பது ஆண்டுகளுக்குள்ளேவிஞ்ஞானம் மிக விரிவாக வளர்ச்சியடைந்திருக்கிறது. மனிதன் பல அற்புதங்களைச் சாதித்திருக்கிறான். அவனுக்குத் தன் அறிவைப் பற்றி உயர்வாக எண்ணிக் கொள்வதற்குத் தகுதியுண்டு. ஆனால், அறிவு வளர்ந்ததற்கு சமமாக அவனுடைய அன்பு வளரவில்லை. மூளை பெருகிவிட்டது; ஆனால் நெஞ்சு விரியவில்லை. அணுக்குண்டு அவனுடைய அறிவின் வெற்றி. ஆனால் அழிக்கும் படையாகவே அதைப் பயன்படுத்த

For more ebooks visit: https://getmyebook.in/

அவன் முதலில் எண்ணுகிறான். அணுவையும் பிளக்க முடியும் என்ற எண்ணம் பிறக்கும்போதே அதை வலிமை மிக்க அழிவு வேலைப் படையாக்கலாம் என்ற விலங்கு உணர்ச்சியும் கூடவே பிறக்கின்றது. ஆண்மை பெண்மை என்ற இரு சக்திகளின் கூறாக உலகம் அமைந்திருக்கிறது. இதையே நாம் மங்கையோர் பாகங் கொண்ட இறைவன் வடிவத்தில் உருவகமாகக் குறிக்கின்றோம். அவ்விரு சக்திகளும் அண்டங்களை இயக்குகின்றன. மனிதனுக்குள்ளும் அவைகளே பலதிறப்பட்ட தன்மைகளாக விரிந்து நின்று தொழில் செய்கின்றன. அவைகளில் ஒன்று ஓங்கி, மற்றொன்று தாழ்கின்றபோது உலகில் தொல்லைகளே மிஞ்சும். ஆண்மை என்பதிலே வேறு பல பண்புகளை நாம் குறிக்கிறோம். பெண்மை என்பதிலே வேறு பல பண்புகளை நாம் குறிக்கிறோம். அவை முறையே ஆணிடத்தும்பெண்ணிடத்தும் உள்ளவைஎன்பதல்ல.. அவை எல்லோரிடத்திலும் பால் வேற்றுமையின்றி அமைந்துள்ள தன்மைகள். இயல்பாலும், பழக்கத்தாலும் ஆணிடத்துச் சில அதிகமாகத் தோன்றலாம். பெண்ணிடத்து வேறு சில அதிகமாகத் தோன்றலாம். ஆனால், அவை இரண்டும் ஏதாவது ஒரு விகிதத்தில் சேர்ந்து அமைந்ததே மக்கள் கூட்டம்.

நாம் ஆண்மையை வளர்ப்பதில் அதிகக் கவனம் செலுத்திக் கொண்டிருந்துவிட்டோம். இல்லை, இல்லை. அப்படிச் சொல்வது தவறு; ஆண்மையிலுள்ள கீழ்த் தர விலங்குத் தன்மையைக் களைந்தெறிவதில் கவனம் செலுத்தாமலிருந்து

For more ebooks visit: https://getmyebook.in/

விட்டோம் என்று சொல்லுவது தான் பொருந்தும். பெண்மையை நன்கு வளர்க்க நாம் கருதவில்லை. அதனலே உலகம் பெரியதோர் தீமையில் அகப்பட்டுக் கொண்டிருக்கிறது. காட்டு மிராண்டியாக வாழ்ந்த ஆதி மனிதனுக்கும் இன்றைய 'நாகரிக' மனிதனுக்கும் உள்ள பெரிய வேறுபாடு என்னவென்ற கேள்விக்குப் பெட்னாட்ஷா ஒரு பொருள் பொதிந்த பதில் சொடுத்திருக்கிறார். அவர் சொல்லுகிறார்: 'ஆதிமனிதன் பிறரைக் கொல்ல நஞ்சு தோய்த்து அம்பைப் பான்படுத்தினான்; இக்காலத்து மனிதன் நச்சுப் புகையைப் பயன்படுத்துகிறான். அவ்வளவுதான் வேறுபாடு.' அவர் பேச்சு வேடிக்கை போலத் தோன்றினாலும் உண்மை நிறைந்தது. மனத்தன்மையிலே ஆதிமனிதனும் இன்றைய மனிதனும் ஒன்றாகத்தான் இருக்கிறார்கள். விலங்கு உணர்ச்சி மாறி நெஞ்சிலே இன்னும் தண்மை அதிகம் வளரவில்லே என்பது அவர் கருத்து.

உலகத்திலே ஒரு பெரிய கொடிய யுத்தம் முடிந்து இருபது ஆண்டுகள் கூட ஆகவில்லை. மற்றொரு பயங்கர யுத்தம் வெடித்துவிட்டது. அதுவுந்தான் முடிந்து விட்டதே என்று கூறலாம். உலக சமாதானத்திற்கும், உலக ஒற்றுமைக்கும் ஐக்கிய நாடுகளின் சங்கமும் திறந்துவிட்டதே என்றுகூடக் கேட்கலாம். ஆனால், சண்டை முற்றிலும் ஓய்ந்து விட்டதென்று யாரும் கூற முடியாது. பல பாகங்களிலே அது புகைந்து கொண்டிருக்கிறது. எப்பொழுது இது பெரு நெருப்பாக மறுபடியும் ஓங்கி விடுமோ என்ற கவலை உள்ளத்தைப் பீடித்துக் கொண்டிருக்கிறது. ஐக்கிய நாடுகளின் சங்கத்

For more ebooks visit: https://getmyebook.in/

தலைவர் அன்மையிலே பேசியிருப்பதைப் பார்த்தால் அந்தச் சங்கத்தினால் உலகத்தில் யுத்தம் வராமால் தடுக்க முடியும் என்ற நம்பிக்கை ஏற்படவில்லை. அதற்கு எதிராக மூன்றாவது உலக யுத்தத்தைப் பற்றிய பேச்சும் இன்று கேட்கின்றது. அணுக்குண்டு செய்வதிலும், அதை ஊழிக் கனவாகவே உருவெடுக்கச் செய்வதிலும், நாடுகள் ஒன்றோடொன்று போட்டியிட்டுக் கொண்டிருக்கின்றன.

அணுக்குண்டு ஆராய்ச்சியின் வேகம் நஞ்சுபோல ஏறிக்கொண்டிருக்கிறது. பல சிறந்த அறிஞர்கள் அதன் அச்சமூட்டும் விளைவைப்பற்றிப் பேசியுள்ளார்கள். எச். ஜி. வெல்ஸ், "இனிமேல் மனித இனம் உலகில் வாழ முடியாது" என்று சொல்லி விட்டுப் போய்விட்டார். அவர் கூறியது போலப் பல விஷயங்கள் நடந்திருக்கின்றன. இதுவும் அவ்வாறு நடக்காமல் இருக்கவேண்டுமே என்று சிந்தனையாளர் சிலர் கவலைப்படுகிறார்கள். ஐன்ஸ்டைன் சொல்லுகிறார்: "அணுக்குண்டு யுத்தத்தால் மனிதக் கூட்டம் முழுவதும் அழிந்து போகாது; முக்கால்வாசி கழியலாம்; காடுகளிலும் மலைகளிலும் வசிக்கும் சாதியார்கள் மிஞ்சுவார்கள்." "இனிமேல் யுத்தம் என்றால் துப்பாக்கி எடுத்துச் சுடவேண்டியதில்லை; ஒரு பொத்தானை அழுத்தினால் போதும். உலகம் தவிடு பொடியாகிவிடும்", என்ற பேச்சு இன்று சாதாரணமாகிவிட்டது.

இந்தச் சூழ்நிலையில் வைத்துத்தான் காந்தியடிகளின் தோற்றத்தை நாம் எண்ணிப் பார்க்க

For more ebooks visit: https://getmyebook.in/

வேண்டும். மனித சமூகத்தை இந்த வையகத்திலே நிலைபெற்று வாழச் செய்வதற்கு ஒரே ஒரு வழிதான் இருக்கிறது அதுதான் அடிகள் எடுத்துக் காட்டியுள்ள அன்பு வழி. அதை ஏற்றுக்கொள்ளாவிடில் மனிதனுக்கு உய்வில்லை; அவனுடைய இனம் அறிஞர் வெல்ஸ் கூறியபடி மறைந்தொழிந்து போக வேண்டியதுதான். இந்த எச்சரிக்கையைச் செய்ததே மகாத்மா காந்தி உலகத்திற்குப் புரிந்த மிகப் பெரிய பணியாகும். “அன்பும் அகிம்சையும் அவரையே காக்கவில்லை; அவை உலகத்தை எப்படிக் காக்கும்?” என்று சிலர் ஐயுறுகிறார்கள். அது சரியல்ல. அன்பும் அகிம்சையும் அவரைக் காக்கவில்லையென்று நினைப்பது தவறு. அவருடைய மறைவில் அடங்கியுள்ள தத்துவத்தை அறிந்துகொள்வது அவ்வளவு எளிதல்ல. இயேசுநாதர் சிலுவையிலே உயிர் கொடுத்தார். எதற்காக? அவருடைய அன்புக் கொள்கை உயிர் பெறுவதற்காக, அவர் சிந்திய செங்குருதியிலே அது உரம் பெற்று வளர்ந்தோங்கியது. அதிலே புலனாகும் உட்கருத்தை அடிகளின் மறைவோடு ஒட்டிப் பார்க்கவேண்டும். அழிவுப் பாதையிலே உலகம் போகிற வேகத்தைப் பார்க்கும்போது அதற்குச் செய்ய வேண்டிய எச்சரிக்கை மிகப் பெரிதாகிவிட்டது; கவனத்தை ஒரே அடியாக இழுத்துச் சிந்தனையைத் தூண்டக் கூடியதாக இருக்கவேண்டியதாகிவிட்டது. அதற்குக் காந்தியடிகள் தமது இறுதித்தியாகத்தைச் செய்தார். நூற்று இருபத்தைந்தாண்டு வாழ்வேன் என்று கூறியவர், “உலகம் போகிற போக்கைப் பார்க்கிற போது அதில் வாழ எனக்கு விருப்பமில்லை" என்று சொல்லும்படியாகிவிட்டது. ஆனால் அவருடைய

For more ebooks visit: https://getmyebook.in/

மறைவு உலகின் மேல் வெறுப்பாலோ அல்லது சலிப்பாலோ ஏற்பட்டதல்ல: அது பேரன்பால் ஏற்பட்டது.

இவருக்கு முன்னே பல பெரியார்கள் இதே அன்பு நெறியை உலகிற்குப் போதித்தார்கள். "ஆருயிர்கட் கெல்லாம் நான் அன்பு செயல் வேண்டும்" என்று விரும்பினார் தம்மிடையே தோன்றிய இராமலிங்க வள்ளலார். "அனைவரும் இறைவனுடைய வடிவங்கள்: அனைவரும் ஒன்றே; அனைவருக்கும் அன்பு செய்யுங்கள்" என்று கூறிக் கொண்டு இராமகிருஷ்ண பரம ஹம்சர் வந்தார். அரசியலிலும், வாழ்க்கையில் எல்லாத் துறைகளிலுமே அன்பு நெறி சக்தி வாய்ந்தது என்று காந்தி அடிகள் காண்பித்தார். அவருடையர் கொள்கை ஏதோ கனவு காண்பவனுடைய ஆசையாக நின்றுவிடவில்லை. நாட்டின் விடுதலைக்கே அது வெற்றி வழியாயிற்று. இந்தியாவிற்கு அதனால் விடுதலை கிடைப்பது சாத்தியமாயிற்றென்றால் உலகில் எந்தக் காரியத்திற்கும் அது நிச்சயமாகப் பயன்படும் என்பது திண்ணம் அல்லவா?

சமய சஞ்சீவியாகக் காந்தி அடிகள் காட்டியுள்ள இவ்வன்பு வழியை மேற்கொள்ளாவிடில் மானிட சாதிக்கு இன்பமில்லை, உய்வில்லை என்பதைத் தெளிந்த சிந்தனையாளர்கள் பலர் உணர்ந்துகொண்டிருக்கிறார்கள். அந்த நெறியைக் காட்டியதுதான் அடிகள் செய்த அரும்பணி. அதிலே ஒரு சிறிய பகுதி தான் இந்திய விடுதலை, உலகத்திலே அமைதி நிலவ வேண்டுமானால் எல்லா நாடுகளும் சமமாக இருக்க வேண்டும். அடிமைக்கும் ஆண்டானுக்கும் இடையிலே சகோதரத்துவம் வளர

For more ebooks visit: https://getmyebook.in/

முடியாது. உலகம் ஒரு குடும்பமாக இன்புற்று வாழவேண்டுமானால் இத்தகைய ஏற்றத் தாழ்வுகள் முதலில் மறைய வேண்டும். அதனாலேயே காந்தியடிகள் இந்திய விடுதலையில் தமது சேவையை ஆரம்பித்தார்.

காந்தியடிகளின் உபதேசம் புதியதல்ல. அவர் அதை வாழ்க்கையில் எல்லாத் துறைகளிலும், அரசியலிலும் புகுத்தி வெற்றி கண்டதுதான் புதுமை. பாரதத்தின் பண்பாட்டிலே ஊறித் தெளிந்தது அவருடைய சத்திய நெறி. அதை உலகிற்கு எடுத்துக்கூற நமக்கு அதிக உரிமையுண்டு. ஆனால், அந்த உரிமைக்கு முதலில் நாம் பாத்திரமாக வேண்டும். காந்தியத்தை முதலில் நாம் கைக்கொள்ள வேண்டும். தமக்குள்ளே பூசலையும் பிரிவினையையும் வளர்த்துக்கொண்டு உலகத்திற்கு அன்பு நெறி உபதேசம் செய்ய இயலாது. காந்தியடிகள் காட்டிய நெறியிலே தாம் நிலைத்து நிற்கவேண்டும். நமக்குள்ளே இருக்கும் குறுகிய எண்ணங்களையும், வெறுப்புக்களையும் ஒதுக்கவேண்டும். அவ்வாறு செய்வதே பிறருக்கு நல்ல எடுத்துக்காட்டாக அமையும். அதனால் உலகத்தை ஒரு குடும்பமாகப் பிணைத்துவிடலாகும். விமானத்திலேறி உலகத்தை ஓரிரு நாட்களில் சுற்றி வருவதால் மட்டும் உலகம்

ஒரு குடும்பமாகிவிடாது. உள்ளம் உலகத்தைதே அன்பால் பிணிக்கவேண்டும். அதற்கு முதலில் அண்டை வீட்டானை நேசித்துப் பழகவேண்டும். அவ்வாறு செய்வதால் காந்தியடிகள் நமக்கு அளித்த சுதந்திர இந்தியாவை உன்னத நாடாக மாற்றுவதோடு

For more ebooks visit: https://getmyebook.in/

உலகத்திலே மானிட சாதி இன்புற்று வாழ வழி கண்டவர்களாவோம். அடிகள் உலகத்திற்குச் செய்த எச்சரிக்கை வீண் போகாமல் இருப்பதற்கு நம்மால் இயன்ற பணியைச் செய்வோம் என்று நாம் உறுதி கொள்வோமாக. வாழ்க காந்தியம்!

For more ebooks visit: https://getmyebook.in/

# மதம் தேவையா?

இன்று ஒரு புதிய துடிப்பு நம் உள்ளத்திலே ஏற்பட்டிருக்கிறது. அறிவினால் எதையும் ஆராய்ந்து பார்க்க வேண்டுமென்ற புதிய கிளர்ச்சி அது. கண் மூடித்தனமாகப் பலவற்றை இதுவரை ஒப்புக் கொண்டதுபோல இனிமேலும் ஒப்புக்கொள்ள நாம் விரும்புவதில்லை. இது வளர்ச்சிக்கு அறிகுறி. நமது சமூகத்திலே படிந்துள்ள மாசை நீக்கிப் புதிய உயிர் பெற்று வேகமாக முன்னேறிச் செல்வதற்கு அடையாளம்.

மதம் அவசியமா என்ற கேள்வியும் இப்புதிய துடிப்பின் காரணமாகவே தோன்றியிருக்கிறது. மதத்தின் பெயராலே பல பெரிய அநீதிகள் நடந்திருக்கின்றன; நடக்கின்றன. இன்றும் வளர்ச்சிக்கு முட்டுக் கட்டையாக மதம் பயன்படுத்தப்படுகின்றது. பிறப்பினால் உயர்வு தாழ்வு மதத்தின் பெயரால் கற்பிக்கப்படுகின்றது. எல்லா உயிர்களுக்கும் தந்தையென மதமே முழங்குகின்ற இறைவன் திரு முன்பும் அம் மதத்தின் பெயராலேயே வேறுபாடுகள் தென்படுகின்றன. சமூகத்திலே வெளிப்படையாகத் தெரிகின்ற ஒரு தீய பழக்கத்தை ஒழிக்க முயன்றால் அதற்கும் மதம் தடையாகப் பல சமயங்களில் குறுக்கிடுகின்றது. சமூக வளர்ச்சிக்காகப் புதிய வழியிலே எண்ணிப் பார்க்கலாமென்றால், "அதுவும் கூடாது; அது கடவுளின் கட்டளைக்கு மாறுபட்டது" என்று மதத்தின் பெயரால் கூறப்படுகிறது. தாழ்த்த

For more ebooks visit: https://getmyebook.in/

நிலையிலே இருக்கும் ஒருவனை உயர்த்தலாமென விரும்பினால், "அது அவன் விதி, அவனை உயர்த்துவதற்கு நீ யார்?" என்ற பேச்சு மதத்தின் பெயரால் எழுகிறது. இவற்றையெல்லாம் காணும்போது வளர்ச்சியிலே ஆர்வமுள்ளவர்களின் உள்ளம் பொங்குகின்றது. இந்த மதத்தையே அழித்து விட்டால் என்ன என்று அவர்களுக்குக் கோபம் பிறக்கின்றது.

ருஷியா நாட்டிலே மதத்தின் பெயரால் நடந்த அநீதிகளைக் கண்டு புரட்சித் தலைவர்கள் சீறினார்கள். பொதுவுடைமைக் கட்சியைச் சேர்ந்த யாரும் எம் மதத்தையும் பின்பற்றக் கூடாது என்று தடை விதித்தார்கள். அவர்களை நாஸ்திகர்கள் என உலகமெலாம் தூற்றியதையும் பொருட்படுத்தாமல் அவர்கள் தம் கொள்கைகளைப் பின்பற்றினார்கள். ஒரு புதிய சமூகத்தை உண்டாக்கினார்கள். அச் சமூகத்தைப் பழித்தும், அதில் மக்களுக்குச் சுகமே இல்லையென்றும் வேறு நாடுகளிலே தீவிரமாகப் பிரசாரம் நடந்தது: மதக் குருக்கள்மார் இதில் உற்சாகத்தோடு பங்கெடுத்துக் கொண்டார்கள். பொதுவுடைமைக் காரர்களை அரக்கர்களெனவும், அவர்கள் செய்யும் கொடுமைகளைத் தாங்காது மக்கள் அலறிக்கொண்டிருக்கிறார்களெனவும் புத்தகங்களும், பத்திரிகைகளும் எடுத்தோதி மக்களைப் பயமுறுத்தின. ஆனால், இரண்டாவது உலக மகாயுத்தம் உண்மையை வெளியாக்கிவிட்டது. ருஷிய மக்கள் அனைவரும் உலகமே அதிசயிக்கும்படி தங்கள் நாட்டிற்காகப் போரிட்டார்கள். தோல்விக்கு மேல் தோல்வி ஏற்பட்ட

For more ebooks visit: https://getmyebook.in/

ககாலத்திலும் அவர்கள் தங்கள் உறுதியிலிருந்து மாறவில்லை. அந்நாட்டிலே அரக்கர்களுடைய அரசு நடந்திருந்தால் மக்கள் அதற்காக ஆயிரக்கணக்கில் தங்கள் உயிரைத் தியாகம் செய்ய முன் வந்திருக்கமாட்டார்கள். புதிய சமுதாயத்திலே மகிழ்ச்சியும் பலமும் பெற்றுப் புதிய உயிரொளியோடு விளங்கியிராவிட்டால் அந்நாடு இந்த யுத்தத்திலே வெற்றி கண்டிருக்க முடியாது. இதைக் கண்ட நம் மக்களும் எண்ணமிடலானார்கள். நாம் மட்டும் இந்த மதத்தை விடாமல் பிடித்துக்கொண்டு வளர்ச்சி குன்றியிருப்பானேன்? மதத்தைப் புறக்கணித்துவிட்டு வேறு ஒரு நாடு சிறந்த முறையில் முன்னேறி யிருக்கிறதென்றால் நாமும் ஏன் அவ்வாறு செய்யக்கூடாது என்று வேகமாகக் கேட்கலானார்கள்.

இன்று காணப்படும் அழிம்புகளைக் கண்டு உள்ளம் கொதித்த இவர்கள் தங்களுக்கேற்பட்டுள்ள நியாயமான சீற்றத்தின் வேகத்திலே ஒரு உண்மையை மறந்துவிட்டார்கள். இவர்கள் எதை மதமெனக் கண்டிருக்கிறார்களோ அது உண்மையான மதம் அல்ல. "கிறிஸ்து மகான் உபதேசித்தது கிறிஸ்து மதம்; சர்ச்சு உபதேசிப்பது சர்ச்சு மதம்" என்று ஒரு அறிஞர் கூறியது போல் உண்மை மதம் வேறு. கோயில்களில் நடைமுறையில் இருக்கும் மதம் வேறு. மதம் என்பது வாழ்க்கை நெறி. வாழ்க்கையை நல்ல முறையிலே எவ்வாறு வாழலாம் என்பதைச் சொல்லுவதே மதம். ஒரு ஆங்கிலப் பெரியார் கிறார்: “மதம் என்பதன் பொருள் என்ன ? அது உள்ளத்திலே நன்னெறியைப் பதிய வைப்பது; சுய நலம், பேராசை முதலியவற்றை

For more ebooks visit: https://getmyebook.in/

எதிர்த்து நிற்கும் ஆற்றலைத் தருவது நடத்தையையும் நோக்கத்தையும் தூய்மைப் படுத்துவது; காமத்தை வெல்ல உதவுவது; உண்மை பேசுதல், நாணயமாக நடத்தல், கருணையோடு வாழுதல், பிறர் குற்றம் பொறுத்தல், சிறிய செய்கையிலும் மனச்சான்றின்படி நிற்றல் ஆகியவற்றைக் கடைப்பிடித்துத் துணிவுடனிருக்கச் செய்வது சொந்த வாழ்க்கையிலும், பிறர் கண் முன்பும், பிறர் காணாதவிடத்திலும், எப்பொழுதும் நன்னெறியையே சார்ந்து நிற்கச் செய்வது ; சீரிய கொள்கையைக் கைக்கொண்டு நடப்பதோடல்லாமல் என்றும் புத்துயிர் பெற்று வாழச் செய்வது இவற்றை யெல்லாம் கொண்டதே மதம்" என அவர் விரித்துரைக்கின்றார். ஆகவே, மதம் என்பது வாழ்க்கையைச் சீரிய முறையிலே நடத்துவதைப் போதிப்பதும், வாழ்க்கையின் உண்மைக் குறிக்கோளை அடையச் செய்வதுமாகும். அதை வேண்டாமென மறுப்பது நல்வாழ்க்கையையே மறுப்பதாகும்.

"நல்வாழ்க்கை வாழ்வதற்கு நீதி நெறிகள் மட்டுமிருந்தால் போதுமே, மதம் எதற்கு?" என்று சிலர் கேட்கலாம். உலகத்தில் இன்பம் நிலவ வேண்டுமானால் ஒவ்வொரு தனி மனிதனும் நன்னெறியில் ஒழுகவேண்டும் என்று எல்லோருக்கும் சிறு வயது முதற்கொண்டே அறிவூட்டிவிட்டால் நாம் விரும்புகின்ற பயன் கிடைத்துவிடும்; அதற்கு மதம் தேவையில்லையென அவர்கள் கருதலாம். தனிமனிதனுடைய சுகமும் நன்னெறியில் நிற்பதாலேயே ஏநிற்படுகின்றதென்றும் அறிவுறுத்தி அதன் மூலம் மேலே எடுத்துக் காட்டிய ஆங்கிலப்

For more ebooks visit: https://getmyebook.in/

பெரியார் எதிர்பார்க்கும் பயன்களைப் பெறலாமே என்றும் அவர்கள் கேட்கலாம். இவ்வாறு செய்தால் குருட்டு நம்பிக்கைகளும் உயர்வு தாழ்வுகளும், மூடப் பழக்க வழக்கங்களும், சமயப் பூசல்களும் ஒழிந்து விடுமல்லவா என்றும் அவர்கள் வினவலாம்.

நன்னெறியைக் கடைப்பிடித்து நிற்கும்படி அறிவுறுத்துவதனால் இன்றுள்ள ஏற்றத் தாழ்வுகளைப் போக்கிவிடலாம்; அதனால் வாழ்க்கையில் பல வசதிகளும் சுகமும் கிடைக்கும்படி செய்யலாம் ; அதில் ஐயமில்லை. ஆனால், அதற்காக மதத்தைப்புறக்கணிக்க வேண்டிய தேவையில்லை. மதம் அதற்கு முட்டுக்கட்டையல்ல. மதமும் அதையே செய்ய முயல்கின்றது. அதுமட்டுமல்ல, இந்த நன்னெறிப்போதனை செய்யாத வேறொரு முக்கியமான காரியத்தையும் மதம் செய்ய முயல்கின்றது. நன்னெறிப் போதனையானது உலக வாழ்க்கையோடு நின்றுவிடுகின்றது. மதம் அதற்கு மேலும் செல்லுகின்றது. உலக இன்பத்தையே முடிவாகக்கொண்டு வாழ்க்கை நடத்தினால் மக்கள் என்றும் மனநிறைவு பெறவே முடியாது. அவர்கள் எதிர்பார்க்கும் இன்பத்திற்கு ஒரு எல்லை வகுக்கவும் இயலாது. உலக இன்பத்தின் இயல்பே ஆசையைப் பெருக்குவதுதான். ஆதலால், மக்கள் அனைவரும் தமது சுகத்திலேயே கண்ணாக இருக்கத் தொடங்கினால் அதில் மனநிறைவு பெறாமல் ஏங்கவும், அதன் பயனாகத் தன் நலத்தையே பெரிதாக எண்ணவும் தலைப்பட்டுவிடுவார்கள். அது முடிவில் தம் சுகத்தையே நாடும் விலங்கு நிலைக்கு இழுத்துச்

For more ebooks visit: https://getmyebook.in/

சென்றுவிடும். அதனால்தான் ஒரு பெரியார் கூறுகிறார்: "மக்கட் சமுதாயத்திலிருந்து மதத்தை அகற்றிவிட்டால் அது விலங்குக் கூட்டமாக முடியும்." நீதி நெறிகளால் உலகத்தில் எல்லாவிதமான உயர்வு தாழ்வுகளும் நீங்கலாம்; எல்லோருக்கும் சுகங் கிடைக்கலாம். ஆனால், அவ்வாறேற்பட்ட வாழ்க்கையில் முழு மன நிறைவு ஏற்படுமென்று சொல்ல முடியாது.

உலக இன்பங்கள் எல்லாவற்றையும் பெற்று வாழக்கூடிய நிலையில் பலர் இன்று இருக்கின்றார்கள். அவர்கள் அனைவருக்கும் வாழ்க்கையில் முழு மனநிறைவு கிடைத்து விடுகிறதில்லை. பெறுவதற்கரிய ஏதோ ஒன்றை விரும்பி மனித உள்ளம் ஏங்கிக் கொண்டிருக்கிறது. அதை உலகத்திலுள்ள எந்த இன்பப் பொருளிலாவது பெற முடியுமா என்று தேடித் தேடி அலைந்து ஏமாற்றமடைகின்றது. அந்த நிலைத்த இன்பத்தை அளிக்கத்தான் மதம் முன்னிற்கிறது. கடவுட் கொள்கையில்லாத தன்னெறி வாழ்க்கை உலக இன்பங்களை நல்கலாம்; ஆனால் மதமானது அவற்றோடு நிலைத்த இன்பத்தையும் மன நிறைவையும் தரக்கூடிய உயர் நெறியைக் காட்டுகிறது. ஆகையால்தான் மதம் தேவை என்று கூறுகிறோம்.

மதத்தின் பெயரால் பல சிறுமைகள் நடக்கலாம். ஆனால், அவற்றிற்காக மதத்தையே கணிப்பது அறிவுடைமையல்ல. விஞ்ஞானம் பல கொடுமையான அழிக்கும் படைகளுக்குக் காரணமாக இருக்கின்றது. அதனால் விஞ்ஞானத்தையே வேண்டாமெனத் தள்ளி விடலாமா? அவ்வாறு செய்ய நினைப்பது எப்படித்

For more ebooks visit: https://getmyebook.in/

தவறாகுமோ அது போலவே மதத்தை விலக்க நினைப்பதும் தவறாகும். மதத்தின் பெயரால் நடைபெறும் அநீதிகளை நாம் களைந்தெறியலாம்; உறுதியுடன் களைந்தெறிய வேண்டும். பொற்சிலையிலே தூசு படிந்திருந்தால் தூசைத் துடைத்தெறிய வேண்டுமே ஒழியச் சிலையை உடைத்தெறியக் கூடாது.

உண்மை மதத்தினின்றும் வேறுபட்டிருக்கிற புறச் சடங்குகள், வழிபாட்டு முறைகள் முதலியவற்றில்தான் குறைபாடுகள் பெரிதும் இருக்கின்றன. அவைகளே வேற்றுமைக்கும் காரணம். ஒவ்வொரு மதத்திலும் பொதுவாக மூன்று படிகள் இருக்கக் காண்கிறோம். தத்துவம், புராணம், சடங்குகள் என்பன அவை. புராணமும் சடங்குகளும் சாதாரண மக்களுக்கு உண்மையை எளிய முறையில் விளக்கிக் காண்பிப்பதற்காக எழுந்தவை. அவைகளிலே பல அந்த அந்தக் காலத்திற்கேற்றவாறு உண்டாக்கப்பட்டவை. அவை எக்காலத்திற்கும் வேண்டப்பட்டவை யல்ல. ஆதலால் அவற்றிலே உள்ள குறைபாடுகளையும், பயனெழிந்தவைகளையும் களைந்து விட வேண்டும். மாறாத தத்துவங்களையும் மற்றவைகளையும் வேறு வேறாகப் பிரித்துணராமல் கண்மூடித்தனமாக அனைத்தையும் பின்பற்ற முயல்வது கடவுளுக்குத் துரோகம் செய்வதாகும். இறைவன் நமக்நமக்களித்துள்ள அறிவை நல்வழியிலே பயன்படுத்தாதிருப்பது துரோகமல்லவா? சுவாமி விவேகானந்தர் ஓரிடத்திலே கூறுகிறார்: "தனது அறிவைப் பயன்படுத்தும் ஒருவன் இறைவனிடத்து

For more ebooks visit: https://getmyebook.in/

நம்பிக்கையில்லாதிருப்பினும் அவனை இறைவன் மன்னித்து விடுவார்; ஆனால் அறிவைப் பயன்படுத்தாது குருட்டுத்தனமாக நம்புவனை அவர் மன்னிக்கமாட்டார் என்று நான் நம்புகிறேன்."

குறைபாடுகள் இருப்பதால் மதத்தையே ஒழித்துவிட வேண்டுமென்பதை யாரும் ஏற்றுக் கொள்ள முடியாது. மேலே படிந்திருக்கிற மாசையெல்லாம் விலக்கி விட்டுப் பார்த்தால் பெரிய உண்மைகளை மதம் காண்பிப்பதை அறியலாம். மனிதனுக்கு நிலைத்த மன அமைதியையும், இன்பத்தையும் அளிக்கக்கூடிய உண்மைகளை, அதில் காணலாம். சிறந்த ஞானிகள் தங்கள் பெருமுயற்சியினால் கண்டறிந்த மறை பொருள்களை நமக்கு மதத்தின் மூலம் அளித்திருக்கிறார்கள். உலகத்திலே ஓரிடத்திலல்ல, பல நாடுகளிலே மகான்கள் இருந்திருக்கிறார்கள். அவர்கள் தங்கள் மெய்ஞானத் தேட்டத்திலே அடைத்த அநுபவங்களை நமக்கு விட்டுச் சென்றிருக்கிறார்கள். நடு நிலைமையோடு ஆராய்ந்து பார்ப்பவர்களுக்கு அவை அனைத்தும் ஒன்றிற்கொன்று மாறுபட்டவை யல்லவென்று தெளிவாகும். அவற்றிலே வீண் வாதங்களுக்கோ உயர்வு தாழ்வுகளுக்கோ, அநீதிகளுக்கோ இடம் இல்லை. ஆதலால் அவற்றை அறிந்து நாம் பயனடைய வேண்டும்.

மதம் மதம் என்று பேசிக்கொண்டிருப்பவர்களிடத்தே முயற்சி இல்லை யென்றும், அவர்கள் உலகத்தை வெறுத்துப் பேசிச் சமுதாய முன்னேற்றத்திற்குப் பாதகமாக இருக்கிறார்களென்றும், மத விஷயங்களிலே அதிகக் கவனம் செலுத்தியதனால்

For more ebooks visit: https://getmyebook.in/

தான் இந்நாடு தாழ்வுற்றதென்றும் சிலர் கூறுகிறார்கள். இக்குறைபாடுகளெல்லாம் மதத்தைச் சரியானபடி புரிந்து கொள்ளாததினால் ஏற்பட்டவையே ஒழிய மதத்தினால் உண்டானவையல்ல என்று நான் அழுத்தமாகக் கூற விரும்புகிறேன். மதத்தை உண்மையாகப் பின்பற்றுகிறவர்கள் தான் அருஞ்செயல்கள் ஆற்ற முடியும் என்பது எனது நம்பிக்கை. மதம் கடமையைப் புறக்கணிக்கச் சொல்லவில்லை; மதம் கடமையைப் பற்றற்ற நிலையிலிருந்து உயர்ந்த முறையில் செய்யும்படி போதிக்கின்றது.

மதத்தின் மூலம் உலகம் அனைத்தையும் ஒரே குடும்பமாகவும், எல்லா உயிர்களுக்கும் அன்பு செய்து வாழ்தலே உண்மையான இன்பத்திற்கு வழியெனவும் உணரலாகும். அவ்வுணர்ச்சியால் நாம் இன்று விரும்பும் எல்லா விதமான சமத்துவத்தையும் பெறலாம். ஒவ்வொரு ஆன்மாவும் இறைவனது அம்சமென்று மதம் போதிக்கின்றது. இந்த உண்மை நீதி நெறிகளை மட்டும் கடைப்பிடிப்பதால் வெளியாகாது. ஆகவே, மத உணர்ச்சியற்ற நாட்டிலே தனி மனிதனுக்கு அளிக்கவேண்டிய மரியாதை இராது. ஒவ்வொரு உயிரும் இறைவனின் அம்சம் என்பதை அறிந்து கொண்டால் பிறகு வேறுபாடுகளுக்கு இடமேது? ஆதலால் மதம் என்பது உயர்ந்த

உண்மையைக் காட்டும் நெறியென்றும், அதைப் பின்பற்றா விடில் மனக்கவலை மாற்றல் அரிது என்றும், சடங்குகள் முதலானவைகள் மதத்தில் நிலையான முக்கிய பகுதிகள் அல்லவென்றும்,

For more ebooks visit: https://getmyebook.in/

அவற்றில் காணப்படும் குறைபாடுகளை அவ்வப்போது களைந்துவிட்டு மதத்தைப் பின்பற்ற வேண்டியது சிறந்த முறை என்றும் நாம் அறியவேண்டும். மேல் நாடுகள் விஞ்ஞானம் முதலிய சாதனங்களைக் கொண்டு உலக இன்பத்தை நாடின; கீழ்நாடுகள் தத்துவ விசாரணையில் நின்று ஆன்மிக வளர்ச்சியை நாடின. இரண்டிலுமுள்ள சிறப்பியல்புகளின் சேர்க்கையிலேதான் உலகம் இன்பமடைய முடியும்.

For more ebooks visit: https://getmyebook.in/

# மாலைப் பொழுதினிலே

**ச**ரேலென்று வந்த சிறு தூறல் அடங்கிவிட்டது. மரங்கள் மட்டும் இலை நுனியில் கோத்துவைத்திருந்த முத்துப்போன்ற துளிகளை இன்னும் சொட்டிக் கொண்டிருக்கின்றன. பச்சைக் கிளியொன்று கீச்சிட்டு இலைகளிடையே பாய்கின்றது. அதனால் ஏற்பட்ட அசைவினாலே திபுதிபுவென்று வேகமாக முத்துச் சொட்டுக்கள் விழுந்து எனக்குப் பன்னீர் தெளிக்கின்றன. காக்கைகளும் மைனாக்களும் நனைந்த சிறகுகளை உலர்த்திக் கோதி அழகு செய்து கொண்டே ஏதேதோ உற்சாகமாக உரையாடுகின்றன.

எங்கும் ஒரே புதுமை உணர்ச்சி பொங்குகிறது. பகவெல்லாம் கதிரவனின் வெம்மையில் வாடியதால் உண்டான சோர்வுக்கு மாலையிலே திடீரென்று வீசிய காற்றும், பிறகு அது அடங்கி வீழ்ந்த துளிகளும் மாற்றாக வந்தன. சோர்வு நீங்கிப் புதிய உற்சாகம் எங்கும் கொப்புளித்துக்கொண்டிருக்கிறது. எங்கும் ஒரு புது இளமை, எங்கும் ஒரு புது வனப்பு. தண்ணெனப் பெய்த மாரியில் ஆடி இயற்கையானது களைப்பு நீங்கிக் கொம்மாளம் அடித்துக் கொண்டிருக்கிறது.

வானத்தை மூடியிருந்த மேகப்படாமும் எப்படியோ சட்டென்று மறைந்துவிட்டது. ஆங்காங்குப் பஞ்சுப் பொதிகள் போலச் சில வெண் மேகங்களே மிதந்துகொண்டிருக்கின்றன. வானத்தின் நீலத்திலும் ஒரு தெளிவு காண்கிறது. கழுவி எடுத்த நீலம் என்று சொல்லும்படி நீல நிறம் அவ்வளவு ஆழ்ந்து

For more ebooks visit: https://getmyebook.in/

அடுக்கின்மேல் அடுக்காக நீலத் திரையை வைத்தது போன்று காட்சியளிக்கிறது. அந்தி ஞாயிற்றின் பொற்கிரணங்களும் மழை நீராடிப் புத்தொளி பெற்றுவிட்டனபோலும். நிலப் பரப்பெல்லாம் அற்புதமான தெள்ளிய மஞ்சள் வெயில் படர்ந்திருக்கிறது.

எதிரே நீண்டு நிமிர்த்துள்ள நீலமணிக் குன்று, இந்தப் புதுக் கிரணங்களில் மூழ்கி அதன் மந்தமான வெதுவெதுப்பைத் துய்த்துக்கொண்டு படுத்திருக்கிறது. அதன் முகத்திற்கு மட்டும் வெயில் படாதவாறு ஒரு மேகப் புதர் எதிரே நின்று குடை பிடித்துக்கொண்டிருக்கிறது.

அந்த உள்ளத்திற்கினிய காட்சியைப் பார்க்கக் கொடுத்து வைத்தேன் நான். அதன் அழகிலே சிந்தையைச் செலுத்தி அப்படியே நடக்கலானேன். கண்ணுக்கெட்டிய தூரம் வரையில் ஓர் ஊர் கிடையாது. சுற்றிலும் மேட்டு நிலம், சோளப் பயிர், துவரைச் செடி, இளம் வரகுக் கதிர் இவைதாம் புனல் குடைந்து புது வனப்புப் பெற்று மேலெழுந்த இளங் குமரிகள் போலப் புனங்களில் விளங்கின. நான் புனத்தினூடே புகுந்து மேற்கு நோக்கிக் கால் எடுத்து வைத்தேன்.

பெரும்புறா ஒன்று ஆழ்ந்த குரலில் தனது துணையைக் கூவியழைக்கத் தொடங்கி விட்டது. அதனுடைய குரல் எத்தனை தூரந்தான் கேட்குமோ! வெகு தொலைவிலிருந்து அன்பு கனிந்த பதில் குரல் வந்தார். பக்கத்திலே எனக்கும் ஒரு துணை இருந்தால்

For more ebooks visit: https://getmyebook.in/

இன்னும் நன்று இருக்குமே என்ற எண்ணம் எப்படியோ உதயமாயிற்று.

என் மனமறிந்து உற்ற துணையாகத் தனி வழியிலே வரக்கூடியவள் ஒருத்திதான் உண்டு. இயற்கை தரும் இன்பத்தையும் அறிவையும் பன்மடங்கு பெருகும்படி செய்ய வல்லவள் அவள். அவள் தான் கவிதைக் கன்னி. அவளுடைய காதலைப் பெற்று விட்டவர்கள் பாக்கியசாலிகள் என்பது என்னுடைய கருத்து. உலாவப் போகும்போது தனியாகச் செல்லவேண்டும். கவிதைப் பெண்ணின் காதலும் வாய்த்திருந்தால் இந்தத் தனிமையைவிட இன்பம் பயப்பது வேறொன்றும் இல்லை. அவளும் தனிமையிலேயே நம்முடன் உறவாடப் பெரிதும் விரும்புகிறாள். அந்த நிலையிலே தான் நானும் அவள் காதலைப் பெற்றேன்.

**பேச்சுக் கிடமேதடி-நீ**
**பெண்குலத்தின் வெற்றியடி**

என்று நான் வாய்விட்டுப் பாடிக்கொண்டே நடந்தேன்.

ஓரிடத்தில் ஆடுகள் கும்பலாக மேய்ந்தன. ஒரு கல்லின்மேல் வயது முதிர்ந்த இடையன் ஒருவன் உட்கார்ந்து புல்லாங்குழலில் இசை பொழிந்து கொண்டிருந்தான். சாதாரணமான தெம்மாங்கு தான் அது. இருந்தாலும் அந்தச் சந்தி வேளையிலே அதற்கு ஏதோ ஓர் அலாதியான இனிமை இருந்தது. வானவெளி எல்லாம் அந்த நாதத்தின் நிறைவு தான். புல் மேயும் ஆடுகளும் அதைத் துய்த்து மகிழ்ந்தன.

For more ebooks visit: https://getmyebook.in/

ஆட்டுக் குட்டிகளுக்கு ஒரே களியாட்டம், துள்ளித் துள்ளிக் கால்களைக் காற்றில் வீசி எழுந்து தாவியும் பாய்ந்தும் விளையாடின. "அடடா, இந்த உயிரினங்களெல்லாம் இப்படி மகிழ்ச்சியோடு வாழ, மனிதன் மட்டும் வாழத் தெரியாமல் சங்கடப்படுகிறானே?" என்று நினைத்தேன். அப்படி எண்ணியவாறே சிந்தனையில் ஆழ்ந்து நின்றுகொண்டிருந்தேன். ஆட்டிடையன் மெதுவாக அருகே வந்து, "சாமி, ஆட்டுக்குட்டிகளைப் பார்த்துக் கொண்டே நிற்கிறீர்களே?" என்று பேச்சுக் கொடுத்தான்.

நான் சட்டென்று அவன் பக்கம் திரும்பி, "ஆமாம், இந்த ஆட்டுக்குட்டிகளுக்காவது வாழத் தெரிகிறது. மனிதனுக்கு அதுகூட முடியவில்லையே என்றுதான் எண்ணிக் கொண்டிருக்கிறேன்" என்றேன்.

"ஆட்டுக் குட்டிக்கு என்ன சாமி தெரியும்? பாவம்! நானும் - ஐம்பது வருசமாக ஆடு மேய்க்கிறேன். இருபது தலைமுறைக்குமேலே ஆடுகளைப் பார்த்தாச்சு. ஒரு நரிக்குட்டியை எதிர்த்து நிக்க இதுகளுக்கு முடியலையே?" என்று வேடிக்கையாக அவன் சொன்னான்.

அவன் சொன்னது எனக்கு ஆச்சரியமாக இருந்தது. அதிலே எவ்வளவு பெரிய உண்மை பொதிந்து கிடக்கிறது! அது மேலும் என்னைச் சிந்தனையால் புகுத்திற்று. "ஆட்டுக்குட்டியின் வாழ்க்கை அமைதியாகத்தான் உள்ளது. ஆனால், அதிலே ஏதாவது மாறுதல் உண்டா? நூறு தலைமுறைக்குப் பிறகு பார்த்தாலும் அதே வாழ்வுதானே? இடையன்

For more ebooks visit: https://getmyebook.in/

சொன்னது போல, ஓர் அற்ப விலங்கான நரியை எதிர்த்துப் போராடவாவது ஆடு கற்றுக்கொண்டிருக்கிறதா? மனிதன் எத்தனை அற்புதங்களைச் சாதித்திருக்கிறான்! அவனுக்கு இறகு இல்லை; இருந்தாலும் பறக்கிறான். இப்படி எத்தனை அருஞ்செயல்கள்! அவன் வாழ்க்கையிலே அமைதி இல்லை என்பது மெய்தான். ஒருவேளை இந்த அமைதியின்மையே அவனுடைய பெருமைக்கும் முயற்சிக்கும் காரணம் போலும். அமைதி கிடைத்து விட்டால் பிறகு முயற்சி ஏது? அவனுக்குத் தனது இன்றைய நிலையிலே திருப்தி இல்லை. அதைத் திருத்தி ஒப்பற்றதாக அமைக்க விரும்புகிறான். அதற்காக விஞ்ஞானத்தையும், மற்றக் கலைகளையும் துருவித் துருவித் தேடி அலைகிறான். பல சமயங்களிலே தவறுகளும் செய்கிறான். இன்பத்திற்காக வளர்த்த கலைகளையே துன்பப் படைகளாகவும் ஆக்கிக்கொள்கிறான். இருந்தாலும், அவனுடைய குறிக்கோள் மிக உயர்ந்தது. அதை அடையும் வரையில் அவன் மனஅமைதி பெறமாட்டான். உலகமெல்லாம் ஒரு வீடு என்றும், மக்கள் எல்லோரும் ஒரு குடும்பத்தார் என்றும், அனைவருக்கும் இன்பம் பொதுவாக ஏற்பட வேண்டுமென்றும் அவன் அறிவு சொல்லுகிறது. அதை அடைய அவன் செய்யும் முயற்சியில்தான் வழி தவறிச் சென்று முட்டி மோதிக்கொண்டு இடர்ப்படுகிறான். அவன் மட்டும் இந்த இயற்கையிலே கிடைக்கும் சாந்தியை அவ்வப்போது உலர்ந்தும் துய்க்கப் பழகிக் கொண்டால் அவனுடைய உன்னத நோக்கம் நல்ல முறையிலே, இன்ப வழியிலே வெகு

For more ebooks visit: https://getmyebook.in/

விரைவில் கைகூடிவிடும்" என்று நான் இப்படி ஆழ்ந்து எண்ணிக்கொண்டே நடந்தேன். அதனால் இடையனைக்கூட மறந்துவிட்டேன். "போய் வருகிறேன்" என்று ஒரு சொல்லாவது கூறலாமொன்று திரும்பிப் பார்த்த போது தொலைவிலே அந்த இடையன் பழையபடி கல்லில் மேல் அமர்ந்திருப்பது தெரிந்தது. மறுபடியும் அவன் குழல் ஊதத் தொடங்கிவிட்டான். அதன் இனிய நாதம் காற்றில் மிதந்து வந்து என் காதில் தேன் பாய்ச்சியது. இடையனோடு ஆடுகளும் அமைதியில் மூழ்கிக் காட்சியளித்தன.

அந்த இடையனைச் சந்தித்தது நல்லதாயிற்று. அவனுடைய வாழ்க்கையும் அவ்வாடுகளின் வாழ்க்கையைப் போலவே மாறுதல் அறியாதது. இருப்பினும் அதிலே உள்ள சாந்தியை ஓரளவிற்காவது பெற முடியுமானால் பரபரப்பும் வேகமும் நிறைந்த நகர வாழ்க்கையில், நிலைத்துள்ள மக்களுக்குப் பெரிதும் நன்மை உண்டாகும். நாட்டுப்புறங்களிலே, காட்டு வெளியிலே படிந்துள்ள அமைதி நகரத்தில் ஏது? அதை இழந்துவிட்டால் வாழ்க்கையில் வேறு என்ன இருந்தும் இல்லாதது போலத்தான். இன்பத்தையும் வசதிகளையும் முன்னேற்றத்தையும் தேடி எவ்வளவு முயன்றாலும் இயற்கை தரும் அமைதி இல்லாதவிடத்து முழு வெற்றி கிடைக்காது. மேலும் திறந்த காட்டு வெளியினிலே தனியாகக் கால்போன போக்கில் திரியும் போது வாழ்க்கையிலே கசப்பூட்டும் சிறிய செயல்கள் மறந்து போகின்றன; உள்ளம் விரிந்து உயரப் பறக்கின்றது.

For more ebooks visit: https://getmyebook.in/

அதன் பயனாகப் பிறக்கும் அமைதியும் தெளிவும் இயற்கையோடு தனித்து உறவாடியவர்களுக்குத் தான் தெரியும். இவ்வளவு பெரிய இன்பத்தைப் பெற மக்கள் அனைவரும் முற்படவேண்டும் என்ற ஆர்வத்தோடு நான் அந்த மாலைப் பொழுதிற்கு நன்றி செலுத்தித் திரும்பினேன்.

For more ebooks visit: https://getmyebook.in/

For more ebooks visit: https://getmyebook.in/

# மௌனப் பெரும் பேச்சு

**ஆ**ழ்ந்த உணர்ச்சி ஒன்று உள்ளத்திலே பொங்கி எழுகின்றது. அழகையெல்லாம் வடித்தெடுத்து உருவாக்கியது போன்ற அழகு ஒன்று கண் முன்பு தோன்றுவது அதற்குக் காரணமாக இருக்கலாம். எல்லையற்ற இன்பமோ அல்லது துன்பமோ அதை விளைவித்திருக்கலாம். காதலென்னும் தேன்நெருப்பு அந்த உணர்ச்சியின் அடிப்படையாக நிற்கலாம். காண்டற்கரிய இறைவனுடைய தோற்றங் கண்டு பெற்ற பரவச நிலையிலே அது கிளர்ந்தெழலாம். இவ்வாறு பலவேறு நிலைகளில் தோன்றும் ஆழ்ந்த உணர்ச்சிகளை ஒருவன் தன் உள்ளத்தில் உணருவது. போன்றே பிறரும் முழுமையாக உணருமாறு செய்ய முடியுமா? எவ்வகையிலாவது பிறருக்கு எடுத்துக் காட்ட இயலுமா? ஓரளவிற்கு இது சாத்தியமாகலாம். ஆனால், அந்த அளவிற்கு ஓர் எல்லையுண்டு. அதற்கு மேலே ஆழ்ந்த உணர்ச்சிகளை உள்ளத்தால் உணரலாமே யன்றி முற்றிலும் எடுத்துரைப்புதென்பது இயலாத செயல். அணி அணியாக ஆயிரம் ஆயிரம் அலைகள் எழுந்து சுருண்டு முல்லை மலர் நிகர்க்கும் வெண்ணுரை மகுடம் தாங்கிக் கரையில் மோதும் நீலக்கடலின் காம்பீரியத்தையும், விண்ணில் முட்டி வெள்ளிப் பனிமுடி சூடி அசைவில்லாத மோனத் தவத்திருக்கும் இமயப் பெருமலையின் சாந்தியையும், கோடி கோடிப் பொற்கிரணக் கைகளை நீட்டி உலகத்திலுள்ள எல்லாப் பொருள்களையும் தழுவிப் புத்துயிர் கொடுத்துத் தகதக வென்று மேலே கிளம்பும்

For more ebooks visit: https://getmyebook.in/

இளங் கதிரவனையும், வெண்மதுக் கதிர்களால் நிவவுலகைச் சொக்கி மயக்கிப் புன்னகை பூத்துத் தழைக்கும் தண்ணிலவையும், குழந்தைச் சிரிப்பினில் குழையும் இனிப்பையும், மாறாக் காதல் வெற்றியெய்துங் காலத்தில் பிறக்கும் களிப்பையும் துய்ப்பதுபோலப் பிறருக்குக் கூற முடியுமா? அடைய முடியாததை அடைந்த இன்பம்- பிரியமுடியாதவர்களைப் பிரிந்த துன்பம்- இவற்றைப் பேச முடியுமா? இன்ப வாரிதியாகிய இறைவனைக் கலந்த நிலையில் உதிக்கும் உயரின் பத்தைச் சொல்லில் சிறைப்படுத்தலாகுமா?

இவற்றையெல்லாம் கலைஞன் மற்றவர்களைவிட நுட்பமாக உணர்வதோடு தன் அற்புத வல்லமையினால் பிறருக்கும் தோன்றும்படி செய்ய முயல்கின்றான். அவனுடைய முயற்சிக்கு ஓய்வே இல்லை. ஆதிமனிதன் தன் உணர்ச்சிகளைப் பலவகையான ஒலிகளால் வெளிப்படுத்த முயன்றான்; குகைகளில் படம் வரைந்து காண்பிக்க விரும்பினான். அன்று முதல் இந்த முயற்சி நடந்துகொண்டேயிருக்கிறது. ஒவ்வொரு பெருங்கலைஞனும் ஒவ்வொரு துறையில் - அவ்வுணர்ச்சிகளை எடுத்துக்காட்ட ஆர்வங்கொள்ளுகிறான். சிற்பி கல்லிலே வடிக்கப்பாடுபடுகிறான். ஓவியன் வண்ணங்களிலே கட்டிப் பிடிக்க முயல்கிறான். இசை வாணன் நாதத்திலே எட்டிப் பிடிக்கப் பார்க்கிறான். கூத்தன் அவிநயத்திலே மின்னும்படி செய்ய முயல்கிறான். கவிஞன் சொல்லிலும் அரவவனப்பிலும் தவழுமாறு

For more ebooks visit: https://getmyebook.in/

திறமை காட்டுகிறான். இப்பெரு முயற்சியிலே கலைஞன் தன் ஆற்றலுக்கேற்றவாறு சிறிய அளவிலோ பெரிய அளவிலோ, வெற்றி பெறுகிறான். ஆனால், உள்ளத்தில் உணர்வதைப்போன்று எடுத்துக் காண்பிப்பது யாருக்கும் முழுமையாகக் கைகூடுவதில்லை. தலைசிறந்த கலைஞர்களின் கலை மந்திரக்கோலுக்குப் பிறருள்ளத்தில் உணர்ச்சிகளைத் தட்டியெழுப்பும் வல்லமை உண்டெனினும், அது கலைஞனின் சொந்த உணர்ச்சி எல்லையை அணுகும் திறனுடையதல்ல.

உணர்த்த முடியாத உணர்ச்சிகளே மற்றவர்களுக்கு உணர்த்துவதில் கலைகளெல்லாவற்றிலும் நாட்டியமே முதல் இடம் பெறுகிறது. உணர்ச்சிகளைச் சொல்லாமல் சொல்லுவது அக்கலை; மௌனமே அதன் உயிர். உள்ளத்துடிப்பை உடலுறுப்புக்களால் காட்டி, அது பிறர் உள்ளத்திலும் புகுந்து மலரும்படி செய்யப் பரதம் முயல்கிறது. அபிநயவாயிலாக உள்ளத்தோடு உள்ளம் உணர்ச்சிகளைத் தொட்டுக் கொள்கின்றது; அங்கே பேச்சிற்கு இடமில்லை.

உள்ளத்தில் எழும் அலைகளின் கொந்தளிப்பை வெளிக்காட்டுவதில் இரண்டாவதாக இசையைத் தான் சொல்லவேண்டும். ஒரு பண்ணை ஆளத்தி செய்யும்போது கேட்போரின் சித்தக் கடலிலே உணர்ச்சிகள் அலைமோதுகின்றன. இராக சஞ்சாரத்தில் ஒரு பகுதியை விஸ்தரித்து நிறுத்திவிடும் போது ஏற்படும் மோனத்திலே உணச்சிகள் மிதந்து வந்து மனத்திலே படிகின்றனே. அந்த மோனத்திலே இராகத்தின் துடிப்பு அந்தரங்கமாக

For more ebooks visit: https://getmyebook.in/

எதிரொலித்துக் கொண்டிருக்கிறது. ஆகவே இங்கும் நாட்டியக் கலையிற்கண்ட மௌனத்தின் ஆற்றலே வெளியாகின்றது.

ஓவியத்தின் குரலே மௌனம், வர்ண ஜாலங்களே உணர்ச்சிகளைப் பேசுகின்றன. ஓவியன் யாதானுமொரு உணர்ச்சியைத் தோற்றுவிக்கத் தீட்டிய காட்சி அதிற் காண முடியாத ஆழத்தையெல்லாம் மௌனக் குரலினால் நம் உள்ளத்திலே தட்டி எழுப்ப முயல்கிறது. கல்லிலும் மற்ற உலோகங்களிலும் வடித்தெடுத்த சிற்பம் அந்த மௌனத்தின் பேச்சை உள்ளத்திலே ஒலிக்குமாறு செய்ய எழுந்த கனவடிவாகும். உலகம் போற்றும் தில்லைக் கூத்தனது திருவடிவக் காட்சி அவனுடைய திருநடனத்தின் ஒரு நிலையைக் காண்பித்து மற்ற நிலைகளையெல்லாம் நமது கற்பனையிலே உருக்கொள்ளத் தூண்டி மௌனமாய் நிற்கிறது.

கவிதை என்னும் அருங்கலையிலே மேலே கூறிய மற்றக் கலைகளெல்லாம் கலந்து இணைந்திருக்கின்றன. அது சொல்லென்னும் ஒலிச் சேர்க்கையினால் நாட்டியமும் சிற்பமும் காட்டும் உணர்ச்சிக் கோலங்களையும், ஓவியத்தின் வர்ணக் கலவைகளையும் உள்ளத்திரையிலே மின்னும்படி செய்கிறது. சொல்லிலும், சொற் கூட்டத்திலும் எழுகின்ற அந்த இசை ஊற்றும் அதற்கு உறுதுணையாய் நிற்கிறது. ஆகவே முன்பே கூறியது போல உணர்ச்சிகளை முற்றிலும் எடுத்துக் காட்ட அக்கலைகளுக்குள்ள திறமையின் எல்லை இங்கும் தோற்றமளிக்கிறது. உணர்ச்சியை உணர்ந்தது

For more ebooks visit: https://getmyebook.in/

போன்றே காட்டும் ஆற்றல் கவிதைக்கும் இல்லை. அதுவும் ஓரளவு கூறி அதற்கு மேல் மௌனத்தின் வாயிலாகவே உணர்த்த வேண்டும்.

பெறுதற்கரிய சமாதி நிலையடைந்து பேரின்பம் பெற்றுத் திரும்புபவனும் அவ்வின்ப உணர்ச்சியை எடுத்துக்கூற வார்த்தை யகப்படாது ஏமாற்றமடைகிறான். அவ்வின்பத்தைத் தேடித் திரிந்தபோது குறை குடம் தளும்புவதுபோன்று என்னென்னவோ வியாக்கியானம் செய்தவன் தன் முயற்சி கைவந்த போது நிறை குடம்போல மௌனியாய்விடுகிறான். பலவிதமான உபமானங்களால் பேரின்ப உணர்ச்சிகளை விளக்க முயன்றவர்களும் முடிவிலே தங்கள் சக்திக் குறைவை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். சொல்லுகைக்கில்லாத நிலை என்றே அதைக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

ஆகவே, ஆழ்ந்த உணர்ச்சிகளை உணர்வதுபோல முற்றிலும் உணர்த்துதல் இயலாது. கலைகள் அம் முயற்சியில் பெரியதோர் வெற்றியை எய்தினாலும் அவைகளும் தாம் வெளிப்படையாகக் கூறியவற்றோடு, கூறாது மௌனமாய் உள்ளத்தின் கற்பனைக்கு விட்ட பாகத்தின் பேருதவியை எதிர் பார்த்தே இருக்கின்றன. ஓரளவிற்கு உணர்ச்சிகளை உணர்த்தலாம்; அதற்கு மேல் எல்லாம் மௌனமே. அந்த மௌனத்தின் பேச்சினிலேதான் உணர்ச்சியின் உள்ளம் பூரணமாய்த் துடித்துக்கொண்டிருக்கிறது.

For more ebooks visit: https://getmyebook.in/

# சிறுபாணாற்றுப் படை

“**எ**னக்குத் தீராத தலைவலி ஏற்பட்டிருக்கிறது. என்ன செய்வதென்றே தோன்றவில்லை” என்கிறான் ஒருவன்.

“தலைவலியா? பாலக்காட்டிலே ஒரு மருத்துவன் இருக்கிறான். அவனிடம் போனால் ஒரே நாளில் குணப்படுத்திவிடுவான். அவனைக் கண்டாலே தலை வலியெல்லாம் பறந்துவிடும்” என்கிறான் தானே அத் துன்பத்தில் உழன்று உண்மை அறிந்த மற்றொருவன்.

இவ்வாறு கூறி அவன் தலைவலியால் துன்புறுபவனே மருத்துவனிடம் வழிப்படுத்துகிறான்.

இந்த உரையாடலிலிருந்து இரண்டு கருத்துக்கள் தெளிவாகின்றன. நோய்க்கு நல்ல மருந்து கிடைக்கும் இடம் தெரிகின்றது; அந்த மருந்தை உதவிடும் மருத்துவனுடைய திறனும் புகழும் வெளியாகின்றன. இவ்வாறு தமக்குத் தெரிந்தவற்றைப் பிறருக்கு வெளிப்படுத்தும் இப் பழக்கம் மக்களிடையே இயல்பாக எங்கும் காணப்படுகிறது.

இதை அடிப்படையாகக் கொண்டு எழுந்தது ஆற்றுப்படை என்ற நூல்வகை. தீராத வறுமையாலோ அல்லது வேறு துன்பத்தாலோ துயருறும் ஒருவனே அதைத் தீர்க்கக்கூடிய ஒருவனிடம் வழிப்படுத்துவதுதான் ஆற்றுப்படை.

வறுமையால் வாடிப் பரிசில் பெறக் கருதிய ஒருவனைப் பரிசில் பெற்று வந்த வேறொருவன் தனக்கு அதையளித்த வள்ளலிடம் செல்லுமாறு

For more ebooks visit: https://getmyebook.in/

அவ்வள்ளலின் புகழையும் கொடை வளத்தையும் எடுத்துக் கூறி ஆற்றுப்படுத்துகிறான்.

பத்துப் பாட்டு என்ற சங்க இலக்கியத் தொகை நூல்களிலே ஐந்து ஆற்றுப்படைகள் சேர்க்கப்பட்டுள்ளன. அவற்றில் ஒன்று சிறுபாணாற்றுப்படை. இது ஒய்மானாட்டு நல்லியக்கோடனைப் புகழ்ந்து இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார் பாடியது. யாழ்ப்பாணர்கள் பெரும்பாணரென்றும் சிறுபாணரென்றும் இருவகைப்படுவார்கள். அவர்களில் சிறுபாணன் ஒருவனை ஆற்றுப் படுத்தியதால் இந்நூலுக்கு இப்பெயர் வந்தது போலும். ஆசிரியப் பாவால் இயற்றப்பட்டு முன்னூற்றுக்கும் குறைந்த அடிகளை உடையதால், அடிகளின் சிறுமை பற்றி இப் பெயர் வந்ததென்றும் கூறுவர்.

வள்ளன்மை மிக்க தலைவன் ஒருவனது உயர்வு தோன்றப் பாடுவதற்கு ஆற்றுப்படை என்னும் நூல்வகை சிறந்த சாதனமாக இருக்கின்றது. இதிலே அத்தலைவனை நேர்முகமாகப் புகழாது பிறனொருவனுக்குக் கூறு முகத்தாலே புகழுவது சாலச்சுவை பொருந்தியிருக்கிறது. அவ்வாறு புகழ்ந்து பேசுவதுதான் உயர்ந்த புகழ்ச்சியாகும்.

சிறுபாணாற்றுப்படையில் விரிந்துள்ள செய்தியை இனி ஆராய்வோம். ஆற்றொனா வறுமையில் ஆழ்ந்த பாணனொருவன் ஒய்மானாட்டு நல்லியக் கோடனிடம் சென்று யானையும் தேரும் மற்றப் பொருள்களும் பரிசிலாகப் பெற்றுத் திரும்புகிறான். வழியிலே அவன்

For more ebooks visit: https://getmyebook.in/

வேறொரு பாணனைச் சந்திக்கிறான். அந்தப் பாணனும் வறுமையால் வாடித் துயர் ஆற்றுப்படுத்த விறலியர் கூட்டம் சூழப் பாலை நெடு வழியில் வருந்தி வந்தான். அவனுடைய நிலையைக் கண்டு பரிசில் பெற்று வந்த பாணன், “நீ பரிசில் பெற விரும்புவாயாயின், வஞ்சியும் மதுரையும் உறந்தையும் தரும் செல்வம் வறிதென்று தோன்றும் படி, ஏழு வள்ளல்களின் வள்ளன்மையும் தான் ஒருவனே தாங்கி நிற்கும் ஒய்மானாட்டு நல்லியக் கோடனிடம் செல்லுக” என்று வழிப்படுத்துகின்றான். போகும் வழியிலே முதலில் அவனுடைய எயிற் பட்டினத்தில் மனைதோறும் மீன்சூட்டுடன் உபசரிக்கப் பெறுவாய். கேணியிற் பூத்த பூவே முருகப் பெருமானது கை வேலைப் போல வெற்றி கொடுத்த வேலூரிலே புளிங்கறியிட்ட சோறும், ஆமானிறைச்சியும் அன்புடன் வழங்கப் பெறுவாய். அந்தணர் சுருங்காத அவனது ஆமூரிலே ஞெண்டு கலந்த உணவை உழத்தியர் விருப்புடன் அளிப் பார்கள். அங்கிருந்து நல்வியக் கோடனது மூதூரர் அண்மையிலேயே உள்ளது. அவனுடைய அரிய காவலையுடைய கோபுர வாயில் பொருநருக்கும் புலவருக்கும் அந்தணருக்கும் என்றும் திறந்திருக்கின்றது. அதைக் கடந்து சென்று பல்மீன்நடுவண் பால்மதிபோன்று வீற்றிருக்கும் நல்லியக்கோடனை யணுகி, “முதியோரைவணங்கும் கையாய் "இளையோர்க்கு மலர்ந்த மார்பாய் என்றும்,” உழவருக்கு நிழல் செய்யும் செங்கோலாய் என்றும், பகை

பகைவருக்கு அழல் தரும் வேலையுடையாய் என்றும் சில மொழிகள் கூறுவதற்கு முன்பே, அவன் உனக்கு நல்ல ஆடையை அணிவிப்பான்; காண்டவ வனத்தை எரியூட்டின அருச்சுனனுக்கு முன்னவனான வீமசேனன் கண்ட மடை நூல் நெறியில் வழுவாது செய்த அடிசிலைப் பொற்கலத்திட்டு, விருப்பமொடு தானே நின்று உண்ணச் செய்வான்; அதன் பின் நிதியமும், அணிகலன்களும், தேரும், குதிரையும், பண்டியும், செலுத்தப் பாகனும் தந்து உன்னை அனுப்பி வைப்பான். அவனிடம் செல்க' என்று கூறி முடிக்கின்றான்.

பாணனுடைய உரையிலே ஓய்மாநாட்டு நல்லியக் கோடனின் வள்ளன்மை நிலைத்த புகழ் பெற்று விளங்குகிறது. மூவேந்தர்களது தலைநகர்களுக்குச் சென்றால் அங்கு கிடைக்கும் நிதியமும் வறிதென்று தோன்றும்படி, வள்ளல்கள் எழுவரின் கொடைத் தன்மையை அவன் ஒருவனே கொண்டிருப்பதாக அவன் கூறுகின்றான். மேலும் நல்லியக் கோடனே நின்று பாணருண்ணும்படி விரும்பிய உணவைத் தருவதாகக் கூறுவதிலிருந்து அவனுக்குப் புலவரிடத்துள்ள அன்பும் மரியாதையும் வெளியாகின்றன. “"நல்லியக் கோடன் செய்நன்றி அறிபவன்; சிற்றினம் சேராதவன்; இன்முகம் உடையவன்; இனியன்; அஞ்சினவர்களுக்கு அருள் செய்பவன்; வெஞ்சினம் இல்லாதவன்; பகைவர் படையிற் புகுந்து அதை உடைப்பவன்; தன் படை நிலைகுலைந்த காலத்து அதைத் தாங்குபவன்;

For more ebooks visit: https://getmyebook.in/

கருதியது முடிப்பவன்; அறிவில்லாதார் மாட்டு அறியாமை பூண்டிருப்பவன்;”

அறிவுடையோர் குழுவில் அறிவு நன்கு உடையவன்; பரிசிலருக்குத் தரமறிந்து கொடுப்பவன்; வரையாது கொடுப்பவன்' என்று இவ்வாறு கவிஞர் அவனைப் புகழ்ந்து பாடுகிறார்,

மேலும் அவர் தம் வறுமை நிலையை உள்ளத்தை உருக்கும் வகையில் திறம்பட எடுத்துரைக்கிறார், “எங்கள் வீட்டு நாய் தான் ஈன்ற கண் விழியாத இளங் குட்டிகள் முலையுண்ணுதலைப் பசி மிகுதியால் பொறுக்கமாட்டாது குரைத்துக்கொண்டு எங்கள் அடுப்பிலே படுத்திருக்கும்;” கறையான் அரித்துக் கொண்டிருப்பது எங்கள் அடுப்பு: காளான் பூத்தது எங்கள் அடுப்பு” என்று அடுப்பை வர்ணிக்கிறார் நல்லூர் நத்தத்தனார்.

திறவாக் கண்ண சாய்செவிக் குருளை
கறவாப் பான்முலை கவர்த னோனாது
புனிற்று நாய் குரைக்கும்......
காழ்சோர் முதுசுவர் கணச்சித லரித்த
பூழி பூத்த புழற் காளாம்பிப்
புல்லெனட்டில்

என்கிறார். அடுப்பிலே நெருப்பிட்டு எத்தனை நாட்களாயினவோ! என்றாவது ஒரு நாள் நெருப்பிட்டாலும் அவருக்கு உணவுப் பொருளாகக் கிடைப்பது குப்பையில் முளைத்துக் கிடக்கும் வேளைக்கீரையே யாகும். அதை உப்பின்றி

For more ebooks visit: https://getmyebook.in/

வேகவைத்து, பிறர் கண்டால் நகைப்புக் கிடமாகுமென்று அஞ்சி வாயிலடைத்துத் தம் சுற்றத்தாருடன் உண்பாராம்.

குப்பை வேளை உப்பிலி வெந்ததை
மடவோர் காட்சி நாணிக் கடையடைத்
திரும்பே ரொக்கலோ டொருங்குடன்
மிசையும்.

இரும்பேரொக்கல் என்கிறார்; சுற்றத்தாருக்குப் பஞ்சமே இல்லை; உணவுக்குத்தான் பஞ்சம்.

நிலங்களின் தன்மையையும் வனப்பையும் விரித்துரைப்பதில் கவிஞர் நத்தத்தனார் மிக வல்லவராகக் காணப்படுகின்றார். நெய்தல் நிலப் பட்டினத்தைப் பற்றிக் கூறும்போது அங்கு, "“தாழை அன்னம் பூக்கின்றது; செருந்தி தமனியம் போலிருக்கின்றது; கழி முள்ளி ஒளிவீசும் நீல மணிபோலப் பூக்கின்றது: புன்னை முத்துப்போல அரும்புகின்றது” என்று அழகாக அந்நிலத்தைப் படம் பிடித்துக் காட்டுகிறார், வேலூரிலே, “அவரை பவழம் போன்ற பூக்களைக் கொண்டிருக்கிறது. மயிலின் கழுத்தைப்போலக் காயா மலர்கின்றது; முசுண்டை கொட்டம்போல விரிகின்றது; காந்தள் கைவிரல்போல இதழ் அவிழ்கின்றது; கொல்லையில் இந்திர கோபப் பூச்சிகள் ஊர்கின்றன” என்கிறார்.

மருத நிலக் காட்சி ஒன்றை அவர் எவ்வாறு தீட்டுகிறார் என்று பார்ப்போம். தாமரையைப் பற்றிக் கூறிவிட்டால் மருத நிலத்தின் செழிப்பும் செவ்வியும் பளிச்சென்று விளங்கிவிடுமல்லவா நத்தத்தனார்

For more ebooks visit: https://getmyebook.in/

இதை நன்கு அறிந்திருக்கிறார். “நீர் நிலையில் நெடிது நேரம் காத்திருந்து, நீரின் மேல் மட்டத்திற்கு வந்த கயல் மீனை முழுகி எடுத்த, பொன்னிறம் போலும் வாயையுடைய, நீலமணிச் சிரல் பாய்வதாலே கிழிபட்ட இலைகளையுடைய தாமரை” என்று அவர் எழுதுகிறார்.

நிலை அருங் குட்டம் நோக்கி நெடிதுஇருந்து
புலவுக் கயலெடுத்த பொன்வாய் மணிச்சிரல்

வள்ளுகிர் கிழித்த வடுவாழ் பாசடை
முள்ளுடைத் தாமரை

என்ற அடிகளிலே மருத நிலத்தின் நீர் வளம் சுரந்த பேரெழில் கொப்புளித்து நம் மனக்கண் முன்பு தெளிவாக நிற்கிறது.

ஆசிரியர் நத்தத்தனார் கையாளும் உவமைகள் மிகப் பொருத்தமாயும் அழகாயும் அமைந்திருக்கின்றன. மகளிர் கூந்தலைப் பற்றிக் கூறுமிடத்து அது, மெல்லியதாய் வீழ்ந்து தாழ்கின்ற மழையைப் போலிருக்கின்றது-அது விழிகு பெயல் அழகுகொள் கதுப்பு-என்கிறார் வாழைப் பூவெனப் பொலிந்த ஒதி யென்றும், பிடிக்கை அன்ன பின்னு வீழ் என்றும் கூந்தலை வெவ்வேறு வகையாக முடிப்பதைப் பற்றிக் கூறுகிறார். இளமங்கையரின் காலின் மென்மைக்கு நாயின் நாக்கை உவமிக்கின்றார். யாழின் நரம்புக் கட்டு நெகிழ்வதும் இறுகுவதும் கருங்குரங்கின் கையில்

For more ebooks visit: https://getmyebook.in/

பிடிபட்ட பாம்பு அதன் கையைச் சுற்றி இறுகுவதையும் நெகிழ்வதையும் போன்றிருக்கின்ற தென்று சொல்லுகிறார். பைங்கண் ஊகம் பாம்பு பிடித்தன்ன, அங்கோடு செறிந்த அவிழ்ந்து வீங்கு திவவு என்பது அவர் வாக்கு. மேலும், ஒட்டகம் துயில் மடிந்தன்ன வீங்குதிரை எனவும், எரிமறிந்தன்ன நாவின் பேய் மகள் எனவும், பாம்பு வெகுண்டன்ன தேறல் எனவும் ஏற்ற உவமைகளை ஆசிரியர் பயன்படுத்துவதை நோக்க நோக்க அவருடைய கவிதைத் திறன் நன்கு புலனாகின்றது.

யாழைப் பற்றி ஆசிரியர் கூறுகின்றபோது, அமிழ்தத்தைத் தன்னிடத்தே பொதிந்து துளிக்கும் நரம்பு-அமிழ்து பொதிந்திலிற்றும் அடங்கு புரி நரம்பு- என்று எழுதுகிறார். அதனால், யாழின் சிறப்பை அவர் நன்குணர்ந்தவர் என்று தெரிகிறது.

பாடுதுறை முற்றிய பயன் தெரி கேள்வி
கூடு கொளின்னியம் குரல்குர லாக
நூனெறி மரபிற் பன்னி

என்று அவர் எழுதுவதிலிருந்து அவர் இசையறிவு வாய்ந்தவரென்பதையும் அறியலாம்.

சங்க காலப் புலவர்கள் இயற்கை அழகில் பெரிதும் ஈடுபட்ட உள்ளமுடையவர்கள். அவர்கள் கண்டு துய்த்த இயற்கைக் காட்சிகளைத் தங்கள் பாக்களில் மிக அழகாகப் பொறித்திருக்கிறார்கள். நல்லூர் நத்தத்தனாரும் இயற்கையில் திளைத்த உள்ளமுடையவர். அவர் குறிஞ்சி நிலக்

For more ebooks visit: https://getmyebook.in/

காட்சியொன்றை எவ்வாறு தீட்டுகிறார் என்பதைப் பார்ப்போம்.

மகளிர் கூந்தல்போன்ற அழகிய கலாபத்தை மஞ்சிடை விரித்து, மூங்கில் அசைந்தாடிக்கொண்டிருக்கும் மலையின் மேல் நின்று மயில் ஆடுகின்றது என்று அவர் கூறுகிறார்.

மேலும் சிறுபாணாற்றுப்படையைப் படிக்கின்ற போது அதன் சொல்லாட்சியும், சொற்றொடர்களும், பொருட் செறிவும் நமது உள்ளத்தைக் கவர்கின்றன. வயங்கிழை உலறிய அடி, வண்முகை யுடைந்து திருமுக மவிழ்ந்த தெய்வத் தாமரை, நாடா நல்லிசை, பைந் நனையவரை பவழங் கோப்ப, எயிற் கதவம் உருமுச் சுவல் சொறியும் என்பன போன்ற சொற்றொடர்களையும், அடிகளையும்படிக்குந்தோறும் படிக்குந்தோறும் தேன் ஊறுகின்றது.

செங்கழுநீர்ப் பூவைத் தின்ற பெரிய வாயையுடைய எருமையானது பசிய மிளகுக் கொடி படர்ந்த பலாமரத்தின் நிழலிலே, காட்டு மல்லிகையாகிய படுக்கையிலே, தன் முதுகை மஞ்சள் இலை மெதுவாகத் தடவத் துயில்கொள்ளும் படியான சேர நாடு என்றும், உப்பு வாணிகர் வளர்த்த மந்திகள், மகளிர் பல்போன்ற முத்துக்களைக் கிளிஞ்லிவிட்டு அதைக் கிலுகிலுப்பைபோல ஆட்டிக் கொண்டு உப்பு வாணிகரின் பிள்ளைகளுடனே விளையாடும் கொற்கை என்றும், செந்தாமரைப் பீடத்திலே தும்பி தன் துணையுடன் துயின்று, பின் சீகாமரமென்னும் பண்ணைப் பாடிக்கொண்டிருக்கும் படியான சோழ

For more ebooks visit: https://getmyebook.in/

நாடு என்றும் அவர் எழுதியிருப்பது மிக இனிமை வாய்ந்திருக்கின்றது.

மேலும், ஏழு வள்ளல்களின் கொடைப் பெருமையைச் சில அடிகளில் திறம்படக் கூறியிருப்பதும், தமிழ் வேந்தர்களைச் சொல்லாது அவர்களது மதுரை, வஞ்சி, உறந்தை என்னும் நகரங்களேயே குறித்து, ஆங்குப் பெறும் பரிசிலும் வறிதாகக் தோன்றும் என்று கூறும் சொல் நயமும் படித்து இன்புறற் பாலன.

இவ்வாறு சிறுபாணாற்றுப்படை நல்லியக் கோடனுடைய வள்ளன்மைமையும், நத்தத்தனார் கவித் திறனைமையயும் ஒருங்கே வெளியிடும் பாமணியாகத் திகழ்கின்றது.

For more ebooks visit: https://getmyebook.in/

# பாரதி வாக்கு

**த**மிழ் நாடு தூங்கிக்கொண்டிருந்தது. கும்பகர்ணனைப்போல ஒரே தூக்கம். தூக்கத்தோடு தாழ்வு மனப்பான்மையும் சேர்ந்துகொண்டது. விழித்துப் பார்த்தவர்கள்கூட நம்மால் என்ன செய்ய முடியும் என்று சோர்ந்து கிடந்தார்கள். அந்தச் சமயத்திலே பாரதியார் வந்தார். “தமிழா எழுந்து நில், உன்னுடைய அறிவு, உன்னுடைய மொழி, உன்னுடைய கலைகள்—இவற்றைப் போல உலகத்திலே எங்கும் கிடையாது” என்று தமது கவிதைக் குரலிலே முழங்கினார்.

கவிதைக்கு ஒரு அற்புதமான மந்திர சக்தியிருக்கிறது. அதன் உண்மைக் குரலைக் கேட்டவுடனே தமிழர்கள் விழித்துக் கொண்டார்கள். எங்கிருந்தோ அவர்களுக்கு ஆச்சரியமான சக்தி பிறந்துவிட்டது. நாட்டிலே ஒரு புதிய யுகத்தைத் தோற்றுவிக்க அவர்கள் முனைந்துவிட்டார்கள்.

தமிழின் மறுமலர்ச்சிக்கும் தமிழர்களின் விழிப்புக்கும் முக்கிய காரணமாக யாராவது ஒருவரைச் சொல்ல வேண்டுமானல் அவர் பாரதியார்தான். எத்தனையோ அரசியல் தலைவர்கள், தியாகிகள், எழுத்தாளர்கள், பேச்சாளர்கள் இப்பணியிலே பங்கு கொண்டிருக்கிருர்கள். ஆனால், நிலைத்த தனிச்சிறப்புக்கு உரிய ஒரு சிலருள் பாரதியார் முக்கியமாவர் என்பது என் கருத்து.

For more ebooks visit: https://getmyebook.in/

பாரதியாரின் சீரிய, எண்ணங்கள் உணர்ச்சி பொங்கும் கவிதைகள் நாட்டு விடுதலைக்கு மட்டுமல்ல, மற்ற எல்லா முன்னேற்றங்களுக்கும் உதவியாக நமக்குக் கிடைத்திருக்கின்றன. அவற்றில் பல இன்னும் நூல் வடிவிலே வெளிவராமலிருக்கின்றன. வெளி வந்தனவும் வராதனவுமான சில கருத்துக்களைத் திரட்டி இங்கே தருகின்றேன்.

பாரதியார் நேரான பார்வையை விரும்புகிறார். கோணல் பார்வை, சாய்ந்த தந்திரப் பார்வை அவருக்குப் பிடிக்காது. அவருடைய படத்தையே பாருங்கள். கண்கள் நம்மை ஊடுருவிப் பாய்வன போல ஒளிர்கின்றன. பெண்களுக்கும் நிமிர்ந்த பார்வையும் நேர்கொண்ட நன்னடையும் வேண்டுமென்பவர் அவர்.

மேலும் அவர் சொல்லுகிறார்:—

“சாமான்ய ஜனங்கள் கண்ணை முழுவதும் விழித்துப் பார்க்காமல் அரைப்பார்வையும் கோணற் பார்வையும் பார்க்கும்படி செய்கிற அஞ்ஞானத்தையும் பயத்தையும் பழிக்கிறேன்”

> **“பொய் இல்லாவிட்டால் பார்வை நேராகும்—கவனி!**
> **பொய் தீர்ந்தால் நேரே பார்க்கலாம்.**
> **பயம் தீர்ந்தால் நேரே பார்க்கலாம்—கவனி!**
> **பொய் தீர்ந்தால் பயம் தீரும்.**
> **பயம் தீர்ந்தால் பொய் தீரும்”**

For more ebooks visit: https://getmyebook.in/

என்று அவர் முழங்குகிறார்.

நம் நாட்டிலே யந்திரத் தொழில் விருத்தியாக வேண்டுமென்பது பாரதியார் விருப்பம்.

"இரும்பைக் காய்ச்சி உருக்கிடுவீரே
யந்திரங்கள் வகுத்திடுவீரே"

என ஏவுகின்றார். ஆனால், அதே சமயத்தில் யந்திரத் தொழிலினால் மனிதனுக்கு ஏற்படும் தீங்கையும் எடுத்துக் கூறி எச்சரிக்கை செய்திருக்கிறார்,

"யந்திரத் தொழிற்சாலைகள் மனிதரை மிருகங்களுக்குச் சமானமாகச் செய்துவிடுகின்றன. காலை முதல் மாலை வரை ஒருவன் ஒரு மனையின் மேலிருந்துத கொண்டு, நரக வாதனை போன்ற தீராத யந்திரச் சத்தத்தினிடையே, யந்திரத்திற்குள் கொஞ்சங் கொஞ்சமாகப் பஞ்சை நுழைத்துக்கொண்டிருந்து விட்டு சாயங்காலம் வீட்டிற்கு வந்தவுடன் குடித்து மதிமயங்கிக் கிடந்து மறுநாள் காலை பொழுது விடியுமுன்னே மறுபடி பஞ்சு போடப் போய்விடுகிறான். இவன் தன்னுடைய அறிவை விசாலப்படுத்தவும், தியானம் பூஜை முதலிய தெய்வ காரியங்கள் செய்யவும் நேரமெங்கே?

எப்போதும் இடைவிடாமல் அவன் காதில் யந்திரத்தின் பேய்க் கூச்சலும் கண்முன் இரும்பும் பஞ்சும் மாறாமல் இருப்பதால், அந்த மனிதன் நாளடைவில் மனிதத் தன்மை மாறித் தானும் ஒரு இரும்பு யந்திரம் போலாய்விடுகிறான்.”

For more ebooks visit: https://getmyebook.in/

யந்திரத் தொழிலில் இன்றுள்ள குறைகளை நீக்கி அதை வளர்க்க வேண்டுமென்பதே அவர் கருத்து. நம் நாட்டுச் செல்வவந்தர்களுக்கும் மடாதிபதிகளுக்கும் 1917-ஆம் ஆண்டில் பாரதியார் ஒருவேண்டு கோள் விடுத்திருக்கிறார். அது இன்று பன்மடங்கு அவசியமாக இருக்கின்றது. அந்த வேண்டுகோளே நிறைவேற்ற அனைவரும் முன் வந்தால் உலகத்துக்கு தன்மையுண்டாகும்; மக்கட் கூட்டத்திற்கு நன்மையுண்டாகும். அவர் கூறுவதாவது: “இவ்வுலகத்திலே நாம் செய்கிற ஒவ்வொரு செய்கையையும் ஸ்வப் பிரயோஜனத்தைக் கருதாமல் லோகோபகாரத்தை முன்னிட்டுக்கொண்டு செய்யவேண்டும். தீராத ஆவலும், அவசரமும், ஓயாத பரபரப்பும் உள்ள ஜ்வர வாழ்க்கை நாகரிகமாகமாட்டாது. சரியான நாகரிகத்துக்குச் சாந்தியே ஆதாரம், யந்திரப் பீரங்கிகளும் சப்மரீன்களும் நாகரிகத்து அடையாளமல்ல. நிலக்கரிச் சுரங்கங்களும் ஆகாச வெடி குண்டுகளும் அபிவிருத்திக்கு லக்ஷணமல்ல. அவை மனுஷ்யனுக்குப் பலமல்ல, துணையல்ல. அவை மனிதனுக்குப் பகை. மனிதனையும் அவனுடைய நாகரிகத்தையும் அழிக்கும் குணமுடையன.

கர்வத்தினாலே மரணமுண்டாகும். அடக்கம், பொறுமை, ஜீவகாருண்யம் என்ற குணங்களே உண்மையான நாகரிகத்தையும் நித்திய ஜீவனையும் விளைவிக்கும். இப்படி நூற்றுக்கணக்கான ஹிந்து தர்மக் கொள்கைகளை நாம் உலகத்தார் கேட்க முழங்குவதற்கு இதுவே நல்ல தருணம். இந்தச்

For more ebooks visit: https://getmyebook.in/

சமயத்தில் மனித சமூகம் அழிந்து போகாமல் அதைக் காப்பாற்றி நல்ல வழியிலே சேர்க்கக்கூடிய ஜாதியார் நம்மைத் தவிர வேறு யாரும் இல்லை.” இவ்விஷயத்தை ஆழ்ந்து எண்ணிப் பார்த்து வெளி நாடுகளுக்கு நூற்றுக்கணக்காக சொற்பொழிவாளர்களே அனுப்பும்படி அவர் கேட்டுக்கொள்ளுகிறார்.

தமிழ் நாட்டிலே இசையைப்பற்றி ஒரு பெரிய விவாதம் நடக்கிறது. பாரதியார் இது சம்பந்தமாகத் நமது கருத்தை முன்பே வெளியிட்டிருக்கிறார்.

“பூர்விக மஹான்களுடைய பாட்டுகளை மறந்து போய்விடவேண்டும் என்பது என்னுடைய கட்சியன்று. அவற்றை அர்த்தத்துடன் பாடவேண்டும். பதங்களைப் பிழையாக உச்சரிக்கக் கூடாது. பதங்களை வாய்விட்டுத் தெளிவாகச் சொல்லவேண்டும். விழுங்கிவிடக்கூடாது. பத்து முப்பது கீர்த்தனங்களையே ஓயாமற் பாடி சங்கீதத்தை ஒரு தொல்லையாகச் செய்துவிடக் கூடாது.

“வித்வான்கள் பழைய கீர்த்தனங்களையே பாடம் பண்ணிப் புராதன வழிகளைத் தெரிந்து கொள்ளுதல் அவசியம். ஆனால், தமிழ்ச் சபைகளிலே எப்போதும் அர்த்தம் தெரியாத பிற பாஷைகளில் பழம் பாட்டுக்களை மீட்டும் மீட்டும் சொல்லுதல் நியாயமில்லை. அதனால் நமது ஜாதி சங்கீத ஞானத்தை இழந்துபோகும்படி நேரிடும்.”

மனித சமூகத்தின் நன்மைக்காகச் சாஸ்திரங்கள் ஏற்பட்டன. அவை காலத்திற்குத் தக்கபடி மாறும். ஒரு காலத்தில் நன்மை பயந்த ஒரு சாஸ்திர விதி

For more ebooks visit: https://getmyebook.in/

மற்றெந்தக் காலத்திலும் நன்மை பயக்குமென்பதில்லை. ஆதலால், காலத்தை அனுசரித்து அதை மாற்றிக்கொள்ள வேண்டுமென்று பாரதியார் உபதேசம் செய்கிறார்.

'சாஸ்திரம் மனிதனால் எழுதப்பட்டது. ஆதலால், இன்னும் நிறைவு பெறவில்லை. தெய்விக விதிகளைக் கூடியவரை பின்பற்றியே சாஸ்திரக் காரர்கள் எழுத முயற்சி செய்திருக்கிறார்கள். ஆனால், கால தேச வர்த்தமானங்கள் மாறுபடுகின்றன. தெய்வ விதிகளைப்பற்றிய புதிய வித்தைகள் வழங்கப்படுகின்றன. அப்போது சாஸ்திர விதிகளை மாற்றுதல் அவசியமாகிறது.

தர்ம சாஸ்திரத்தை எடுங்கள்: பஞ்சபாண்டவர் காலத்தில் ஒரு ஸ்தீரீ பல புருஷர்களை விவாகம் செய்து கொள்ளலாம். வேதவியாசர் காலத்தில் தமையன் பிள்ளையில்லாமல் இறந்து போனால் தம்பி அவனுக்குச் சந்ததி ஏற்படுத்திக் கொடுக்கலாம்.

"சாஸ்திரங்களை யெல்லாம் காலத்துக்குத் தகுந்த படி மாற்றிக்கொண்டு போகிறோம்." காலத்திற் கேற்றபடி மாறுதல்கள் ஏற்படாத சமூகம் அழிந்து போகுமென்று பாரதியார் எச்சரிக்கை செய்கிறார்,

"நமது ஜன சமூகத்தில் மாறுதல்கள் நடக்க வேண்டும். மாறுதலே உயிர்த் திறமையின் முதற் குறியாகும். மேன்மேலும் சௌகரியத்தை விரும்பித் தானகவே புதிய புதிய மாறுதல்கள் செய்து கொள்ளாத ஜந்துவை இயற்கைத் தெய்வம் வலிய வந்து கீழ் நிலைமைக்கு மாற்றுகிறது. புராதன ஆசாரங்களில் நல்லதைக் கடைப்பிடித்துக் கெட்டதை நீக்கிவிட

For more ebooks visit: https://getmyebook.in/

வேண்டும். புராண மித்யேவ நஸாது ஸர்வம். பழமை என்ற ஒரே காரணத்தால் எல்லாம் நல்லதாய்விட்டது." லோகோபகாரம் செய்யவேண்டும் என்பதையும் அதனால் சிறந்த பயனுண்டு என்பதையும் பாரதியார் எடுத்துக் காட்டியிருக்கிறார், லோகோபகாரத்தையே பரிபூரணமாகச் செய்வோன் மனித நிலை கடந்து அமர நிலை பெறுவான் என்கிறார் அவர்.

தெய்வம் உண்டு. நலம் செய்வோன் எவனும் கெட்ட வழி சேரமாட்டான் என்று கீதை சொல்லுகிறது. அவனுக்குக் கெடுதி நேரிடாதபடி அவனுடைய யோகக்ஷேமத்தைத் தான் சுமப்பதாகத் தெய்வம் வாக்களித்திருக்கிறது. ஆனால், ஆரம்பத்திலே சோதனைகள் நேரிடும். மனந்தளராமல் லோகோபகாரம் செய்துகொண்டே போனால் பிறகு, சோதனைகள் நின்றுபோய் நன்மை உதயமாகும். லோகோபகாரத்தின் ஆரம்பத்தில் மனத்தளர்ச்சி ஏற்படுவது சகஜம்.

"ஏதடா இது, தெய்வத்தை நம்பி, தெய்வம் கர்த்தா, நாம் கருவியென்று நிச்சயித்து மற்றவர்களுக்கு நன்மை செய்யப்போன இடத்தில் நமக்குத் தீமை உண்டாகிறதே, கிணறு வெட்டப்போன இடத்தில் பூதம் புறப்படுகிறதே, உலகத்தைக் கிளி என்று நினைத்து அதன் பசி தீரப் பால் வார்க்கும்படி போனால் அது கழுகாக மாறி நம்மைக் கொத்துகிறதே என்று திகைத்துப்போய் மனிதன் லோகோபகாரத்தைக் கைவிடக் கருதுதல் சாமான்யம். இது தவறு. தெய்வம் நமக்குத் தகுதி ஏறும் பொருட்டாக நம்மைச் சோதனை

For more ebooks visit: https://getmyebook.in/

செய்கிறது. உள்ளம் பதறாதிருந்தால் விரைவில் வானந் தெளியும்.” எல்லா மனிதர்களும் சமமென்ற கொள்கையைச் சமூக வாழ்க்கையில் நிறுவும்வரை மானிடருள்ளே இகல், பொறாமை, வஞ்சனை, போர் முதலியவை நீங்கமாட்டா என்கிறார் பாரதியார்.

உலகத்தில் இன்பம் நிலைக்கும் நெறியை இந்தியாவே நிலைநாட்ட முடியும் என்பது பாரதியாருடைய நம்பிக்கை. காந்தி மகானுடைய கொள்கைகளே பாரதமாதாவின் உபதேசம் என்றும், அவற்றாலேயே உலகத்திற்கு உய்வு ஏற்படும் என்றும் குறிப்பாகக் காட்டும் பாட்டு ஒன்றைப் பாரதியார் ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்த்துத் தந்திருக்கிறார். அதில் ஒரு பகுதி வருமாறு :

வருக காந்தி, ஆசியா வாழ்வே,
தரும விதிதான் தழைத்திட உழைப்பாய்,
ஆன்மா அதனால் ஜீவனை யாண்டு
மேனெறிப் படுத்தும் விதத்தினை யருளினாய்,
பாரதநாட்டின் பழம்பெருங் கடவுளர்
வீரவான் கொடியை விரித்து நீ நிறுத்தினாய்
மானுடர் தம்மை வருத்திடும் தடைகள்
ஆனவையுருகி அழிந்திடும் வண்ணம்
உளத்தினில் நீகனல் உறுத்துவாய் எங்கள்
காந்தி மஹாத்மா, நின்பாற் கண்டனம்
மாந்தருட் காணநாம் விரும்பிய மனிதனை
நின்வாய்ச் சொல்லில் நீதிசேர் அன்னை

For more ebooks visit: https://getmyebook.in/

தன்வாய்ச் சொல்லினைக் கேட்கின்றனம் யாம்
தொழுந்தா யழைப்பிற் கிணங்கி வந்தோம் யாம்
எழுந்தோம், காந்திக் கீந்தோம் எமதுயிர்.

இவ்வாறு பாரதியாருடைய வாக்கினில் நாம் போற்றி மனத்திற் கொள்ளவேண்டிய உயர்ந்த கருத்துக்கள் பல இருக்கின்றன. அவற்றையெல்லாம் அறிந்துகொள்வது முன்னேற்றத்திற்கு உதவியாக இருக்கும்.

For more ebooks visit: https://getmyebook.in/

# புகழ முடியுமா?

**க**விதைக்கு ஏதோ ஒரு தனிப்பட்ட ஆற்றல் இருக்கிறது. அது என்னென்னவோ சாதிக்க முடியாதனவற்றை யெல்லாம் சாதித்து விடுகிறது. ஒரு இரண்டு மணிநேரம் சொற்பொழிவு நிகழ்த்திக்கூடக் கேட்பவர் உள்ளத்திலே கருத்தை நன்றாகப் பதிய வைக்கவோ, தெளிவாக்கவோ முடிகிறதில்லை. அந்தக் காரியத்தை ஒன்றிரண்டு வரிகளில் கவிதை மிக நல்ல முறையில் செய்து விடுகிறது. ஒரு சமயம் இங்கிலாந்திலே ஒரு கட்டுரைப் போட்டி நடந்தது. கிறிஸ்து நாதர் தண்ணிரைத் திராட்சைரச மதுவாக மாற்றியளித்த கதையைப் பொருளாகக்கொண்டு கட்டுரை எழுத வேண்டுமென்று ஏற்பாடு. பலர் போட்டியிற் கலந்துகொண்டார்கள். ஜான் பணியன் என்ற புகழ் வாய்ந்த எழுத்தாளர் அப்பொழுது சிறுவராக இருந்தார். அவரும் இதில் கலந்துகொண்டார். எல்லோரும் நீள நினைந்து, பக்கம் பக்கமாக வரைந்து தள்ளினார்கள். ஆனால், பனியன் மட்டும் ஒன்றுமே எழுதாமல் ஏதோ எண்ணமிட்டுக்கொண்டிருந்தார். கடைசி வரையிலும் ஒரு எழுத்துக்கூடத் தாளில் பதிவாகவில்லை. இன்னும் இரண்டு நிமிஷம்தான் உண்டு; அதற்கு மேலே யாரும் எழுதக் கூடாது ' என்று அறிவித்தார்கள். அப்பொழுதுதான் அவருக்கு எழுத வேண்டுமென்று தோன்றியது. உடனே, "தண்ணீர் தனது நாதனைக் கண்டு நாணத்தால் சிவந்தது ”

For more ebooks visit: https://getmyebook.in/

(Water saw its Lord and blushed) என்றுஒரு கவிதை வரியைத் தாளிலே பொறித்துக்கொடுத்தார். அவருக்குத்தான் பரிசு கிடைத்தது. அந்தக் கவிதை வரிஎத்தனையோ செய்திகளை, உணர்ச்சிகளைச் சொல்லாமற் சொல்லிவிட்டது. நம்முள்ளத்திலே அவை யெல்லாம் உயிர்த்தெழுந்து நிறைகின்றன. அந்த வரியை நினைக்க நினைக்கக் கருத்தும் உணர்ச்சியும் பெருகுகின்றன. அதனால்தான் கவிதைக்கு நாம் அத்தனை உயர்வு கொடுக்கிறோம்.

வயல் வளம் மிகுந்த மருத நிலத்திற்கு ஒரு தனிப் பட்ட அழகிருக்கிறது. "தண்டலை மயில்களாட " என்று தொடங்கும் ஒரு பாட்டிலேயே அதன் வனப்பைக் கம்பன் நமக்குக் காட்டிவிடுகிறான். பழங் காலத்துப் புலவனொருவன் இதே இயற்கைக் காட்சியை எப்படி நமக்குப் படம் பிடித்துக் காட்டுகிறானென்று இப்பொழுது பார்ப்போம்.

புலவன் பாட வந்தது ஒருவனுடைய வள்ளன்மையைப்பற்றி. அவன் எப்படிப்பட்டவன் என்றால் புகழ முடியாத அவ்வளவு பெரிய கொடைத் திறம் உடையவன். அவனுக்குச் சொந்தமானது கழனிகள் சூழ்ந்த ஓர் ஊர். ஆதலால், கவிஞன் அவனுடைய செழுமை மிக்க கழனியூரை வருணித்து அதன் வழியாக அவனுடைய புகழ முடியாத வள்ளன்மையைப் பற்றிக் குறிப்பாக எடுத்துக் காட்டுகிறான்.

நன்றாகக் கொழுத்து மதமேறி யிருக்கும் எருமையினுடைய கண்கள் சிவந்து தோன்றும், அப்படிப்பட்ட எருமையொன்று ஒரு கரும்பு வயலிலே

For more ebooks visit: https://getmyebook.in/

புகுந்தது. வளம் சுரந்து கிடந்ததால் யாருமே அதை வயலைவிட்டு விரட்டி ஒட்டவில்லை. அது தன்னிச்சையாகக் கரும்புப் பயிர்களினிடையே சென்று அவற்றை ஒரு கலக்குக் கலக்கிற்று. பிறகு அங்கிருந்து வெளிப்போந்து ஒரு தடாகத்தினுள்ளே பாய்ந்தது. அங்கே குவளை மலர்கள் ஏராளமாக மலர்ந்திருந்தன. அவற்றை வேண்டியமட்டும் அருந்திற்று. கரும்பின் சுவை, குவளையின் சுவை எல்லாம் பார்த்தாகிவிட்டது. தடாகத்தில் நீராடியும் முடிந்தது. பிறகு ஒரு காஞ்சி மரச் சோலையில் நுழைந்து நல்ல நிழலிலே படுத்துக் கவலையின்றித் தூங்கத் தொடங்கிற்று. இப்படிப்பட்ட செழிப்பு மிக்க கழனி சூழ்ந்த ஊரை உடையவனாம் அந்த வள்ளல். பாட்டைப் பார்க்கலாம்.

செங்கண்மேதி கரும்புழக்கி
அங்கண் நீலத் தலர் அருந்தி
பொழிற்காஞ்சி நிழல்துயிலும்
செழுநீர்,
நல்வயற் கழனியூரன்
புகழ்தல் ஆனாப் பெருவண்மையனே.

மேதி-எருமை. உழக்கி-மிதித்து. அங்கண்நிலத்தலர்-அழகியகண்போன்ற குவளைமலர். ஆனா-அடங்காத.

இது ஒரு பழம் பாடல். வஞ்சிப்பா என்ற வகையைச் சேர்ந்தது. ஆசிரியப்பா, வெண்பா ஆகிய இரண்டும் இக்காலத்திலும்கூட யாப்பு வழக்கில் இருக்கின்றன. கலிப்பா எப்பொழுதாவது அரிதாகப் புலவர்களின் முயற்சியால் உண்டாகிறது. ஆனால், வஞ்சிப்பர

For more ebooks visit: https://getmyebook.in/

பெரும்பாலும் மறைந்து விட்டது என்று கூறலாம். இந்த யாப்பு வகை இன்று யாரையும் கவருவதாகத் தெரிவதில்லை. மேலே எடுத்துக் காட்டிய பாடல் மிகச் சிறந்த வஞ்சிப்பாவாக அமைந்திருக்கிறது. கம்பன் பாட்டிலே உள்ள உருவகம் ஒன்றும் இதிற் கிடையாது. செழுமை மிக்க மருத நிலத்தில் சாதாரணமாக நடக்கக்கூடிய ஒரு செயலே இப்பாட்டு யாதொரு வகையான அணியுமின்றிச் சொல்லுகிறது.

அதனுடைய விளைவுதான் என்ன? பச்சைப்பசேலென்று பரந்த வயலிடமும், அதில் ஆங்காங்கு கரும்பின் தோற்றமும், தடாகங்களின் மிளிர்வும், மரஞ் செறிந்த சோலைகளின் கரும்பசுமையும் நம் கண் முன்பு பளிச்சென்று தோன்றுகின்றன. கைதேர்ந்த ஒவியன் ஒருவன் துTரிகையை எடுத்து வண்ணத்தில் தோய்த்து இரண்டு மூன்று வீச்சிலே ஒரு இயற்கைக் காட்சியை நம் கண் முன்பு நிறுத்தி விடுவது போல இந்தக் கவிஞன் செய்து விடுகிறான். அந்த ஒவியன் செய்ய முடியாத இன்னும் பல காரியங்களையும் இவன் செய்து விடுகிறான் என்பதையும் உணரும்போது நமது இன்பம் மேலும் பெருகுகின்றது.

எருமை மாட்டிற்கே அந்த வள்ளலின் ஊரிலே இத்தனை சுகங் கிடைக்கும்போது அழகிய கவிதைகளே உண்டாக்கும் கவிஞனுக்குச் சிறப்புக் கிடைப்பதைப் பற்றி ஐயப்பட வேண்டியதே இல்லை. அதுவும் பாட்டிலே தொனிக்கின்றது.

For more ebooks visit: https://getmyebook.in/

★

# பெ. தூரன் இயற்றிய நூல்கள்

**கவிதை**
இளந்தமிழா
மின்னல் பூ
நிலாப் பிஞ்சு
பட்டிப் பறவைகள்

**சிறுகதை**
பிள்ளை வரம்
உரிமைப் பெண்
காளிங்கராயன்
கொடை
தங்கச் சங்கிலி
மாவிளக்கு

**கட்டுரை**
பூவின் சிரிப்பு
காட்டு வழிதனிலே
தேன் சிட்டு

**நாடகம்**
காதலும்
கடமையும்
சூழ்ச்சி

**உளவியல்**
மனமெனும்
மாயக் குரங்கு
குமரப் பருவம்
அடி மனம்
தாழ்வு
மனப்பான்மை
குழந்தை உள்ளம்
பாரம்பரியம்

**சிறுவர் இலக்கியம்**
நிலாப் பாட்டி
ஆனையும்
பூனையும்
ஜிம்மி

For more ebooks visit: https://getmyebook.in/

மனக் குகை
ஆதி அத்தி
அழகு மயக்கம்
பொன்னியின்
தியாகம்
பறக்கும் மனிதன்
ஓலைக் கிளி

**பிற நூல்கள்**

கருவில் வளரும்
குழந்தை
பாரதி தமிழ்
காற்றில் வந்த
கவிதை

Jacket Printed at New Art Press, Madras-4.

For more ebooks visit: https://getmyebook.in/

# இந்த மின்னூலைப் பற்றி

உங்களுக்கு இம்மின்னூல், இணைய நூலகமான, விக்கிமூலத்தில் இருந்து கிடைத்துள்ளது[1].

இந்த இணைய நூலகம் தன்னார்வலர்களால் வளருகிறது. விக்கிமூலம் பதிய தன்னார்வலர்களை வரவேற்கிறது. தாங்களும் விக்கிமூலத்தில் இணைந்து மேலும் பல மின்னூல்களை அனைவரும் படிக்குமாறு செய்யலாம்.

மிகுந்த அக்கறையுடன் மெய்ப்பு செய்தாலும், மின்னூலில் பிழை ஏதேனும் இருந்தால் தயக்கம் இல்லாமல், விக்கிமூலத்தில் இம்மின்னூலின் பேச்சு பக்கத்தில் தெரிவிக்கலாம் அல்லது பிழைகளை நீங்களே கூட சரி செய்யலாம்.

இப்படைப்பாக்கம், கட்டற்ற உரிமங்களோடு (பொதுகள /குனு -Commons /GNU FDL )[2][3] இலவசமாக அளிக்கப்படுகிறது. எனவே, இந்த உரையை நீங்கள் மற்றவரோடு பகிரலாம்; மாற்றி மேம்படுத்தலாம்; வணிக நோக்கத்தோடும், வணிக நோக்கமின்றியும் பயன்படுத்தலாம்

இம்மின்னூல் சாத்தியமாவதற்கு பங்களித்தவர்கள் பின்வருமாறு:

For more ebooks visit: https://getmyebook.in/

- Smiling Saranya
- Fathima Shaila
- Gladys jaba
- Balu1967
- Balajijagadesh
- KSK TRY
- FarithabanuH
- TVA ARUN
- Arunankapilan
- Arularasan. G
- Tnse anita cbe
- Info-farmer
- TI Buhari
- Joshua-timothy-J
- HoboJones
- Fleshgrinder
- Be..anyone
- Patricknoddy~commonswiki
- Rocket000
- Xato
- Mecredis

---

1. ↑ http://ta.wikisource.org
2. ↑ http://creativecommons.org/licenses/by-sa/3.0/
3. ↑ http://www.gnu.org/copyleft/fdl.html

For more ebooks visit: https://getmyebook.in/